கல்கி

KALKI 30.12.90
ரூ. 2.50



உலகையே இணைக்கும் தெருமுனை டெலிபோன்கள்

இந்திரா பார்த்தசாரதி
எழுதும்

ஆகாசத் தாமரை

புதுமைத் தொடர் கதை

கல்கி 13.1.91



சுற்றுலாச் சிறப்பிதழ்

- பஞ்ச்கனி: மலைகள் தாலாட்டும் சிற்றூர்
- பக்கத்தில் இருந்தும் பட்டினம் பாராதவர்!
- காணும் பொங்கலின் நதிமூலம் என்ன?
- சுற்றுலா ஆண்டின் சோகங்கள்!
- ஜல்லிக்கட்டு — வீரமா? குரூரமா? — விவாதம்
- ஊர் சுற்றும் சினிமா யூனிட்
- சுற்றுலா குவிஸ் — ரூ. 250 பரிசுப் போட்டி
- லண்டன் அனுபவங்கள்

இலவச இணைப்பு:

வண்ணத்தில்

பொங்கல் வாழ்த்து அட்டைகள்

தங்கவயல் தமிழர்களின் கண்ணீர்க் கதை



* பாஸ்டின்: "தொழில் நுட்பம் தெரியலையே!'



* சுந்தரமூர்த்தி: உயிருடன் இருக்கிறாரா?



* குழந்தைகளுடன் சலோமி.

"நஷ்டம்" என்று சொல்லி, கோலார் தங்கச் சுரங்கத்தைப் படிப்படியாக மூடி விடுவதென்று மத்திய அரசு முடிவெடுத்திருக்கிறது. அதனால், அதில் வேலை பார்க்கும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்த் தொழிலாளர்களின் குடும்பங்கள் நிர்க்கதியாகும் நிலை. உண்மையிலேயே தங்கச் சுரங்கத்தில் நஷ்டம்தானா?

"**கோ**லார் தங்கச் சுரங்கத்தில் கடந்த 89-90 ஆம் ஆண்டில் மட்டும் 36.37 கோடி ரூபாய் நஷ்டம். மார்க்கெட் நிலவரப்படி பத்து கிராம் தங்கத்தின் விலை சுமார் நான்காயிரம் ரூபாய் என்று வைத்துக் கொண்டால், அதே பத்து கிராம் தங்கத்தைக் கோலார் தங்கச் சுரங்கத்தில் தோண்டியெடுப்பதற்காகச் சுமார் ஏழாயிரம் ரூபாய் செலவாகிறது. இந்த நிலையில் அரசு என்ன செய்ய முடியும்?'' என்று கேட்கிறார் கோலார் தங்கச் சுரங்கத்தின் சீப் பர்சோனல் மானேஜர் சென்னமாலிகை.

''இப்படி ஏற்படுகிற நஷ்டத்தை ஓரளவுக்காவது குறைக்க வேண்டும் என்பதற்காகத்தான் தங்கச் சுரங்க நிர்வாகம், வெளி மாநிலங்களிலிருக்கும் மற்ற சுரங்க வேலைகளைக் காண்ட்ராக்ட் எடுத்து அங்கே வேலை செய்ய இங்குள்ள தொழிலாளர்கள் சிலரைப் பிரித்து அனுப்பிக் கொண்டிருக்கிறது'' என்கிறார் சென்னமாலிகை.

ஏராளமான செலவுகளுக்கு என்ன காரணம்?

"இங்குள்ள தங்கச் சுரங்கத்தின் ஆழம் பத்தாயிரம் அடிகளுக்கு மேல் செல்கிறது. ஆழம் செல்லச் செல்ல வெப்ப நிலை அதிகரித்துக் கொண்டே போகும். வெப்ப நிலையைக் குறைத்தால்தான் வேலை செய்ய முடியும் என்பதால், வெளியில் ஏர் கூலிங் பிளாண்ட் அமைத்து குளிர்ந்த காற்றைச் சுரங்கத்துக்குள் செலுத்த வேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் ஏராளமான பொருட் செலவு. இவற்றோடு சுரங்கத்திலிருந்து தோண்டியெடுக்கப்படும் பாறைகளிலிருந்து தங்கத்தைப் பிரித்தெடுக்கும் இயந்திரங்களும் மிகவும் பழைமையானவை என்பதால், பிரித்தெடுக்கும் போது ஒவ்வொரு டன் எடையுள்ள பாறைகளிலிருந்தும் சுமார் 0.5 கிராம் எடையுள்ள தங்கம் பிரிக்கப்படாமலேயே வீணாகி விடுகிறது.

"இந்த நிலையில் நவீன உபகரணங்களைப் பயன்படுத்தலாமே என்று சொல்லலாம். பயன்படுத்தலாம்தான். ஆனால் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்படும் நவீன இயந்திரங்கள் பற்றிய முழுமையான தொழில் நுட்பங்களை அவர்கள் நமக்குச் சொல்லித் தருவதேயில்லை. அதனால் எந்தவொரு சின்ன ரிப்பேரானாலும் சம்பந்தப்பட்ட நாடுகளிலிருந்தே நிபுணர்களை நாம் வரவழைக்க வேண்டியிருக்கிறது. இவற்றையெல்லாம் கணக்கிட்டுப் பார்க்கும் போது கோலார் தங்கச் சுரங்கத்தில் நஷ்டமேற்படுவதைத் தவிர்க்க இயலாததாகி விடுகிறது...." என்கிறார் அங்கு உதவி மானேஜராக இருந்து அண்மையில் ஓய்வு பெற்ற பாஸ்டின்.

"வெளிநாட்டுத் தொழில் நுட்ப அனுபவம் பற்றி உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன்...." என்ற பாஸ்டின் தொடர்ந்து சொன்னார். "தங்கத்திற்காகத் தோண்டியெடுக்கப்படும் பாறைகளில் வேறு ஒரு வகைத் தாதுவும் கலந்திருக்கிறது. அதிலிருந்து மின்சாரபல்புகளுக்கான டங்ஸ்டன் போன்ற இழைகளைத் தயாரிக்கலாம். அமெரிக்காவில் நடந்த ஒரு கருத்தரங்கத்தில் விவரமறிந்து வந்து நமது கோலார் தங்க வயலிலும் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் நம்மால் தரமான இழைகளைத் தயாரிக்க முடியவில்லை. காரணம், அதற்கான முழுமையான தொழில் நுட்பம் நம்மிடம் இல்லை. நாம் என்னதான் வெளிநாடுகளுக்குச் சென்று அவர்களோடு பழகினாலும் முக்கியமான நுட்பங்களை அவர்கள் சொல்லித்தருவதேயில்லை."

காரணம். இந்த ஆய்வுகளைச் செய்ய அவர்கள் ஏராளமாகச் செலவழித்திருக்கிறார்கள். அந்தப் பணத்தைத் திரும்பப் பெறவே பார்ப்பார்கள். எனவே முழுமையான தொழில் நுணுக்கங்களை அல்லது நவீன உபகரணங்கள் பற்றிய முழுமையான நுட்பங்களை அவர்கள் நமக்குக் கற்றுத் தரமாட்டார்கள். அவர்களையே இங்கு வந்து தொழில் தொடங்கச் சொன்னால் செய்வார்கள். அல்லது ராயல்டி தொகை அளித்து தொழில் நுணுக்கம் பெற வேண்டும். இதற்கெல்லாம் ஒப்பந்தங்கள் செய்ய வேணடும். ஆனால் நமது தொழில் பொருளாதாரக் கொள்கைகள் இதற்கு உதவுவதாக இல்லை.

நஷ்டத்துக்கான காரணங்கள் பற்றி, நிர்வாகத்தரப்பில் எத்தனை சமாதானங்கள் சொன்னாலும் அதைக் கோலார் தங்க



* பக்தவத்சலம்: "பந்த் நடத்திப் பார்த்தோம்..."

* பத்தாயிரம் அடிக்கு மேல் ஆழமான சுரங்கத்திலிருந்து வெளிவரும் தொழிலாளர்கள்.



* சென்னமாலிகை: நஷ்டக் கணக்கைச் சொல்கிறார்...



* அந்தோணி மதலை சாமி: "கேளுங்கள் துயரக் கதையை..."



வயலிலுள்ளவர்கள் ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. "எல்லாம் சரி, முன்பு கோலார் தங்கச் சுரங்கத்தின் டெக்னிகல் டைரக்டராக இருந்த எஸ். நடராஜன் கொடுத்த அறிக்கை பற்றி நிர்வாகம் மௌனம் சாதிப்பது ஏன்?" என்று கேட்கிறார்கள் தொழிலாளர்கள்.

"மிகுந்த ஆழத்தில் சென்று தங்கம் தோண்டுவதால் செலவு அதிகம். அதனால் நஷ்டம் என்கிறார்கள் நிர்வாகத்தினர். ஆனால், 1880 இல் இங்கிலாந்தைச் சேர்ந்த ஜான் டெய்லர் என்பவர் எப்படி கோலாரில் மிகக் குறைந்த ஆழத்திலேயே தங்கத்தைத் தோண்டி எடுத்தாரோ, அப்படி இப்போதும் இங்கே புதிய சுரங்கங்களைத் தோண்டுவதற்கான தங்கப் படிமங்கள் இருக்கின்றன என்று நடராஜன் தமது அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். அதை இந்திய அரசு அனுப்பி வைத்த நிபுணர் குழுவும் ஆமோதித்திருக்கிறது. புதிய சுரங்கங்கள் தோண்டுவதற்காக இந்திய அரசு ஆறு கோடி ரூபாய் தருவதாகவும் சொல்லியிருக்கிறது. அப்படியிருந்தும் அதற்கான வேலைகள் தொடங்குவதில் இப்போதிருக்கும் அதிகாரிகள் மெத்தனம் காட்டிக் கொண்டே இருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் என்ன தெரியுமா?

"இப்போதிருக்கும் நிர்வாகம், தங்கச் சுரங்கத் தொழிலாளர்களை வெளி மாநிலங்களுக்கு காண்ட்ராக்ட் வேலை என்று சொல்லி அனுப்புவதில் நிர்வாகத்திலுள்ளவர்களுக்கு நல்ல கமிஷன். அதற்கு இடைஞ்சலாக இருக்கும் நடராஜன் அறிக்கையைத் தூக்கிக் கிடப்பில் போட்டு விட்டு, அரசாங்கத்திற்கு நஷ்டக் கணக்கை மட்டுமே காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் கண்டு வேதனைப் பட்டுத்தான் தமது டெக்னிகல் டைரக்டர் பதவியை ராஜினாமா செய்துவிட்டுப் போய்விட்டார் நடராஜன்..." என்கிறார்கள் கோலார் தங்க வயலிலுள்ள மகளிர் மன்றத்தினர்.

கோலார் தங்கச் சுரங்க நிர்வாகம், சுந்தரமூர்த்தி என்கிற முப்பது வயதுத் தொழிலாளி ஒருவரை காண்ட்ராக்ட் தொழிலாளியாக ராஜஸ்தானிலுள்ள கேத்ரி தாமிரச் சுரங்கத்திற்கு அனுப்பியது. இது நடந்தது கடந்த ஏப்ரல் 19 ஆம் தேதி. பெங்களூரில் ரயிலேறிய அவர் இன்று வரை அங்கு போய்ச் சேர்ந்தாரா இல்லையா என்பது கூட இங்குள்ள அவரது குடும்பத்தாருக்குத் தெரியாது! "நீங்களே வந்து அவரது மனைவியைச் சந்தித்துக் கேளுங்கள்..." என்று அழைத்துச் சென்றார் அந்தோணி மதலைசாமி. இவர் கோல்டன் ரர்க் கம்யூனிட்டி டெவலப்மெண்ட் சொசைட்டியின் தலைவர்.

"ஏப்ரல் — 19 ஆம் தேதி அவரை ரயிலேற்றி விட்டு வந்ததுதான். இதுவரை அவரிடமிருந்து எனக்கு எந்தவிதப் பதிலும் வரவில்லை. நிர்வாகத்தில் போய்க் கேட்டால், அவர் அங்கு வந்து சேரவேயில்லை என்கிறார்கள். இந்த நிலையில் நான் இரண்டு சிறு பெண் குழந்தைகளை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்றே தெரியவில்லைங்க...." என்றார் சுந்தரமூர்த்தியின் மனைவி திருமதி சலோமி. தம் இரு கண்களிலும் கண்ணீர் முட்ட.

காண்ட்ராக்ட் தொழிலாளியாக ஒருவரை அனுப்பி விட்டால் ஆயிற்றா? அவர் கதி என்ன ஆயிற்று என்பதில் நிர்வாகம் அக்கறை எடுக்க வேண்டாமா?

கோலார் தங்கச் சுரங்கத் தொழிலாளர் அத்தனை பேரும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் தான். ஆரம்பத்தில் யாருமே மண்ணுக்கடியிலுள்ள சுரங்கத்தில் சென்று வேலை செய்ய முன்வராத போது, தமிழர்கள்தான் உயிரைப் பணயமாக வைத்து வேலை செய்ய முன் வந்தார்கள். இன்றும் செய்து கொண்டிருக்கிறார்கள். கடந்த நூறு ஆண்டுகளில் சுமார் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்த் தொழிலாளர்கள், இந்தத் தங்கச் சுரங்கத்தில் உயிரிழந்திருக்கிறார்கள்.

"எம். எல். ஏ. என்கிற முறையில் நான் இங்குள்ள பல்வேறு அமைப்புகளுடனும் கட்சி வேறுபாடுகளையெல்லாம் கடந்து ஒன்று சேர்ந்து, நடராஜன் கொடுத்த அறிக்கையை அமுல்படுத்த வேண்டுமென்றும், அவருடைய ராஜினாமாவை ஏற்றுக் கொள்ளக் கூடாதென்றும் கோலார் தங்க வயலில் கடந்த செப்டம்பர் 24 ஆம் தேதியன்று பந்த் கூட நடத்திப் பார்த்தேன். ஆயினும் இங்குள்ள தமிழர்களின் குரலைச் செவிமடுக்க மறுத்து, பந்த் நடந்த மறுநாளே நடராஜனின் ராஜினாமாவை நிர்வாகம் ஏற்றுக் கொண்டுவிட்டது..." என்றார் கோலார் தங்க வயலின் (அ.தி.மு.க.) எம்.


இப்பொழுது பாலியஸ்டர் மூலம்
பூவையர் புத்துயிர் புரிகின்றனர்!
பொங்கல் பண்டிகைக்கு பரவசமூட்டும்
என்றென்றும் நிலைத்து நிற்க...
Sharda
SAREES [INDIA]
'ஷார்தா' பெல்காம் பாலி-சில்க் புடவைகள்
எல்லா பிரபல துணிக்கடைகளிலும் கிடைக்கும்.
CHARI/S/TAM-1

எல். ஏ.வான எம். பக்தவத்சலம்.

"அப்போது மத்திய அமைச்சராக இருந்த முரசொலி மாறன் அவர்களிடம் கூட நான் கட்சி வேறுபாடுகளை மறந்து, முறையிட்டேன். வை. கோபால்சாமி ராஜ்ய சபையில் பேசியதோடு சரி. அதன் பிறகு தமிழகத்திலுள்ள யாருமே கோலார் தங்க வயல் தொழிலாளர்கள் பற்றி அக்கறை எடுத்துக் கொண்டதாகவே தெரிய வில்லை...."

"**த**ங்கச் சுரங்கத்தை மூடப் போவதோடு, இங்குள்ள சுரங்கம் மிக மிக ஆழமானது என்பதால், அணுக்கழிவுகளையெல்லாம் கொண்டு வந்து உள்ளே வைத்து மூடப்போவதாகவும் ஒரு வதந்தி கிளம்பி இருக்கிறது. தமிழர்கள் நலனைக் காக்க வேண்டியவர் என்ற முறையில் நாங்கள் கலைஞரைச் சந்திப்பதற்காகச் சென்னை வந்து கோபாலபுரத்திலிருக்கும் அவருடைய இல்லத்தின் வாசலில் கையில் மனுக்களோடு காத்திருந்தோம். காத்திருந்து என்ன செய்வது? கலைஞரைக் கடைசி வரை எங்களால் சந்திக்கவே முடியவில்லை!

"நாங்கள் தமிழர்கள் என்பதால் எங்கள் இளைஞர்களுக்குக் கர்நாடகத்தில் வேலை கிடைப்பதில்லை. கோலார் தங்க வயலில் முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட பட்டதாரி இளைஞர்கள் வேலையின்றித் தவிக்கிறார்கள்....." என்றார் கோலார் தங்க வயல் மகளிர் மன்றத்தைச் சேர்ந்த இசைவாணி.

இதற்கிடையில் மத்திய அரசு படிப்படியாக ஐந்தாண்டுகளில் கோலார் தங்கச் சுரங்கத்தை மூடிவிடுவதென்று முடிவு எடுத்து விட்டது. கோலார் தங்க வயலை மட்டுமே நம்பியிருக்கும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்த் தொழிலாளர்களின் கதி தான் என்ன?

நாம் அங்கிருக்கும் பல்வேறு தலைவர்களையும், தொழிலாளர்களையும் சந்தித்துப் பேசியதில் அவர்கள் தங்களுடைய எதிர்காலம் தமிழகத்திலுள்ள அரசியல் தலைவர்களின் ஒருமித்த குரலில் அடங்கியிருப்பதாகவே நம்புகிறார்கள். தமிழ் இனத்தின் நலனுக்காகத் தமது உயிரைக் கொடுக்கவும் தயாராயிருப்பதாகக் கூறும் கலைஞர், கோலார் தங்க வயலில் உள்ள இரண்டு லட்சம் தமிழர்களின் எதிர்காலத்துக்காகக் குறைந்தபட்சம் குரலாவது கொடுக்காமல் போய்விடுவாரா என்று தான் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

— **பிரின்ஸ்**

படங்கள்: **சுபா**



* படாசாயபு ஆலயம்

"படாசாயபு என்கிற இஸ்லாமியப் பெரியவருக்கு இந்துக்கள் கோயில் கட்டி வழிபடுகிறார்கள். முஸ்லிம்களும் வந்து வழிபடுகிறார்கள். விழுப்புரத்திலிருந்து பாண்டிச்சேரிசெல்லும்வழியிலுள்ள சின்ன பாபு சமுத்திரம் என்னும் சிற்றூரில்தான் இந்த அதிசயம் நடந்து கொண்டிருக்கிறது. நேரில் பார்த்து வந்து எழுதுங்கள்..." என்று திருவாரூரைச் சேர்ந்த கல்கி வாசகர் மு. தனகோபாலன் நமக்கு யோசனை வழங்கியிருந்தார். உடனடியாகப் புறப் பட்டுச் சென்றோம்.

இந்துக் கோயிலைப் போலவே முன் மண்டபம். அதில் பிள்ளையார் சன்னிதி. சுற்றுப் பிராகாரம். விமானம். கர்ப்பக் கிரஹம் எல்லாமே இந்துக் கோயிலின் அமைப்புத்தான். ஆனால் கர்ப்பக்கிரஹத் தில் இருப்பது மட்டும் படாசாயபு பெரு

இஸ்லாமியப் பெரியவருக்கு ஓர் இந்துக் கோயில்!

மகனாரின் சமாதி.

பச்சைப்போர்வையால் முஸ்லிம் முறைப் படி போர்த்தப்பட்டிருக்கும் சமாதிக்கு இரு புறமும் இந்து முறைப்படி குத்து விளக்கு களும் சரவிளக்குகளும் பிரகாசிக்கின்றன. சமாதியின் முன் பக்கம். சிவலிங்கத்தில் சாத்தப்பட்டிருப்பது போல் வெள்ளியால் செய்யப்பட்ட திருநீற்றுப் பட்டை சாத்தப் பட்டிருக்கிறது. சமாதியமைந்துள்ள கரு வறை மண்டபத்தின் மேல் படாசாயபுவின் திருவுருவம்.

வழிபடும் பக்தர்களுக்கு. மணியடித்துக் கற்பூர ஆரத்தி காட்டித் திருநீறு வழங்கப் படுகிறது. வைஷ்ணவ முறைப்படி துளசித் தீர்த்தமும் வழங்கப்படுகிறது.

"இந்தக் கோயிலின் வரலாறுதான் என்ன?" அங்கு பூசாரியாக இருக்கும் மாரி முத்துவிடம் கேட்டோம்.

"சுமார் நூறு வருடங்களுக்கு முன்பாக இந்தப் பக்கத்தில் படாசாயபு ஐயா அவர்கள் நாடோடி போலச் சுற்றிக் கொண் டிருந்திருக்கிறார். அவர் முஸ்லிமாக இருந் தாலும் யாரிடமும் பேதம் பாராட்டியது இடையாது. அனைவருக்கும் அவரிடம் ஏக பக்தி. குழந்தையைப் போல் மனம் படைத்த

* மாரிமுத்து பூசாரி



* கர்ப்பக்கிரஹத்தின் மேல் படாசாயபுவின் திருவுருவம்...





''இந்த மிக்ஸி வேணாம். சத்தமில்லாம வேலை செய்யுது. நல்லாச் சத்தம் போடக் கூடிய மிக்ஸியா இருந்தா எடுங்க...''

''ஏம்மா?''

''பக்கத்து வீட்டுக்கு நான் மிக்ஸி வாங்கினது தெரியணுமில்லே!''

— எஸ். எஸ். பூங்கதிர்.

அவர் எப்போதும் கையில் ஒரு சிறு வீணையுடன்தான் இருப்பாராம். அதனால் அவரைச் சுற்றிலும் பக்தர்கள் கூட்டமும் குழந்தைகள் கூட்டமுமாகத்தான் இருக்கும்.

''ஒருநாள் தம்மைச் சுற்றியிருந்த குழந்தைகளைப் பார்த்து அவர் ஒரு குழி வெட்டும்படி கூறியிருக்கிறார். தின்பண்டங்கள் தருவதாக வாக்களித்தால் வெட்டித் தருவதாகக் குழந்தைகள் சொல்ல. அவரும் சரியென்றிருக்கிறார். குழி தயாரானதும் அவர் அதற்குள் இறங்கி உட்கார்ந்து கொண்டு. குழிக்குள் மண்ணைத் தள்ளுமாறு கூறக் குழந்தைகளும் விளையாட்டாக நினைத்து மண்ணைத் தள்ளி மூடிவிட்டனர்!

''பிறகுதான் அவர் தங்களுக்குத் தின்பண்டம் தராமலேயே குழிக்குள் மறைந்து விட்டார் என்கிற விஷயம் குழந்தைகளின் நினைவுக்கு வந்தது. அதே கணம் 'யார் யாருக்கு என்னென்ன தின்பண்டங்கள் வேண்டுமோ அதை நினைத்துக் கொள்ளுங்கள். உடனே கையில் கிடைக்கும்' என்று குழிக்குள்ளிருந்து குரல் வந்தது. அதன்படி குழந்தைகள் நினைக்கத் தின்பண்டங்களும் கிடைத்தனவாம்.

''இந்த அதிசயத்தைக் குழந்தைகள் ஊருக்குள் வந்து பெரியவர்களிடம் கூற. அவர்கள் ஓடிச் சென்று பார்த்து. படா சாயபு ஐயா சமாதியானதை உணர்ந்திருக்கிறார்கள். அந்தச் சமாதியின் மேல் கட்டப்பட்டதுதான் இந்தக் கோயில். இங்கு இஸ்லாமிய முறைகளும் கடைப்பிடிக்கப் படுகின்றன; இந்து முறைகளும் கடைப்பிடிக்கப்படுகின்றன. இந்துக்களும் முஸ்லிம்களும் இங்கே ஒன்றாக வந்து வணங்கி விட்டுச் செல்கின்றனர். மற்ற கோயில்களில் வலம் வருவோம்; இங்கு மட்டும் இடம்வர வேண்டும். இது இந்தக் கோயிலில் மட்டும் கடைப்பிடித்து வரும் ஐதீகம்...'' என்றார் பூசாரி.

— திருவைக்குமார்.

படங்கள்:

ஜாக்கி ஸ்டுடியோ, வில்லியனூர்.

அழகு தமிழில் அறிவியல்

'ஆப்பின் தலையில் விழுந்தது; புவிஈர்ப்பு புரிந்தது' என்றால் பளிச்சென்று எல்லோருக்கும் விளங்கி விடுகிறது. ஆனால் இது பழங்கதை. இது போல் ஒரு அதிநவீன விஞ்ஞானக் கருத்தைச் சொல்ல வேண்டும். (உ.ம்.) அணுசக்தி: விண்வெளிப் பயணம்; மின் உற்பத்திக்கு சூரியசக்தி.

முடிவு தேதி: 5.1.91

கல்லூரி முகவரி குறிப்பிட்டு எளிய தமிழில் எழுதப் பெறும் ஒரு பக்கக் கட்டுரைக்கு முதல் பரிசு ரூ. 50/— பிரசுரமாகும் சிந்தனைகளுக்கு ஆறுதல் பரிசு உண்டு. அதிகபட்ச முதல் பரிசுக் கட்டுரைகள் பிரசுரமாகி வெற்றி பெறுபவர் பொன் விழா மேடையில் ரூ. 2500/— சன்மானம் வழங்கி கௌரவிக்கப்படுவார்.

கல்கி பொன்விழா பரிசுத் திட்டம்

50

கல்லூரி மாணவர் கட்டுரைப் போட்டி

இளையராஜா பாராட்டிய ஐடியா!

●● தென் இந்தியாவிலே முதன் முதலாக ஒளிப்பதிவிற்காகத் தேசிய விருது பெற்ற ஒளிப்பதிவாளர், மார்கஸ் பிராட்லே. 'செம்மீன்' படத்திற்காகத் தேசிய விருது பெற்ற இவர் தற்போது என்ன செய்கிறார் தெரியுமா? காமிரா ரிப்பேர்! இவர் ஒருவருக்குத்தான் இங்கு சினிமா காமிராவை முழுவதுமாய்ப் பிரித்துப்போட்டு ரிப்பேர் பார்க்கத் தெரியுமாம்!


●● கோடம்பாக்கத்தில் ஒரு நிறுவனம். இவர்கள் ஷூட்டிங்கிற்குத் தேவையான, கயிற்றுக் கட்டில், ஸோபா, குத்து விளக்கு, லாந்தர் விளக்கு, நாற்காலி, ஜன்னல் திரை, அண்டா, பானை, குடம் என்று சகலமும் வாடகைக்கு விட்டுக்கொண்டிருந்தார்கள். ஒரு காலத்தில் பயங்கர பிஸியாக இருந்த இவர்களின் இன்றைய நிலைமை தலைகீழ்! வீடுகளை ஷூட்டிங்கிற்கு வாடகைக்கு விடுகிற ஆசாமிகளே மேற்படி பொருட்களையும் வாங்கிப் போட்டு விட்டு அதற்கும் சேர்த்து வாடகை வசூல் பண்ணி விடுவதால் இவர்கள் இப்போது ஒவ்வொரு பொருளாய் விற்று ஜீவனம் செய்ய வேண்டிய நிலைக்கு வந்து விட்டார்கள்!

●● குப்புசாமி என்பவர் எப்போதும் ஸ்டுடியோ பக்கம்தான் சுற்றிக் கொண்டிருப்பார். அங்கு வருகிற ஒவ்வொரு டைரக்டராக வழி மறித்துச் சான்ஸ் கேட்பார். சிலர் ஏதாவது சின்ன வேடம் இருந்தால் கொடுப்பார்கள். இல்லை என்றால், அவர்களிடம் ஐந்தோ பத்தோ வாங்கிக் கொண்டு நடையைக் கட்டி விடுவார். ஒரு முறை எம். ஜி. ஆர். 'ஏன் குப்புசாமி இப்படிக் கஷ்டப்படணும்? பணம் தருகிறேன். நிம்மதியாக ஒரு ஆட்டோ வாங்கி ஓட்டுங்கள்' என்று கூறியிருக்கிறார். 'நான் ஒரு நடிகனாகவே வாழ்ந்து நடிகனாகவே சாக விரும்புகிறேன்' என்று கூறி மறுத்து விட்டாராம் குப்புசாமி. இருபத்திரண்டு வயதில் சினிமா கதாநாயகன் சான்ஸ் தேடத் துவங்கிய குப்புசாமியின் முயற்சி வீண் போகவில்லை. எழுபத்தைந்தாவது வயதில் 'உச்சி வெயில்' படத்தில் ஹீரோ சான்ஸ் கிடைத்தது!

அழுத்தமான மியூசிக்!



• மார்கஸ் பிராட்லே



●● இளையராஜாவைத் தொடர்ந்து பொள்ளாச்சிப் பக்கம் உள்ள புரவிப்பாளையம் கோடி சாமியாருக்கு சினிமா வட்டாரத்தில் நிறைய பக்தர்கள். கோயமுத்தூர் பக்கம் ஷூட்டிங் என்று கிளம்புபவர்கள் அந்தச் சாமியாரைப் பார்க்காமல் திரும்புவதில்லை என்ற நிலைக்கு வந்து விட்டார்கள். லேட்டஸ்டாக கோடி சாமியாரைத் தரிசனம் பண்ணி விட்டு வந்த ரூபிணி, அந்த சாமியாரைப் பற்றிச் சொன்ன தகவல்: அவருக்கு இருநூறு வயசு. சாப்பாடு எதுவும் கிடையாது. எப்பவாவது தண்ணீர் மட்டும்தான் குடிக்கிறார். அவர் முஸ்லீம் மதத்தைச் சேர்ந்தவர். அவரைப் பார்த்தவுடனே மனசில் மகா அமைதி ஏற்படுகிறது.



• புரவிப்பாளையம் கோடி சாமியார்

●● பொதுவாக இசையமைப்பாளர்களிடம் படத்திற்கான கதையைச் சொல்லிப் பாடலுக்கான சூழ்நிலையை விளக்கிப் பாடலுக்கு டியூன் போடச் சொல்லுவதுதான் வழக்கம். இந்தப் பாதையில் ஒரு மாறுதலைச் செய்திருக்கிறார் ராஜ்கிரண். முழுப் படத்தினையும் ஷூட்டிங் பண்ணி முடித்து விட்டுப் படத்தை இளையராஜாவிடம் போட்டுக் காட்டிப் பாடல்கள் வர வேண்டிய இடங்களைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். ''உன்னை மாதிரியே எல்லோரும் பண்ணிணாங்கன்னாக் கதையிலிருந்து பிசகாமல் அழுத்தமா மியூஸிக் பண்ணலாம்'' என்றாராம் இளையராஜா!

— எஸ். பாலு.



தேவைப் படும் போது யாரும் இரவு — பகல் எந்த நேரத்திலும் இந்தியாவிலோ அல்லது உலகின் எந்தவொரு நாட்டிலோ உள்ள எந்த ஊருக்கும் இங்கேயிருந்து டயல் செய்து பேச முடியும்.

விரல் நுனியில் வெளியுலகை இணைக்கும் இந்த முறையில் இந்தியாவில் தொடர்பு கொள்ளக் கூடிய ஊர்களின் எண்ணிக்கை 585. தொடர்பு கொள்ளக் கூடிய வெளி நாடுகளின் எண்ணிக்கை 176.

எஸ்டிடி தொடர்பு கொள்ளத் தபால்

உலகையே இணைக்கும் தெருமுனை டெலிபோன்கள்

பளிச்சென்று பார்த்த மாத்திரத்தில் பார்வையைக் கட்டி நிறுத்தும் வகையில் பெரிதான எழுத்துக்களில் பெயர்ப் பலகை.

சுவராக எழுந்து நிற்கும் கண்ணாடித் தடுப்புகளின் பின்னே அமைந்துள்ள குளிர் சாதன வசதி பொருத்திய அறை.

வரிசையாக, வசதியாக இருக்கைகள். அருகே மேசையின் மீது கம்ப்யூட்டர் கட்டுப் பாட்டில் இயங்கும் 'பில்லிங்' இயந்திரம்.

சற்றுத் தள்ளி மற்றொரு கண்ணாடித் தடுப்புக்குள் மீட்டருடன் கூடிய டெலி போன்.....

இது இருபத்து நாலு மணி நேரமும் இயங்கும் STD/ISD/PCO.

'சப்ஸ்கிரைபர் டிரங்க் டயலிங் — இன்டர் நேஷனல் சப்ஸ்கிரைபர் டயலிங் — பப்ளிக் கால் ஆஃபீஸ்' என்பதன் சுருக்கப்பட்ட வடிவம்தான் STD/ISD/PCO.

அலுவலகம் போன்ற இடங்களில் அமைந் துள்ள தொலைபேசிகளைப் பயன் படுத்து வோரின் எண்ணிக்கை பெருகிப் போனது ஒரு புறம்;

எண்ணற்றபேர் இந்த வசதியைப் பயன் படுத்திக் கொள்ள வழிவகை காண வேண் டும் என்கிற தொலைத் தொடர்புத் துறை யின் ஆர்வம் இன்னொரு புறம்;

இந்த இரண்டும் சேர்ந்து இப்படித் தனி யார் பலரும் பொதுத் தொலைபேசி நிறு வனங்களைத் தொடங்கி நடத்துவதற்கு அனுமதியளிக்கும் முடிவுக்கு அடிகோலின.

விளைவு: சிறிய — பெரிய தொழில் முனைவோர் பலரும் ஆர்வம் காட்டி இவற்றை நடத்துவதற்கு முன் வந்துள்ளனர்.

இத்தகைய அலுவலகங்கள் முதலில் தொடங்கப்பட்டது தில்லியில்தான். அங்கே அடைந்த பெரு வெற்றியைத் தொடர்ந்து

இதர மூன்று பெரு நகர்களில். இப்போது – அனேகமாக எல்லா ஊர்க்களிலும்.

அந்தந்த ஊர்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப இத்தகைய பொதுத் தொலைபேசி அலுவலகங்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகிறது. சென்னையில் சுமார் 400.

பொது மக்கள் வசதியாக அணுகும் வகையில். அவர்கள் பார்வையில் எளிதாகப் படக் கூடிய இடமாக இருக்க வேண்டியது அவசியம். விண்ணப்பித்து. இதர வசதிகளைச் செய்து முடித்து. தொலைத் தொடர்புத் துறையினர் வந்து பார்வை யிட்டு..... இப்படிச் சுமார் மூன்று மாதங்களில் இணைப்புக் கிடைத்து இந்த அலுவலகம் இயங்கத் தொடங்கி விடுகிறது. ஒரு லைனுக்கு இவ்வளவு என்று காரண்டித் தொகை செலுத்த வேண்டும்.

இடவசதி. பயன் படுத்துவோரின் எதிர் பார்க்கப்படும் எண்ணிக்கை ஆகியவற்றைப் பொறுத்து ஒன்று. இரண்டு. ஐந்து என்று தேவைப்படும் லைன்களை வைத்துக் கொள்ள முடியும். லைன்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப காரண்டித் தொகை கூடுகிறது.

தொலைத்தொடர்புத் துறையின் அங்கீகாரம் பெற்றுள்ள நிறுவனங்களிடமிருந்து தான் 'பில்லிங்' இயந்திரத்தை வாங்க முடியும். டெலிபோன் மீட்டருடன் இணைப்புப் பெற்றுள்ள இது பேசி முடித்த நொடியில் படபடவென்று பில்லை அடித்துக் கையில் கொடுத்து விடுகிறது.

வீட்டில் போன் வைத்திருக்கும் பலரும் **STD** வசதியை நீக்கி விடுகிறார்கள். மற்றவர்கள் யாரும் 'மிஸ்யூஸ்' செய்து விடக் கூடும் என்கிற பயம் ஒரு காரணம். மற்றொன்று. பேசிமுடித்த பின்னர் தொடர்பு நிச்சயமாக வெட்டப்பட்டு விட்டதா என்பது தெரிவதில்லை. கேபிளில் ஏற்படும் ஏதாவது ஒரு கோளாறு காரணமாகத் தொடர்பு கால தாமதமாகத் துண்டிக்கப் படும் போது. அது வரையில் டெலிபோன் எக்ஸ் சேஞ்சில் மீட்டர் ஓடி. பில் தொகை வரும் போது மூர்ச்சை போட வைத்து விடுகிறது.

('முக்கியம்' என்று குறிப்பிட்டு டெலிபோன் டைரக்டரியே இப்படிக் கூறுகிறது: "**STD/ISD** கால்களைப் பேசி முடித்ததும் கையால் ஹூக் ஸ்விட்சை அழுத்தித் தொடர்பு வெட்டப்பட்டு விட்டதைத் தொடர்ந்து டயல் டோன் வருகிறதா என்று கவனியுங்கள். அப்படி வராவிட்டால் தொடர்பு வெட்டப்பட்டு விடுவதை உறுதி செய்து கொள்ள உங்கள் லோக்கல் எக்ஸ் சேஞ்சுடன் பின் வரும் டெலிபோன் எண்களில் தொடர்பு கொண்டு விவரத்தைத் தெரிவித்துச் சரி செய்யுங்கள்...")

இந்த அலுவலகங்களில் அந்தப் பிரச்னையெல்லாம் இல்லை. டெலிபோனுடனேயே மீட்டர் இணைந்துள்ளது. பேசி முடித்தவுடனேயே அது இயங்குவதும் நின்று விடுகிறது. அதனால் தேவைக்கதிமாகப் பணம் செலுத்தும் அவசியம் ஏற்படுவ தில்லை.

பேசுவதற்குக் கிடைக்கும் தனிமை ஒரு ப்ளஸ் பாயின்ட். வீட்டில் அது கிடைக்கும் என்பது நிச்சயமில்லை. குழந்தைகளின் விளையாட்டு, கூச்சல், திடீர் விருந்தினர் வருகை. ஏதோ காரணத்தினால் ஏற்படக் கூடிய எதிர் பாராத டென்ஷன் இப்படிப் பல காரணங்களால் ஏற்படும் பாதிப்பு இங்கே இல்லை.

இன்னொரு வசதி: பேசி முடித்ததும் உடனுக்குடன் அதற்கான கட்டணத்தைச் செலுத்தி விடுவதால் அந்தச் செலவு பெரிதாகத் தெரிவதில்லை. வீட்டில் அவ்வப் போது **STD** வசதியைப் பயன்படுத்தி. பின்னர் பில் வரும்போது மொத்தமாகத்



இப்படியும் நடக்கிறது!

"எங்களுக்கு போனஸ் வேண்டாம். நாங்கள் கேட்கவே இல்லை. எப்படி நீங்கள் கொடுக்கலாம்? சம்பளம் நன்றாக வருகிறது; அதுவே போதும்" என்று தொழிலாளர்கள் சொன்னால் எப்படி இருக்கும்? அநேகமாகத் தொண்ணூறு சதம் முதலாளிகளுக்கு இதய நோயே வரலாம்! ஆனால் பம்பாய் டி. ஜி. ஐ ஃபோர்ஜிங்ஸ் முதலாளி மேத்தாவுக்கு அப்படி ஆகவில்லை. "அதெல்லாம் முடியாது... போனஸ் கொடுத்தது கொடுத்ததுதான்! திரும்ப வாங்க முடியாது. ஒழுங்காக வேலைக்குப் போங்கள்" என்றாராம்!

ஆதாரம்: பிசினஸ் இண்டியா.

தகவல்: கி. ராஜ்கோபால்.

தொகை செலுத்துவதற்கு ஏற்படும் மலைப்பு தவிர்க்கப் பட்டுவிடுகிறது.

இடத்துக்கு இடம் பில் கலெக்ஷன் தொகை வேறுபடுகிறது. நாளொன்றுக்கு ரூ. 600 முதல் ரூ. 1500 வரை. கமர்ஷியல் ஏரியா, மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகள் போன்றவற்றில் இது ரூ. 4000 வரை போகிறது. லைன்களின் எண்ணிக்கையைப் பொறுத்துச் சில இடங்களில் இதற்கும் அதிகமாக இருக்கக்கூடும்.

கலெக்ஷனுக்குத் தகுந்தபடி இந்த அலுவலகங்கள் கமிஷன் பெறுகின்றன. 10,000 கால்கள் வரை 20 சதவிகிதம். 10,000—லிருந்து 15,000 கால்கள் வரை 10 சதவிகிதம். அதற்கு மேல் 5 சதவிகிதம்.

இடம், குளிர் சாதன வசதி, இருக்கை வசதி, தொலைபேசி உபகரணங்கள் போன்றவற்றுக்குச் செய்யப்படும் மூலதனம், ஊழியர் சம்பளம் — இதர செலவுகள் ஆகியவற்றுக்கு இந்த வருவாய் போதுமானதாக இருக்குமா என்பது தெரியவில்லை.

நம் வீட்டிலிருக்கும் டெலிபோனை இந்த 'பப்ளிக் கால் ஆஃபீஸ்' லைன்களுடன் இணைப்புப் பெறச் செய்வது 'இன்டர்ஃபேஸிங்' என்று அழைக்கப்படுகிறது. அதற்கெனப் பிரத்யேக எக்விப்மென்ட் இருக்கிறது. இந்த முறை இப்போது பரிசோதனை அளவிலேயே இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தப் பொதுத் தொலைபேசி அலுவலகங்கள் அனைத்துக்கும் இந்த முறை அனுமதிக்கப்பட்டால், நம் வீட்டிலிருந்தபடியே இந்த அலுவலகங்கள் மூலம் நாம் வெளியூர்த் தொடர்புகள் பெற முடியும், நம்முடைய டெலிபோனில் STD வசதி நீக்கப்பட்டிருந்தாலும் கூட. குறிப்பாக, இரவு நேரச் சலுகையை வீட்டிலிருந்தபடியே பயன்படுத்திக்கொள்ளச் சிறந்த வாய்ப்பு ஏற்படும்.

நம் வீட்டிலிருந்தபடியே வேறு சில எண்களுடன் தொடர்பு கொண்டு ஒரே நேரத்தில் கலந்து பேசும் முறைக்கு 'கான்ஃப்பரன்சிங்' என்று பெயர். இந்த வசதியை ஏற்படுத்தித் தருவதற்கு இந்த அலுவலகங்களுக்கு அனுமதியில்லை.

பொதுத் தொலைபேசி அலுவலகங்கள் நடத்துவோர் ஒன்று சேர்ந்து சங்கம் ஒன்றை அமைத்திருக்கிறார்கள். 'பிரைவேட் பிசிஓ ஆப்பரேட்டர்ஸ் அசோசியேஷன்' என்று பெயர். இந்தச் சங்கத்தை தொலைத் தொடர்புத்துறை அங்கீகரிப்பதில்லை என்று கூறப்படுகிறது.

— சி. ஆர். கே.

அட்டையில்: **செல்வி தேவிகா.**

வண்ணப்படமும், படமும்: **உத்ரா.**

"என்னங்க, கழுத்துலே சைக்கிள் லைட்டை மாட்டிக்கிட்டிருக்கீங்க?"

"சைக்கிள்லே லைட் மாட்ட மாட்டேங்கிறாங்களே...! என் மேலே அவங்க இடிக்காம இருக்கத்தான் இப்படி!"





ஆசிரியருக்கு ஏக சந்தோஷம். தம் பிறந்த நாளன்று தம் வகுப்பில் படிக்கும் நாற்பது மாணவர்களும் இரண்டு பெரிய பரிசு பாக்கெட்டுகளைக் கொண்டு வந்து கொடுத்ததும் அசந்து விட்டார்.

முதல் பாக்கெட்டைப் பிரித்தார் — பெரிய அளவில் ஒரு கேக்!

இரண்டாவதைப் பிரித்தார் — ஓர் அழகான கத்தி; நாற்பத்தோரு பேப்பர் கட்டுகள்!

— சாமி.

பாங்க் ஏஜெண்ட்: சார், நீங்க பெரிய கட்சித் தலைவரா இருக்கலாம். அதுக்காக எம். பி., எம். எல். ஏ. வையெல்லாம் விலை கொடுத்து வாங்க பாங்கில் கடன் கொடுக்க வழியில்லை சார்!

— சுந்தர் சுந்தரி.



NAVAJEEVAN BLIND RELIEF CENTRE (Regd)

SRI KANCHI MUTH. PO - TIRUMALA
VIA. TIRUPATI. PIN : 517 504.



''ஜன கல்யாண்'' சமூகநல திட்டத்தின் கீழ் ஸ்ரீகாஞ்சி சங்கராச்சாரியார் ஸ்வாமிகள் திருப்பதி நவஜீவன் சேவாகேந்திரத்தின் புதிய இலவச ஹாஸ்டல் கட்டிடத்திற்காக அடிக்கல் நாட்டுவிழா பூஜையை தொடங்கி வைத்தார்.

ஒரு வேண்டுகோள்

வேண்டுவோருக்கு வேண்டியதை வழங்கும் ஸ்ரீ ஏழுமலையான் திருக்கோயில் கொண்டிருக்கும் இந்த திருப்பதி புண்ணிய க்ஷேத்திரத்தில் எந்த ஒரு தானம் செய்தாலும் அதற்கு பன்மடங்கு அதிகம் புண்ணிய பலன்கள் கிடைப்பதாக புராணங்கள் கூறுகின்றன. கடந்த பதினோரு வருடங்களாக திருப்பதி புண்ணிய க்ஷேத்திரத்திலிருந்து செயல்பட்டு வரும், நவஜீவன் சேவாகேந்திரத்தின் சமூகநல திட்டங்களுக்கு ஆஸ்திக அன்பர்கள் கருணையுடன் உதவ விரும்பினால், வருடம் ஒரு முறை ரூ. 100/- (நூறு ரூபாய்) காணிக்கையாக அனுப்பலாம். இந்த மாபெரும் உதவிக்காக ஆஸ்திக அன்பர்களுக்கு நவஜீவன் சேவாகேந்திரம் சில தொண்டுகளை வழங்குகிறது.

1. நீங்கள் குறிப்பிட்டு எழுதும் ஒரு நன்னாளில் - அதாவது உங்கள் குழந்தையின் பிறந்தநாள், உங்களது பிறந்தநாள், திருமணநாள் போன்ற ஒரு நன்னாளில் (அல்லது பெரியோர்களின் வருடாந்திர முக்கிய திதி போன்ற ஒரு தினத்தில்) உங்கள் நலனுக்காக ஸ்ரீ வெங்கடாசலபதிக்கு விசேஷ ப்ரார்த்தனை செய்விக்கிறோம்.


2. நீங்கள் குறிப்பிட்டு எழுதும் ஒரு நாளில் பார்வையற்ற குழந்தைகளுக்கு உங்கள் சார்பாக அன்னதானத்திற்கும் ஏற்பாடு செய்கிறோம்.

3. ஸ்ரீ வெங்கடாசலபதியின் விசேஷ ப்ரசாதம், போட்டோ மற்றும் சுப்ரபாத புஸ்தகத்துடன், ஸ்ரீ பத்மாவதி தாயார் ப்ரசாதமாக திருமாங்கல்ய சரடு ஒன்றும் ஆசீர்வாதமாக அனுப்பி வைக்கிறோம்.

4. நீங்கள் முன் குறிப்பிட்டு திருப்பதி யாத்திரை வருகையில் தேவையான ஆலோசனை/உதவி வழங்குகிறோம்.

தயவு செய்து உங்களது டொனேஷனை The Secretary, Navajeevan Blind Relief Centre என்கிற பெயரில் Crossed Cheque/DD/MO மூலமாக மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு அனுப்பும்படி பணிவுடன் வேண்டுகிறோம்.

''ஓம் நமோ வெங்கடேசாய.''


புலியாவது, பூனையாவது... அதெல்லாம் கிடையாது!
கருணாநிதி
சந்திரசேகர்
நாற்காலியிலே உட்கார்றதுமா, வேணாமா?
அய்யய்யோ... புலி நிறைய இருக்கு... எல்லாத்தையும் புடிச்சிடறேன்... விட்டுருங்க, விட்டுருங்க..
1340 கோடி மறைமுக வரிகள்
பெட்ரோலியம் விலை உயர்வால் விலைவாசி ஏற்றம்
இதுக்கே கதறுரியே... அந்த மூட்டையையும் நீதான் சுமக்கணும்!
சந்திரசேகர்
பட்ஜெட்டில் மேலும் வரிகள்
அய்யய்யோ... இன்னுமா?
ப.ராமச்சந்திரன்
என்னங்க, பத்தி பறக்கிறதே!
எனக்கிருந்தா திக்கி திக்கிங்குது!
கருணாநிதி



கல்கி

1990 டிசம்பர் 30
மலர் : 49 இதழ் : 22
பிரமோதூத மார்கழி 15



வரிமேல் வரி விதித்து வதைக்கிறார்கள்!

பொங்கலுக்குப் புதிதாக ஒரு டெரிக்காட் சட்டை வாங்கலாம் என்று ஆசைப் பட்டு விடாதீர்கள்! செயற்கை நூலிழைகள் மீது சந்திரசேகர் அரசு எக்கச்சக்கமாக வரிகளைக் குவித்திருக்கிறது. விலை கேட்டால் தலைசுற்றும்! அப்புறம் ஒரு சோடா குடிக்கத் தோன்றும். அதன் மீதும் வரி உயர்த்தப்பட்டிருப்பதால், அதன் விலையைக் கேட்டு மயங்கி விழவே நேரலாம்!

ஏராளமான பொருள்கள் மீது மறைமுக வரிகள் உயர்த்தப்பட்டுள்ளன. அப்பாவி மக்கள் விவரம் புரியாமல் விலைவாசி உயர்வு என்று எண்ணித் தயாரிப்பாளர்களை அல்லது தொழிலதிபர்களை மனசுக்குள் திட்டித் தீர்ப்பார்கள். உண்மையான வில்லன் ரூ. 1340 கோடிக்குப் போடப்பட்டுள்ள புதிய வரிகள்தான் என்பது பாவம், அவர்களுக்குத் தெரியாது. மறைமுக வரிகளுக்கு ஒவ்வொரு கட்டத்திலும் பெருகிக் கொண்டே போய் விலைவாசியை எக்கச்சக்கமாக உயர்த்தும் குணம் உண்டு. இந்தப் பொருளாதார நியதி தவிர்க்க முடியாதது. மக்கள் விலைவாசி உயர்வால் மேன் மேலும் அவதிப்படுவார்கள்.

ஏற்கெனவே பெட்ரோலியப் பொருள்களின் விலை ஏற்றம் விலைவாசிகளைத் தாங்க முடியாத அளவுக்கு உயர்த்தி விட்டதற்கு மேலாக இந்தப் புதிய வரிகளும் கொடுமைப்படுத்தும். ஹோட்டல் அதிபர்கள் மறுநாளே பண்டங்களின் விலைகளை உயர்த்தி விட்டனர். சிறிய, பெரிய, தொழிலதிபர்களின் சங்கங்கள் அனைத்தும் இந்தப் புதிய வரிகள் பொருளாதாரத்தை மேலும் நலிவுறச் செய்யும் என்று எச்சரித்துள்ளன. ஆனால் அடுத்தடுத்து வரும் அரசும் ஆட்சியும் பொருளாதார நியதிகளைப் புரிந்து கொண்டு செயல்படுவதாகவே இல்லை. "கொள்கைகளை மாற்றுங்கள்" என்றால், வரிகளை உயர்த்துகிறார்கள்! இவர்களுக்குத் தெரிந்த ஒரே பொருளாதாரக் கொள்கை, வரிகளை உயர்த்துவதுதான்!

இப்போது உயர்த்தப்பட்டுள்ள மறைமுக வரிகளுக்கும் பட்ஜெட்டுக்கும் சம்பந்தமில்லை. பிப்ரவரி இறுதியில் பட்ஜெட் சமர்ப்பிக்கப்படும் போது மேலும் மறைமுக வரி விதிப்பு இருக்கும்! விலைவாசிகள் இன்னும் உயரும். மக்களின் கஷ்டம் மேலும் அதிகரிக்கும். சங்கம் அமைத்துப் போராடும் வகுப்பினர், விலைவாசிக்கு ஏற்ப ஊதிய உயர்வு கேட்பார்கள். அந்தக் கோரிக்கை ஏற்கப்படும் போது, அதுவே விலைவாசி மேலும் உயரக் காரணமாகும்! சங்கம் அமைத்துக் கொள்ளாமல் நாட்கூலி பெற்றுக் காலத்தை ஓட்டும் கோடிக்கணக்கான மக்கள் திண்டாடுவார்கள்; வறுமையில் வாடுவார்கள்.

'பட்ஜெட்டில் நேர்முக வரிகளும் கணிசமாக இருக்கும்' என்று தேவிலாலும் மற்றவர்களும் கூறுகிறார்கள். 'பணக்காரர்களுக்கு வரி விதித்து ஏழைகளுக்கு உதவுவோம்' என்று ஊரை ஏமாற்றுகிறார் தேவிலால். தம்மையும் ஏமாற்றிக் கொள்கிறார். இது அறியாமையின் விளைவு. ராஜாஜி சொல்வார்: 'மலையில் பெய்கிற மழை எப்படிச் சமவெளிக்கு இறங்கிப் பாய்கிறதோ, அப்படியே பணக்காரர்கள் மீது சுமத்தப்படும் வரி, கடைசியில் ஏழைகளின் தலையில்தான் விடியும்! அவர்களைத்தான் பாதிக்கும்!' என்று.

பணக்காரர்கள் என்றுமே வரிச் சுமையால் பாதிக்கப்படுவதில்லை. அவர்கள் வரி ஏய்த்துக் கறுப்புப் பணம் பண்ணுவதுடன் கம்பெனி செலவில் வசதிகளைப் பெருக்கிக் கொண்டு சுகபோகத்தில் திளைப்பார்கள். மந்திரிகளுக்குத் தெரிந்த வழி முறைகள் தொழிலதிபர்களுக்குத் தெரியாதா, என்ன! அவதிப்படுகிறவர்கள் அப்பாவி மக்கள்தாம். அவர்கள் தலைவர்களின் அறியாமை காரணமாக மேன்மேலும் தியாகங்களைச் செய்து, சிலுவை சுமக்கிறார்கள்.

நாடு செழிக்க வேண்டுமென்றால் தொழிலும் பொருளாதாரமும் அரசின் இரும்புப் பிடியிலிருந்து தப்பி மக்களிடம் வர வேண்டும். சுதந்திரப் பொருளாதாரமும் தொழிலும்தான் நாட்டைக் காக்கும். போட்டா போட்டிதான் குறைந்த விலையில் தரமான பொருள் மக்களுக்குக் கிடைக்க வழி வகுக்கும். கண்ட்ரோல், பர்மிட், லைசென்ஸ் என்றெல்லாம் விலங்கு பூட்டி வதைக்காமல், தொழில்களை வளர விட வேண்டும். பொருளாதாரத்தை இயற்கை நியதிகளுக்கு உட்பட்டு இயங்க அனுமதிக்க வேண்டும். அரசு தானே எல்லாவற்றையும் செய்ய எண்ணும் போதுதான் வரிகளை அதிகரிக்க வேண்டியுள்ளது. வரிகளைக் குறைத்து, அரசு ஒதுங்கிக் கொண்டு, மக்களை நாட்டின் மேன்மைக்கு உழைக்குமாறும் தொழில் தொடங்குமாறும் ஊக்குவிக்க வேண்டும். இதையெல்லாம் செய்ய நமது தலைவர்களுக்குத் துணிவு இல்லாதது மட்டுமல்ல; அவர்களின் சுயநலம் இதற்கு இடம் தரவும் இல்லை!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

ஆனைமலைக்கு அபாயம்; நீலகிரிக்கு ஆபத்து!

125 வருடங்களாக இயங்கிவரும் சின்கோனா இலாகாவை இழுத்து மூடிவிடத் தமிழக அரசு தீர்மானித்திருக்கிறது. ஆனைமலையில் 3500 ஹெக்டேரும், நீலகிரியில் 1500 ஹெக்டேருமாக, மொத்தம் 5000 ஹெக்டேரிலுள்ள சின்கோனாவை அழித்து விட்டு, அத்தனையிலும் தேயிலை பயிரிட முடிவெடுத்திருக்கிறது.

இதை எதிர்த்து, கோவையிலும் ஊட்டியிலும் உள்ள சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைப்புகளும், தனி நபர் சிலரும் மத்திய — மாநில அரசினரிடம் முறையிட்டிருக்கிறார்கள். 'நீலகிரியைக் காப்பாற்றுவோம்' என்ற அமைப்பின் அபிமானி டி. வேணுகோபாலைச் சந்தித்து இதுபற்றி விசாரித்தோம்:

''சின்கோனா தோட்டங்கள் ஆனைமலைஎல்லையிலுள்ள இரவிக்குளம்தேசியப் பூங்காவை ஒட்டி அமைந்திருக்கின்றன. நீலகிரியில், முதுமலை சரணாலயத்தையொட்டி உள்ளன. இவற்றினூடேதான் யானைகள் மட்டுமின்றி வனவிலங்குகள் பலவும் வந்து போகும் முக்கிய பாதைகள் அமைந்துள்ளன. கோடையில் அவற்றுக்கு நீருக்கும் உணவுக்கும் இதுதான் புகலிடம். எனவே வனவிலங்குகள் அழிவுக்கு இது முதலில் வழி வகுக்கும். தேயிலைத் தோட்டப் பணிக்கு நிறைய ஆட்கள் தேவை. இவர்களின் எரிபொருள் தேவைக்குக் காட்டு மரங்களை அழிப்பார்கள். தாவர இயல் நிபுணர்களும் மாணவ — மாணவிகளும் வந்து கற்றுணரும் அரிய மரம் செடி கொடிகள் இங்கேதான் இருக்கின்றன. அவை அழிக்கப்படும். சின்கோனா மரங்கள் தாம் அதிக மழை பொழியக் காரணம். மோயார் ஆறு, சிங்கார மோயார் மின் நிலையம், பவானிசாகர் நீர்த்தேக்கம், பரம்பிக்குளம் — ஆளியாறு அணைக்கட்டுப் பகுதி எல்லா வற்றுக்குமே நீர்வரத்துக் குறைந்து, மின் உற்பத்தியும் பாதிக்கப்படும். முக்கியமாக, ஸெரிப்ரல் மலேரியாவுக்கு சின்கோனாவிலிருந்து கிடைக்கும் மருந்துதான் உன்னதமானதாகக் கருதப்படுகிறது.

''கர்நாடகத்தில் ஒரு கோடி ரூபாய் செலவழித்து, குடகுப் பகுதியில் அவர்கள் தொடங்கிய தேயிலைத் தோட்ட முயற்சிகளைக் கைவிட்டுவிட்டார்கள்! தமிழ்நாடும் இதைப் பின்பற்றக் கூடாதா என்றே வனத்துறைச் செயலர் ராமகிருஷ்ணனிடம் நான் கேட்டேன். அவரும் இந்த விஷயத்தில் அனுதாபத்தோடு செயல்படும் அபிமானிதான்.''

''அரசுத் தரப்பில் என்ன சொல்கிறார்கள்?''

''சுற்றுச் சூழல் கெடாதபடி, மொத்த இடத்தையும் வனத்துறைக்கும், TANTEA அமைப்புக்கும், பிரித்துக் கொடுக்கும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இயற்கையான வனச்சூழல் கொண்ட காடுகள் வனத்துறையிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்கிறார்கள். வனவிலங்குகள் வந்து போவது பாதிக்கப்படாது என்றும் ஏரிகளுக்கு நீர் வரத்துக் குறையாது என்றும் கூறுகிறார்கள். சுமார் இருநூறு ஹெக்டேரில் சின்கோனா மரங்கள் வளர்க்கத் தடை ஏதும் இல்லை என்கிறார்கள்.''

'நீலகிரியைக் காப்போம்' அமைப்பும், சுற்றுச் சூழல் — இயற்கை வனப் பராமரிப்பு அன்பர்களும் எளிதில் சமாதானம் அடைவதாகத் தெரியவில்லை. கவலையோடுதான் இருக்கிறார்கள். மத்திய சுற்றுச் சூழல் அமைச்சர் மேனகா காந்திக்கும் விண்ணப்பங்கள் அனுப்பியிருக்கிறார்களாம்.



• வனத்தை ஊடுருவும் தேயிலைத் தோட்டம்

— எஸ். வி. என்.

ஜம்போ மந்திரிசபை!

பா. ரா.


மகாராஜாதிராஜ தில்லு பிரகாஷ் மாதவ் மகாராஜா ரொம்பவும் கவலையாக இருந்தார். காரணத்தைப் பிரதம அமைச்சர் ஊகித்து விட்டார். உடனே ஒரு காரியம் செய்தார். விடிவதற்குள் நூறு அமைச்சர்களை நியமித்து விட்டார்!

காலையில் தர்பார் ஹாலுக்கு மகாராஜா வந்து பார்த்தால் ஜேஜேவென்று கூடம் முழுவதும் அமைச்சர்கள் கூட்டம். மகாராஜாவின் முகத்தில் கவலை மறைந்து மகிழ்ச்சி ஏற்பட்டது. பிரதம அமைச்சரை அழைத்து, ''என் மனசிலிருந்த கவலையை எப்படித் தெரிந்து கொண்டீர்?'' என்று கேட்டார்.

''பிரபு, சென்ற மாதம் அரண்மனைக்கு ஒரு தச்சர் வந்து தங்களிடம் தன் பிழைப்பு சரியாக நடக்கவில்லை. கருணை காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். நீங்கள் உடனே ஒரு நாற்காலி செய்து கொண்டு வரும்படி உத்தர விட்டீர்கள்.

''தச்சன் காதில் 'ஒரு' என்றது 'நூறு' என்று விழுந்து விட்டது! அவரும் நூறு நாற்காலிகள் செய்து கொண்டு வந்து தர்பாரில் போட்டு விட்டார். நீங்களும் கருணையுடன் 'இருந்து விட்டுப்போகட்டும்' என்று விட்டு விட்டீர்கள். ஆனால் இரண்டொரு நாளிலே உங்களுடைய முகத்திலே கவலைக் கோடுகள் தோன்றியதைக் கவனித்தேன். ''தர்பார் ஹாலில் இத்தனை காலி நாற்காலிகள் சும்மாக் கிடக்கின்றனவே?'' என்று அவற்றைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்ச விட்டீர்கள்.

''மூன்று இரவுகள் தீவிரமாக யோசனை செய்தேன். நாற்காலிகளில் யாரை உட்கார வைப்பது? சேவகர்களை உட்கார வைக்க முடியாது. அவர்கள் நின்று கொண்டுதான் வேலை செய்ய வேண்டும். பொது மக்களோ தங்கள் முன்னிலையில் அமரக்கூடியவர்கள் அல்ல. மந்திரிகள்தான் உட்கார்ந்து வேலை செய்வதற்கு என்று ஏற்பட்டவர்கள். அதனால் மந்திரி சபையை விஸ்தரித்து விட்டேன். உங்கள் சம்மத உத்தரவுக்கான



பத்திரம் இதோ.'' என்றார்.

ஜம்போ மந்திரி சபை அமைத்து மகாராஜா மகிழ்ச்சியோடு கையெழுத்திட்டார். ஆனால் மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்கவில்லை. "நூறு புதிய மந்திரிகளுக்குப் இலாகாக்கள் கொடுக்க நான் எங்கே போவேன்?'' என்று கவலைப்பட ஆரம்பித்தார்.

தலைமை அமைச்சர் இன்னொரு பத்திரத்தை நீட்டினார். "இலாகாக்கள் கண்டு பிடிப்பதற்காக நூறு பேர் அடங்கிய ஆலோசனைக் குழு நியமித்திருக்கிறேன் பிரபு. பத்திரத்தில் கையெழுத்துப் போடுங்கள்.'' என்றார்.

மகாராஜா முகம் மலர்ந்தது. கையெழுத்திட்டவர் மீண்டும் கவலையுடன், "ஆலோசனைக் குழு கலபத்தில் தன் அறிக்கையை சமர்ப்பிக்காதே? வாங்குகிற சம்பளம் நீடிக்க வேண்டும் என்பதற்காகத் தாமதப்படுத்திக் கொண்டே போவார்களே? அதுவரை புதிய அமைச்சர்களுக்கு ஏதாவது வேலை தர வேண்டுமே?'' என்றார்.

பிரதம அமைச்சர் யோசித்து விட்டு, "அவரவர் உட்காரும் நாற்காலியைக் காலையில் ஒரு தரமும் மத்தியானம் ஒரு தரமும் துடைத்து விட்டு உட்காரச் சொல்லலாம் பிரபு.'' என்றார்.

மகாராஜா, "சபாஷ்.'' என்றார். "ஆனால் அது போதுமா? இடைப்பட்ட நேரத்தில் என்ன செய்வார்கள்? அவர்கள் வாங்குவது மக்களின் வரிப்பணம். அது வீணாக அனுமதிக்கலாமா?'' என்று கவலைப்பட்டார்.

பிரதம அமைச்சர் நீண்ட நேரம் யோசித்தார். பிறகு, "இனமும் நூறு காராபூந்திப் பொட்டலங்களுக்கு ஆர்டர் பண்ணி விடுகிறேன் பிரபு. காலையில் வந்ததும் ஒவ்வொரு மந்திரிக்கும் ஒரு காராபூந்தி பொட்டலம் தரப்படும்.''

"ஐந்து நிமிஷங்களுக்குள் தின்று தீர்த்து விடுவார்களே.''

"முடியாது பிரபு. ஒவ்வொரு காராபூந்தியாகத்தான் தின்ன முடியும். அதற்கு ஏற்ப காராபூந்தி யந்திரங்கள் செய்ய ஜப்பானுக்கு ஆர்டர் கொடுப்போம். காராபூந்தி யந்திரத்தை ஒவ்வொரு அமைச்சரின் மேஜையிலும் பொருத்தி விடலாம். வாயை அமைச்சர் 'ஆ' என்று திறந்து கொண்டு பட்டனை அழுத்தினால் ஒரே ஒரு காராபூந்தி மட்டும் எகிறி அவர் வாய்க்குள் விழும். காலையில் தொடங்கினால் ஒரு பாக்கெட் காராபூந்தி தின்று முடிப்பதற்குச் சாயந்திரம் ஆகி விடும் பிரபு.''

"சபாஷ், சபாஷ்! அருமையான வேலை கொடுத்தீர். மக்களின் வரிப்பணம் வீணாகுமோ என்ற கவலை இனி இல்லை" என்று மகாராஜா சந்தோஷப்பட்டார்.

"பிரபு. இன்னும் ஒரு சின்ன வேண்டுகோள். ஜப்பான் சென்று வர எனக்கு அனுமதி வேண்டும். காராபூந்தி இயந்திரங்களுக்கு 'ஆர்டர்' கொடுக்க வேண்டுமல்லவா?''

மகாராஜா தமது முழங்கையால் பிரதம அமைச்சரின் விலாவில் ஒரு இடி இடித்தார். கண்களைச் சிமிட்டிக் கொண்டே, "இக்பாக்குக்கு ஏற்பாடு செய்து கொள்ளத் தானே போகிறீர்? என்ன, ஸ்விஸ் பாங்கா, லெயிண்ட் கிட்லா?'' என்றார்.

"அதெல்லாம் சந்தேகத்துக்குரிய நாடுகளாகி விட்டன பிரபு. இன்று மொனாகோ தேசம்தான் பத்திரமானதாகக் கருதப்படுகிறது.''

"ஓகோ! சரி, ஃபிப்டி — ஃபிப்டி'' என்று நிபந்தனை போட்டார் மகாராஜா.

"அது தர்மமில்லை பிரபு; என்ன இருந்தாலும் நீங்க மகாராஜா அல்லவா? அதனால் ஸிக்ஸ்டி — ஃபார்டியாகவே இருக்கட்டும்'' என்றார் பிரதம அமைச்சர்.

"நான் பதவி ஏற்ற முடியரசு தினத்தன்று ஞாபகப்படுத்தும். உமக்குத் 'தர்மரட்சாமணி' என்று விருது வழங்க வேண்டும்!'' என்றார் மகாராஜா.

"பேராமங்கலம் அய்யாசாமி பாக வதர்னு சொல்றீங்களே, பேராமங்கலம் எங்கிருக்கு?''

"ஹி... ஹி... அடையாறுலே குடியிருக்கேன். அடையாறு அய்யாசாமின்னா யாரும் மதிக்க மாட்டாங்கன்னுதான்...''



"அடாணாவில் சொந்தமா ஒரு சாஹித்யம் செஞ்சிருக்கேன். அது இன்னைக்கு நான் பாடப் போற சபாவிலே முதன் முதலா அரங்கேறப் போகுது!''

"அட, அப்படியா! பாட்டு காமாட்சி பேரிலா, மீனாட்சி பேரிலா?''

"சபா காரியதரிசி பேரில்!''

— கரம்.



டாக்டர் பதில்கள்:

பக்கவாதம் வராமல் தடுக்க முடியுமா?

● ரமா சந்திரசேகர், வேலூர்—6.

● **பராலிடிக் ஸ்ட்ரோக் (பக்கவாதம்) ஏற்படுவதற்கும், போலியோ அட்டாக் ஏற்படுவதற்கும் உள்ள வித்தியாசம் என்ன? போலியோ வராமல் தடுப்பதற்குத் தடுப்பு மருந்து கொடுப்பது போல், பராலிடிக் ஸ்ட்ரோக் வராமல் தடுப்பதற்கு ஏதேனும் தடுப்பு மருந்து இருக்கிறதா?**

●● **டாக்டர் பி. ஆர். சுப்பிரமணியம், சென்னை — 18.**

பக்கவாதம் என்பது, ஒரு பக்கம் மட்டும் அதாவது கையும் காலும் செயல்படாமல் போவது. அவை தம் தசையின் பலத்தை இழந்து, அசைக்க முடியாத நிலை அடைவது. முகத்திலும் கோணல் தோன்றும். பெரும்பாலும் நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் வரும்.

முக்கியமாக, மூளை பாதிக்கப்படுவதே இதற்குக் காரணம். மூளை பாதிக்கப்படுவதற்குக் காரணம், அதற்குச் சத்துணவும் பிராண வாயுவும் அளிக்கும் இரத்தக் குழாய்கள் பாதிக்கப்படுவதே. இரத்தக் குழாய்கள் பாதிக்கப்பட்டால், மூளையின் அந்தப் பகுதி இறந்து விடுகிறது. எனவே தன்னுடைய பணிகளை இழந்து விடுகிறது. அதன் பணி, உறுப்புக்களை இயக்குவது; பேச்சுத் திறனை ஏற்படுத்துவது. வலதுபுறம் பாதிக்கப்பட்டால் இரண்டு சக்திகளையும் இழக்க நேரிடலாம். இடப்புறம் பாதிக்கப்பட்டால், உறுப்புக்கள் அசைவு மட்டும் பாதிக்கப்படும். பக்கவாதத்துக்குத் தடுப்பு மருந்து ஏதும் கிடையாது.

இளம்பிள்ளைவாதம், சாதாரணமாகக் குழந்தைகளையே பாதிக்கும். உடலில் உள்ள தசைகள் பலமிழந்து, அசைவு நிலை குறையும், அல்லது முழுமையாகச் சக்தியை இழக்கும். நாள்பட, உறுப்புக்கள் சுருங்கி, பலகீனமாகி, அங்கக் கோணல்களை ஏற்படுத்தும். காலா காலத்தில், தடுப்பு ஊசி போட்டு, தடுக்கக்கூடிய ஒரு நோய் இது.

இதற்குக் காரணி, பூதக் கண்ணாடியினாலும் பார்க்க முடியாத ஒரு நுண்ணிய (வைரஸ்) கிருமி. இது ஒரு குழந்தையிடமிருந்து, இன்னொரு குழந்தைக்குத் தொத்திப் பரவக் கூடிய நோய். இந்த நோயால் தண்டுவடம் பாதிக்கப்படுகிறது. தண்டுவடத்திலிருந்து நரம்புகள் புறப்படும் இடம் பாதிக்கப்படுகிறது.

சுருக்கமாகச் சொன்னால், பக்கவாதத்தில் டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் (மூளை) பாதிக்கப்படுகிறது. இளம்பிள்ளைவாதத்தில், வீட்டுக்கு அருகே உள்ள ஜங்ஷன் பாக்ஸ் பாதிக்கப்படுகிறது!

● **குரும்பல் பாலமணி — பெங்களூர் — 8.**

● **தற்காலத்தில் பல வைட்டமின் மாத்திரைகளும், உடல் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்து நிறைந்த டானிக்குகளும் கிடைப்பதால் இவற்றையே உணவிற்குப் பதிலாக உண்டு உயிர் வாழ முடியுமா?**

●● **டாக்டர் சந்திரசேகர சாண்டில்யா, சென்னை.**

மாத்திரைகள், வைடமின்கள், டானிக்குகள் எல்லாம், உட்கொள்ளும் உணவுப் பொருட்களை உடம்பின் அணுக்களுக்குக் கொண்டு சேர்க்கும் வாகனங்களாகவே (Catalyst) உதவுகின்றன. உணவு கண்டிப்பாக மனிதனின் பசிக்கும், ஊட்டத்திற்கும், சக்திக்கும் தேவை. மருந்து மட்டும் சாப்பிட்டு உயிர் வாழ முடியாது!

தொகுப்பு: **எஸ். வி. என்.**





* ஜெயபுரம் உயர்நிலைப்பள்ளி: கட்டட வசதி இல்லை...

"ஒரேயொரு தொழிற்சாலையையும் மூடிவிட்டார்களே..."

— வருத்தப்படுகிறார் தி. மு. க. எம்எல்.ஏ!

"என் தொகுதியிலுள்ள ஒரேயொரு தொழிற்சாலை, சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலைதான். 85—இல் உற்பத்தியை ஆரம்பித்தது இது. 88—இல் நஷ்டக் கணக்குக் காட்டி மூடப்பட்டது. பிறகு நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 89 இல் மீண்டும் திறக்கச் செய்தோம். இருந்தும் பயனில்லை. அதிகாரிகள் மேலும் மேலும் நஷ்டக் கணக்குக் காட்டி மறுபடியும் மூடச் செய்து விட்டனர். கல்லியில் எழுதி, எப்படியாவது அதை மீண்டும் திறக்கச் செய்தால், சந்தோஷப்படும் முதல் மனிதன் நான்தான். நீங்களே அதை நேரில் வந்து பாருங்கள்..." என்று தெற்குப்பட்டிலிருக்கும் அந்தத் தொழிற்சாலைக்கு நம்மை அழைத்துச் சென்றார், நாட்றம் பள்ளித் தொகுதி எம்.எல்.ஏ. வான (தி. மு. க.) ஆர். மகேந்திரன்.

"முதலில் ஆயிலின் தரம் நன்றாயில்லை. அதற்குக் காரணம் தண்ணீர்தான் என்றார்கள். அதற்காகப் பாலாற்றிலிருந்து பதி

* பேராம்பட்டு: இங்கே வகுப்பு நடத்த விதிகள் இடந்தரவில்லையாம்!





* ஜி. பக்தவத்சலம்: பரிசுப் பணம் கிடைத்து விட்டது!



* பேராம்பட்டு ரேஷன் கடை: அளவு குறைகிறது...

* பொம்மக்கா: அதிகாரி கேட்ட கேள்வி...



னான்கு லட்சம் செலவு செய்து நல்ல தண்ணீர் கொண்டு வந்தார்கள். அதன் பிறகு எப்படி ஆயில் தரமில்லாமல் போகும் என்பது விளங்கவில்லை! நஷ்டத்திற்கு இன்னொரு முக்கியமான காரணம் வாடகை. இந்தத் தொழிற்சாலை வனத் துறைக்குச் சொந்தமானது. அதற்கு வாடகையாக ஆண்டுதோறும் இந்தத் தொழிற்சாலை வனத்துறைக்குப் பதினைந்து லட்ச ரூபாய் தந்து கொண்டிருந்தது. ஒரு கிலோ சந்தன எண்ணெயின் விலை 4,500 ரூபாய். ஆனால் பல கிலோ எண்ணெய் 'சாம்பிள் சாம்பிள்' என்று அவ்வப்போது எடுத்துச் செல்லப்பட்டது.

''சரி, ஆயில் எடுப்பதில்தான் நஷ்டம் என்று ஒரு பேச்சுக்கு வைத்துக் கொண்டாலும், சந்தன மரக்கட்டைகளிலிருந்து 'சிப்ஸ்' (சந்தன மாலைகளுக்கு உபயோகிக்கப்படும் சீவல் மாதிரி) எடுப்பதில் நல்ல லாபம். அதற்கு வெளிநாடுகளில் ஏக கிராக்கி! எனவே, ஆயில் எடுப்பதை நிறுத்தி விட்டு 'சிப்ஸ்' தயாரிக்கும் பணியை மட்டும் விரிவுபடுத்தலாம் என்று நாங்கள் சொன்னதை அதிகாரிகள் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்கள். நாங்கள் ஒவ்வொருவரும் இங்கே வேலைக்குச் சேர்ந்த போது, அதி



* மகேந்திரன் எம். எல். ஏ.: நம் கூடவே தொகுதிக்கு வந்தார்!

காரிகளுக்கு ஆயிரக்கணக்கில் லஞ்சம் கொடுத்துத்தான் சேர்ந்தோம். இப்போது எல்லாமே கூண்டோடு போச்சு...!'' என்றார்கள் நாம் சந்தித்த தொழிலாளர்கள் அனைவரும்.

''பார்த்தீர்களா சார்... இதற்கு எம். எல்.

ஏவான நான் என்ன செய்ய முடியும்? மூடப்பட்ட ஆலையை அமைச்சரிடம் போய் மன்றாடித் திறக்கச் செய்தேன். அதிகாரிகள் நிர்வாகத்தைச் சரிவரச் செய்யாததால் யாருக்கு நஷ்டம்? எங்கள் அரசுக்குத்தான் கெட்ட பெயர். எழுபத்திரண்டு தொழிலாளர்களுக்கு வேலை போனது. அதனால் தொகுதியில் எனக்கும் கெட்ட பெயர். இதையெல்லாம் மக்களுக்கு நீங்கள்தான் எடுத்துச் சொல்ல வேண்டும்...'' என்றார் எம்.எல்.ஏ.!

மீண்டும் நாங்கள் நாட்றம்பள்ளிக்குத் திரும்பும் வழியில், நாட்றம்பள்ளி யூனியன் ஆபீஸ் பஸ் ஸ்டாப் நிழற்குடை மேற்கூரையின்றி இருந்ததைச் சுட்டிக் காட்டிய போது, யூனியன் சேர்மன் எஸ். ஏ. ராஜாவிடம் அழைத்துச் சென்றார் எம். எல். ஏ. அவர் நாட்றம்பள்ளி டவுன் பஞ்சாயத்துத் தலைவர் ஜே. டி. துரையிடம் அழைத்துச் சென்றார்.

அவரிடம், ''தயவு செய்து நாளையே அந்த நிழற்குடைக்கான மேற்கூரையைப் போட்டு விடுங்கள். இல்லையென்றால் நான்தான் அதைச் செய்யவில்லை என்று கல்கியில் எழுதி விடுவார்கள்'' என்றார் எம்.எல்.ஏ.

''அது ஒன்றும் பிரச்னையில்லை. நாளையே அதைப் போடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து விடுகிறேன். அதோடு, இன்னும் ஒரு சில வாரங்களில் நாட்றம்பள்ளிக்குப் பாலாற்றுத் தண்ணீர் வழங்கும் திட்டமும் செயல்படத் துவங்கிவிடும். எல்லா வேலைகளும் முடியும் தருவாயில் உள்ளன!'' என்றார் இ. காங்கிரஸைச் சேர்ந்த ஜே. டி. துரை.

அடுத்தபடியாக ஜெயபுரம் உயர்நிலைப் பள்ளிக்குச் சென்றோம். 480 மாணவ, மாணவியர் படிக்கும் இப்பள்ளிக்குக் கட்டட வசதியே இல்லை. பழைய கட்டடங்களெல்லாம் இடிந்துவிடும் நிலை என்பதால் கூரைக் கொட்டகைகள் போட்டு வகுப்புகள் நடந்து கொண்டிருந்தன. அந்தக் கூரைக் கொட்டகைகளும் காற்று மழைக்குத் துளியும் தாக்குப் பிடிக்காத நிலை. புது வகுப்பறைகள் கட்டுவதற்கான அடித்தளம் போடப்பட்டு அப்படியே பல வருடங்களாகக் கிடந்தது. நம்மையும் அழைத்துக் கொண்டு தலைமை ஆசிரியரைச் சந்தித்தார் எம். எல். ஏ.


''சார், பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கான நிதி வசதி வேண்டுமானால், உடனடியாகக் கிடைக்காமல் இருக்கட்டும். ஆனால், இந்தக் கூரைக் கொட்டகைகளைக் கூடவா ஊர் மக்களால் சரி செய்துதர முடியாது? இந்த ஊரில் வசதி படைத்தவர்களே இல்லையா? உடனடியாகப் பள்ளியின் பெற்றோர் — ஆசிரியர் சங்கத்தைக் கூட்டுங்கள். நானும் என்னால் முடிந்ததைத் தருகிறேன். நீங்களும் தாருங்கள். நம்மைப் பார்த்து மற்றவர்களும் தராமல் போக மாட்டார்கள். நிச்சயம் தருவார்கள். அதைக் கொண்டு, முதலில் கூரைக் கொட்டகைகளைச் சரிப்படுத்துவோம். பிறகு, அரசிடம் நிதி பெறுவதற்கான வேலைகளைத் துரிதப்படுத்துவோம். நாம் இப்போது பேசுவதையெல்லாம் கல்கியில் எழுதுவார்கள். அதனால் ஏனோ தானோவென்று இருந்துவிட வேண்டாம்!'' என்று தலைமையாசிரியிடம் சொன்னார் எம். எல். ஏ.

பிறகு அதே ஊரிலுள்ள ரேஷன் கடைக்குச் சென்றோம். கிலோ ரூ. 3.25க்கு வழங்கப்பட்ட அரிசி மூட்டையைப் பார்த்த போது நம்மோடு சேர்ந்து எம். எல். ஏ. வுக்கும் அதிர்ச்சி. காரணம், அந்த அரிசி முழுமையும் புழுப் பிடித்த நிலை. சும்மா கொடுத்தாலும் வாங்கத் தயங்குவார்கள். அந்த அரிசியைத்தான் மக்களுக்கு வழங்கிக் கொண்டிருந்தார்கள்!

அதைப் பார்த்ததும், ''இந்த அரிசியை யாருக்கும் தரக் கூடாது. உடனடியாக இதைத் திருப்பியனுப்புங்கள். இதை ஏன் நீங்கள் முன்னமேயே திருப்பியனுப்பவில்லை?'' என்றார் எம். எல். ஏ.

மௌனம் சாதித்த அந்த ஊழியர்களிடம், ''உங்களுக்கென்ன, அரசாங்கம் இப்படிப்பட்ட அரிசிதான் தருகிறது என்று சுலபமாக மக்களிடம் சொல்லி விடுவீர்கள். அதனால் யாருக்குக் கெட்ட பெயர். உங்கள் தவறுகளுக்கெல்லாம் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் நாங்கள்தான் பொறுப்பேற்க வேண்டியிருக்கிறது...'' என்று ரொம்பவும் கோபமாகப் பேசினார் எம்.எல்.ஏ.

''எல்லாம் சரிதான். உங்கள் சொல்லுக்கு எந்த அளவுக்கு அவர்கள் மரியாதை



''கல்யாணம் பண்ணிக்கிட்டா இராணுவ வீரரைத்தான் பண்ணிக்குவேங்கிறியே, என்ன தேசப்பற்று!''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. அவர்தான் கட்டளைக்கு உடனே அடிபணிவார்!''

— முத்து.

கொடுப்பார்கள் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?'' — திரும்பும் போது, எம்.எல்.ஏ.விடம் கேட்டோம்.

''நான் மீண்டும் ஜெயபுரம் செல்லும் போது பார்க்கிறேன்...'' என்றார் அவர்.

''நான் யாருமற்ற அனாதை. கணவனும் இல்லை. வயதும் ஆகிவிட்டது. முதியோர் பென்ஷனுக்காகப் பல முறை மனுச் செய்து விட்டேன். ஒன்றும் வந்தபாடில்லை. ஒரு முறை நான் மனுக் கொடுக்கச் சென்ற போது ஓர் அதிகாரி, 'நீ எப்படி புருஷன் இல்லாமல் இருக்கிறாய்? நம்ப முடியவில்லையே...!'' என்றார். எனக்கு அவமானமாகப் போய் விட்டது சார்...'' என்று கண்களில் கண்ணீர் முட்டச் சொன்னார் பரமுத்தம்பட்டியைச் சேர்ந்த பொம்மக்கா என்ற பெண்மணி.

''பார்த்தீர்களா சார், அதிகாரிகள் கேட்கும் கேள்வியை... இதை என்னைப் போன்ற அரசியல்வாதிகள் அதிகாரிகளிடம் தட்டிக் கேட்டால், உங்களைப் போன்ற பத்திரிகையாளர்கள் உடனே, 'அரசியல்வாதிகள் அதிகாரிகளை மிரட்டுகிறார்கள். அப்புறம் எப்படி வேலை நடக்கும்?' என்று தான் எழுதுவீர்கள். ஆனால் உண்மை எப்படி இருக்கிறது பாருங்கள்...'' என்று நம்மிடம் கூறிய எம். எல். ஏ., உள்ளூர் தி.மு.க. பிரமுகர் ஒருவரை அழைத்து, ''நான் திருப்பத்தூருக்கு வரும் திங்கட்கிழமையன்று வருகிறேன். அப்போது இந்தப் பெண்மணியை அழைத்து வாருங்கள். இந்தப் பெண்மணியையும் அழைத்துக் கொண்டு அதிகாரிகளிடம் போய் நியாயம் கேட்போம்...'' என்றார்.

பேராம்பட்டிலுள்ள நியாய விலைக் கடைக்குச் சென்றோம். பாமாயில் வழங்கிக் கொண்டிருந்தார்கள். அங்கு அரிசியெல்லாம் நல்லபடியாகவே இருந்தன. வழங்கப்பட்ட பாமாயில் பொட்டலங்களாக வழங்கப்படவில்லை. அரை கிலோ பாமாயில் அளவுக்கு ஒரு காலி ஹார்லிக்ஸ் பாட்டிலில் அளந்து அளந்து ஊற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வழங்கும் பாமாயின் எடை சரியானதுதானா? எம். எல். ஏ.வையே சரிபார்க்கச் சொன்னோம்.

உடனே, ஒரு கார்டுக்கு வழங்கப்பட்ட பாமாயிலை வாங்கி அந்த ரேஷன் கடை ஊழியர்களையே தராசில் வைத்து எடை போடச் சொன்ன போது, சுமார் ஐம்பது கிராம் அளவுக்கு எடை குறைந்தது. ஏன் இப்படி? அந்த ஊழியர்களைக் கேட்ட போது, அது மட்டும் அளவையில் சிறிது தவறிப் போயிருக்கிறது என்பதாகச் சமாளித்தார்கள்.



''என் கச்சேரிக்கு ரசிகர்கள் வந்தபடி இருந்தா... மங்களம் பாடறப்ப ஹால் ஃபுல், தெரியுமா?''
''உங்க கச்சேரிக்கு அடுத்தபடியா டான்ஸ் ப்ரோக்ராம் இருந்துதோ?''

''சாதாரணமாக ஒரு வியாபாரி, தம் கடையில் எடை போட்டுக் கொடுப்பதற்குப் பதிலாக ஹார்லிக்ஸ் பாட்டிலில் அளந்து கொடுத்தால் அது சட்டப்படி குற்றம். ஆனால் அரசாங்கம் நடத்தும் ரேஷன் கடைகளிலேயே இப்படிச் செய்தால் அது குற்றமாகாதா? அரசாங்கமே உங்களை இப்படித்தான் வழங்கச் சொல்லுகிறதா?'' என்று அந்த ஊழியர்களிடம் கேட்ட போது அவர்களிடம் பதிலில்லை.

பேராம்பட்டில் இன்னொரு விசித்திரம். அங்குள்ள பள்ளிக்குக் கட்டட வசதி போதவில்லை. அதுவும் மேல்நிலைப் பள்ளி. அதே ஊரிலுள்ள ஆஸ்பத்திரி, புதிய கட்டடம் கட்டி இடம் மாறி விட்டதால் பள்ளிக்கு அருகிலுள்ள பழைய ஆஸ்பத்திரி கட்டடம் இப்போது சும்மாதான் கிடக்கிறது. சரி, அதைக் கொஞ்சம் பழுது பார்த்துக் கொடுத்தால், மரத்தடிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு வசதியாக இருக்குமே என்று ஊர் மக்கள் நினைத்தார்கள். அதற்காக அதன் ஓடுகளையெல்லாம் பிரித்துப் பழுது பார்க்க ஆரம்பித்தார்கள்.

அவ்வளவுதான்! சுகாதாரத் துறை அதிகாரிகள் சும்மா இருப்பார்களா? இப்படியெல்லாம் ஒரு துறைக்கான கட்டடத்தை இன்னொரு துறையின் வசதிக்காகப் பயன்படுத்துவது விதிகளுக்கு முரணானது என்று தடைவிதித்து விட்டார்கள்! இப்போது, ஓடுகள் பிரிக்கப்பட்ட அக்கட்டடம் காற்று மழையில் மொட்டையாக நின்று பாழாகிக் கொண்டிருக்கிறது. ஆகா! நமது அரசாங்க விதிமுறைகளெல்லாம் ஜனங்களுக்கு எதிராக எப்படியெப்படியெல்லாம் சிலிர்த்துக் கொண்டு நிற்கின்றன!

இப்படி நாம் அந்த மொட்டைக் கட்டடத்தைப் பற்றி மக்களிடம் விசாரித்துக் கொண்டிருந்த போது, சில மாணவர்கள் நம்மிடம் வந்து, தங்கள் பள்ளியின் விளையாட்டுத் துறை ஆசிரியர் தினமும் குடித்து விட்டுத்தான் பள்ளிக்கு வருகிறார் என்றும் அதுபற்றித் தலைமை ஆசிரியரிடம் விசாரிக்கும்படியும் கூறவே, அதை நாம் எம். எல். ஏ.விடம் சொல்லி, விசாரிக்கச் சொன்னோம்.

நம்ம ஊரு பூவாத்தா



பள்ளிக்குச் சென்று தலைமை ஆசிரியரை விசாரித்த போது, அந்த ஆசிரியர் அன்று அரை நாள் விடுமுறையில் சென்று விட்டதாகவும், தாம் அவரை விசாரித்து ஆவன செய்வதாகவும் சொன்னார் தலைமை ஆசிரியர்.

அடுத்து சின்னசொக்கனாம்பட்டி. அவ்வூ ரில் மேல்நிலை நீர்த்தொட்டி இருக்கிறது. கிணறு இருக்கிறது. மோட்டார் இருக்கிறது. ஆனால், மேல்நிலை நீர்த் தொட்டிக்கு பைப் கனெக்ஷன் கொடுத்து நீரேற்றுவதில்லை. ராட்டினம் போட்டுத் தான் சேந்திக் கொள்ள வேண்டியிருக்கிறது என்பது மக்களின் குறை.

அதன் பஞ்சாயத்துத் தலைவர் தணிகாசலத்தை அழைத்தார் எம். எல். ஏ. "இந்தக் குறையை நிவர்த்தி செய்வதில் உங்களுக்கென்ன கஷ்டம்?" என்று கேட்டார். "ஒன்றுமில்லை!" என்றார் அவர்.

"அப்படியானால் நாளைக்கே பைப் கனெக்ஷன் கொடுத்து விடுங்கள்!" என்றார் எம். எல். ஏ. "சரி" என்றார் அவர்.

சபரி மலை செல்வதற்காக மாலை போட்டிருந்த அந்தத் தி. மு. க. பஞ்சாயத்துத் தலைவர் தணிகாசலம், தாம் வாக்குக் கொடுத்தபடி அடுத்த நாளே அதைச் செய்திருப்பார் என்று நம்புகிறோம்!

இப்படிச் சில ஊர்களுக்கு நாம் எம்.எல்.ஏ. வுடன் திடீர் விசிட் செய்து விட்டுக் கடைசியாகச் சந்தக்குப்பம் என்ற சிறு கிராமத்திற்கு வந்து சேர்ந்த போது முன்னிரவு ஆகிவிட்டது. ரோடு வசதியில்லாத கிராமம். கடைகள் கூட அருகில் இல்லை. எது வாங்க வேண்டுமானாலும் சுமார் நான்கு கி. மீ. தூரத்திலிருக்கும் கந்திலிக்குத் தான் செல்ல வேண்டும். சாலை வசதியே சரியாக இல்லாத போது பஸ் வசதி எப்படியிருக்க முடியும்? எனவே, மக்களெல்லாம் கால் நடைதான்!

"என்னங்க... எப்படியிருக்கீங்க?" என்று அவ்வூர் ஜனங்களிடம் கேட்டார் எம். எல். ஏ.

"பாருங்க. எங்க ஊருக்கு லைட் வசதி கூட இல்லை. இருட்டுலதான் இருக்கோம்... ஆமா... நீங்க யாருங்க?" என்றார் எம்.எல். ஏ.வைப் பார்த்து ஒருவர்.

"என்னங்க என்னைத் தெரியலையா? நான்தான் உங்க எம். எல். ஏ. மகேந்திரன்..."

கிராமப் பின்னணியில் அமைந்துள்ள வழக்கமான காதல் கதை. தொடக்கத்திலேயே கதையின் போக்கு புரிந்து விட்டாலும் அதனை விறுவிறுப்புக் குன்றாமல் எடுத்துச் செல்ல இயக்குனர் மேற்கொண்டிருக்கும் முயற்சிகள் தெளிவு.

அவற்றுக்கு உதவியாக இயற்கை வனப்பை வெளிப்படுத்தும் படப்பிடிப்பு; தேவாவின் இசையமைப்பில் இடம்பெற்றுள்ள பாடல்கள்; இரண்டே அடி உயரமுள்ள சித்திரக்குள்ளனின் ... சாரி, சித்திரகுப்தனின் (அறிமுகம்) நடிப்பு.

படித்து முடித்துக் கிராமத்துக்குத் திரும்பும் இளைஞராக, வழக்கமான பாத்திரத்தில் முரளி. பிற்பகுதியில் நன்றாகச் சோபிக்கிறார். அவருடைய உள்ளத்து உணர்ச்சிக் கொந்தளிப்புகளைப் புரிந்து கொள்ளும் கட்டத்தில் கௌதமி பளிச்.

"அப்பா யார் என்று தெரியாதவள்" எனக் கூறி, அதனாலேயே பெண் பார்க்க யாரும் வரவில்லையென்று தோழிகள் எள்ளி நகையாடுவதைத் தொடர்ந்து தாயிடம் சென்று உண்மையைச் சொல்லும்படி வாதாடும் போதும், திண்ணையில் தையல் மிஷினில் உட்கார்ந்தவாறே அலட்சியப் பார்வையை முறை மாமன் ஆனந்தராஜை நோக்கி வீசி அவருடைய காதலை உதறித் தள்ளும் போதும் கௌதமிக்கு அனுபவம் கைகொடுக்கிறது.

சிறைக்குச் சென்று விடுவதாகக் காரணம் காட்டி ஆனந்த ராஜ் அடிக்கடி காணாமல் போய் விட்டாலும் கண்ணில் படும் நேரங்களில் வில்லத்தனம் சுடர் விடுகிறது.

நகைச்சுவை என்கிற பெயரில் ஃப்ளாஷ் பேக் தொடக்கத்தில் இடம் பெறும் தாத்தா – பாட்டி சரசமும் அவர்கள் ஒதுங்கும் இடங்களில் எல்லாம் கௌதமியும் தோழிகளும் சூழ்ந்து கொண்டு லூட்டி அடிப்பதும் தேவைதானா?

— சி. ஆர். கே.

''இருட்டுல மூஞ்சி தெரியலைங்க,'' என்று ஒருவர் சொல்ல, இன்னோர் இளைஞர், ''வாங்க சார். இதுவரை எந்த எம். எல். ஏ.வும் இப்படி எங்களூருக்கு வந்து அக்கறையாக விசாரித்ததே இல்லை. நீங்கள்தான் முதல் ஆள் ...'' என்றார்.

அவரிடம் பஞ்சாயத்துத் தலைவரைக் கூட்டி வரச் சொன்னார் எம். எல். ஏ. அவர் வந்தார். நம்மை அவரிடம் அறிமுகம் செய்து வைத்தார் எம். எல். ஏ.

''நான்தாங்க பரதேசிப்பட்டி பஞ்சாயத்துத் தலைவர் பவுன்ராஜ். என்னோட பஞ்சாயத்தில சேர்ந்ததுதாங்க இந்தக் கிராமம். எங்க பஞ்சாயத்தோட வருஷ வருமானம் 135 ரூபாய்தான். அதை வெச்சுக்கிட்டு என்னங்க செய்ய முடியும்?'' என்றார் அவர்.

''பி. டி. ஓ. கிட்டச் சொல்லி, முதல்ல இந்த ஊருக்கு ஒரு லைட்டாவது போடச் சொல்லுங்க. அப்புறம் ரோடு. நானும் சொல்றேன். அவர் செய்யலைன்னா நானாவது என் சொந்தச் செலவுல லைட்டுப் போட்டுத் தர்றேன் ...'' என்றார் எம். எல். ஏ.

விளக்குப் போடப்பட்டதா இல்லையா என்பதை ஊர் மக்கள்தான் எழுத வேண்டும்!

கடைசியாக பெரியகசிநாய்க்கன் பட்டிக்கு உயர்நிலைப்பள்ளி தேவையென் பதைச் சுட்டிக்காட்டி ஏராளமான கையெழுத்துக்களுடன் ஊர் மக்கள் நமக்கு எழுதியிருந்த கடிதத்தைச் சுட்டிக்காட்டினோம்.

''இந்த ஊர் திருப்பத்தூருக்கு அருகில் இருப்பதால், அங்கு உயர்நிலைப் பள்ளி தொடங்குவது பற்றிய விஷயத்துக்கு அரசு முன்னுரிமை கொடுக்கவில்லை...'' என்ற எம். எல். ஏ., ''வாருங்கள், அவ்வூர்ப் பஞ்சாயத்துத் தலைவரைச் சந்தித்துப் பேசுவோம்'' என்று நம்மை அழைத்துச் சென்றார்.

பஞ்சாயத்துத் தலைவர் கனக சுந்தரத்திடம், ''நான் ஒவ்வொரு திங்கட் கிழமையும் திருப்பத்தூருக்கு வருவது உங்களுக்கும் தெரியும். நீங்களும் நிச்சயம் வருவீர்கள். வரும் போது தயவு செய்து என்னையும் சந்தியுங்கள். நாம் உயர்நிலைப் பள்ளி கொண்டு வருவதற்கான முயற்சிகளைச் சேர்ந்தே செய்வோம்!'' என்றார்.

"நான் 88 – 89 இல் நாட்றம்பள்ளியிலுள்ள மேனிலைப் பள்ளியில் முதல் மார்க் வாங்கிப் பத்தாவது தேறினேன். அதற்கு முன் எங்கள் பள்ளிக்கு வந்திருந்த எம்.எல்.ஏ. மகேந்திரன் அவர்கள், பத்தாம் வகுப்பில் முதல் மதிப்பெண் வாங்கும் மாணவனுக்கு இருநூறு ரூபாய் பரிசு தருவதாக அறிவித்திருந்தார். ஆனால் இதுவரை எனக்கு அத்தொகை வழங்கப்படவில்லை... இப்போது திருப்பத்தூரிலுள்ள டொமினிக் சேவியோ மேனிலைப் பள்ளியில் +2 படித்துக் கொண்டிருக்கும் எனக்கு அத்தொகை வழங்கப்பட்டால் மிகவும் உதவியாக இருக்கும்...'' என்று ஜி. பக்தவத்சலம் என்ற மாணவர் நமக்கு எழுதியிருந்த கடிதம் பற்றி எம். எல். ஏ. விடம் சொன்னோம்.

''நான் அப்படி வாக்குறுதி கொடுத்தது உண்மைதான். பிறகு யாரும் என்னிடம் அதுபற்றிக் குறிப்பிடாததால் மறந்து போய் விட்டேன். வாருங்கள், இப்போதே அந்த மாணவரைச் சந்தித்துக் கொடுத்து விடுவோம்'' என்று அப்பள்ளிக்கு அழைத்துச் சென்றார்.

தலைமை ஆசிரியரிடம் சென்று விஷயத்தைச் சொன்னதும், அவர் சந்தோஷமாக அந்த மாணவரை வகுப்பிலிருந்து அழைத்து வரச் செய்தார். எம். எல். ஏ. மகேந்திரன், இருநூறு ரூபாயை அத்தலைமை ஆசிரியரிடமே கொடுத்து அம்மாணவருக்கு வழங்கச் செய்தார்!

— இளங்கோவன்.

வண்ணப்படங்கள்: சுபா.

சிவகாமியின் சபதம்



நாற்பத்தோராம் அத்தியாயம்
பாசறை

புத்த விஹாரத்திலிருந்து புறப்பட்ட சிறிது நேரத்துக்கெல்லாம், அக் குதிரை வீரர்களில் மூன்று பேர், பரஞ்சோதிக்கு முன்னாலும், மூன்று பேர் பின்னாலுமாகப் பரஞ்சோதியைத் தங்களுக்கு நடுவிலேயே விட்டுக்கொண்டு சென்றார்கள்.

பொழுது நன்றாய் விடிந்த பிறகு, பரஞ்சோதி அவர்களுடைய தோற்றத்தைக் கவனித்தான். அவர்கள் திடகாத்திரமுள்ள ஆஜானுபாகுவான மனிதர்கள் என்று தெரிந்துகொண்டான்.

இந்த வீரர்கள் ஏதோ ஒரு சைனியத்தைச் சேர்ந்தவர்களாய்த்தான் இருக்க வேண்டும். முக்கியமான யுத்த காரியமாகத்தான் போய்க்கொண்டிருக்கிறார்கள். இவர்களுடன் தன்னை ஏன் அந்தப் புத்த பிக்ஷு சேர்த்து அனுப்பினார்?

நேரமாக ஆக, பரஞ்சோதியின் மனக் கலக்கம் அதிகமாயிற்று. அவன் அந்த வீரர்களுக்கு முன்னால் போகவோ, பின்னால் போகவோ முயன்ற போதெல்லாம், அவர்கள் அதற்கு இடங்கொடாமல் அவனை நடுவிலேயே விட்டுக்கொண்டு போனார்கள். இதைப் பார்க்கப் பார்க்க அவன் உள்ளத்தில் தனக்கு இவர்கள் வழிகாட்டி அழைத்துப் போகிறார்களா அல்லது சிறைப்படுத்திக் கொண்டு போகிறார்களா என்ற சந்தேகம் உதித்தது.

ஸ்ரீபர்வதம் வடக்கே கிருஷ்ணா நதிக் கரையில் இருக்கிறதென்பது பரஞ்சோதிக்குத் தெரியும். ஆனால் அதிகாலையில் கிளம்பியதிலிருந்து இந்த வீரர்களோ மேற்குத் திசையை நோக்கியே போய்க் கொண்டிருந்தார்கள். ஒருவேளை கொஞ்ச தூரம் மேற்கு நோக்கிப் பிரயாணம் செய்த பிறகு, வடக்கு நோக்கித் திரும்பலாம் என்று அவன் எண்ணியபடியும் நடக்கவில்லை.

சூரியன் உச்சி வானத்திற்கு வரும் வரையில் அவர்களுடன் பிரயாணம் செய்த பின்னர், பரஞ்சோதி, தான் உண்மையில் சிறையாளியா இல்லையா என்பதை நிச்சயமாய்த் தெரிந்துகொள்ள விரும்பினான். அவ்விடத்தில் வடக்கு நோக்கித் திரும்பிய பாதையில் அவன் தன் குதிரையைத் திருப்பினான்.

கண் மூடித் திறக்கும் நேரத்தில், அந்த ஆறு குதிரை வீரர்களும் தன்னைச் சூழ்ந்து நிற்பதைக் கண்டான். அவர்களுடைய வேல்களின் முனைகள் அவனுடைய குதிரை மீது உராய்ந்து கொண்டிருந்தன.

எண்ணெய் ஊற்றி ஆயத்தமாய் வைத்திருக்கும் தீபத்தின் திரியானது அதன்மீது தீப்பட்டதும் சுடர்விட்டு எரியத் தொடங்குவதுபோல், பரஞ்சோதியின் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த ஆத்திரம், இப்போது கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது. கோபத்தினால் அவனுடைய இரத்தம் கொதித்தது.

கையிலே வேலை எடுத்தான். அதைத் தனக்கு அருகில் இருந்தவன்மீது பிரயோகிப்பதற்காக ஓங்கினான்.

ஆகா! என்ன ஏமாற்றம்! ஓங்கிய வேல் எங்கேயோ போய் விழுந்தது. வேலுக்கு

உடையவனும் தொப்பென்று தரையில் விழுந்தான். எப்படி விழுந்தோம் என்பதே முதலில் பரஞ்சோதிக்குத் தெரியவில்லை. அப்புறம் தன் உடம்பின்மீது கயிறு ஒன்று சுற்றிக் கொண்டிருப்பதைக் கண்டான். அந்த வீரர்களில் ஒருவன் சுருக்குப் போட்ட கயிற்றைத் தன்மீது எறிந்து, தன்னைக் கீழே இழுத்துத் தள்ளி விட்டான் என்பதை அறிந்தான்.

இரண்டாவது தடவை இவ்விதம் சூழ்ச்சியினால் தான் வெல்லப்பட்டதை நினைத்த போது, பரஞ்சோதிக்கு ஒரு பக்கம் வெட்கமும் இன்னொரு பக்கம் ஆத்திரமும் பொங்கின.

அவனுடைய குதிரையோ தன் எஜமானனுக்கு இனிமேல் தன்னால் பயனில்லையென்று உணர்ந்து கொண்டதுபோல், வந்த வழியே திரும்பி ஓடிக் கொண்டிருந்தது.

தப்பிச் செல்வதற்கு இவ்விதம் வழியே இல்லாமற் போகவே, "இனிப் போராடுவதில் பயனில்லை; நடப்பது நடக்கட்டும்" என்று பரஞ்சோதி சும்மா இருந்தான்.

அந்த வீரர்களில் மூவர் குதிரை மீதிருந்து இறங்கிவந்து பரஞ்சோதியின் கரங்களை முதுகுப் பக்கம் சேர்த்து, பின்கட்டு முன்கட்டாகக் கட்டினார்கள்.

அந்த ஆறு குதிரைகளுக்குள்ளே அதிக வலிவும் ஆகிருதியும் உள்ள குதிரையின் மீது அவனை ஏற்றி வைத்தார்கள். அவனுக்குப் பின்னால், அவ் வீரர்களில் ஒருவனும் உட்கார்ந்து கொண்டான். மறுபடியும் குதிரைகள் மேற்குத் திசையை நோக்கிச் சென்றன.

அஸ்தமிக்க ஒரு ஜாமம் இருக்கும் பொழுது, பரஞ்சோதி தனக்கு முன்னால் ஓர் அபூர்வமான காட்சியைப் பார்த்தான்.

அப்போது அவர்கள் சென்ற பாதையானது, வரவர மேடாகி வந்த பீடபூமியின் உச்சியை யடைந்திருந்தது. அங்கிருந்து பார்க்கும்போது வெகு தூரத்துக்கு வெகு தூரம் சமவெளிப் பிரதேசமாகக் காணப்பட்டது. அந்தப் பிரதேசத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் சைனியம் தண்டு இறங்கியிருந்தது.

ஆயிரக் கணக்கான போர் யானைகள் கருங்குன்றுகளைப் போல் வரிசைவரிசையாக அங்கு நின்றன. அந்தக் கருங் குன்றுகளுக்கு இடையிடையே அடித்திருந்த கூடாரங்கள் வெண்ணிற மணற் குன்றுகளைப் போல் தோன்றின. மற்றும் எண்ண இயலாத குதிரைகள், ஒட்டகங்கள், ரிஷபங்கள், ரதங்கள், வண்டிகள் ஆகியவை எங்கெங்கும் காணப்பட்டன. சர்க்கரை இறைந்து கிடக்கும் இடத்தில் மொய்க்கும் எறும்புகளைப்போல், லட்சோப லட்சம் வீரர்கள் சில இடங்களில் நெருங்கியும், சில இடங்களில் பரந்தும், வெகு தூரத்துக்கு வெகு தூரம் காணப்பட்டார்கள்.

கூடாரங்களின் மேலே வரிசை வரிசையாகக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. எல்லாவற்றுக்கும் நடுநாயகமாக ஒரு பிரம்மாண்டமான கொடி வானளாவிப் பறந்து கொண்டிருந்தது.


கொந்தளித்துக் கொண்டிருக்கும் சமுத்திரத்தை நெருங்கும் போது கேட்கும் 'ஹோ' என்ற பேரிரைச்சலைப் போல் இனந்தெரியாதபடி பல ஒலிகள் வந்து கொண்டிருந்தன.

இந்தக் காட்சியைப் பார்த்த பரஞ்சோதியின் வாயிலிருந்து "ஆஹா!" என்ற சத்தம் எழுந்தது.

அங்கே தண்டு இறங்கியிருப்பது பல்லவ சைனியந்தான் என்று எண்ணிய பரஞ்சோதியின் உள்ளத்தில், அப்போது அவனுடைய கட்டுண்ட நிலைமையையெல்லாம் மறக்கச் செய்து கொண்டு ஒரு பெரும் ஆர்வம் பூரித்து எழுந்தது.

அது என்ன ஆர்வம் என்றால், மகத்தான வீரப் போருக்கு ஆயத்தமாகத் துடி துடித்துக் கொண்டு நிற்கும் அந்த மகா சைனியத்தில் தானும் ஒரு போர் வீரனாகச் சேர்ந்துவிட வேண்டும் என்பதுதான்.

அந்தகாரம் சூழ்ந்த இரவில் பிரயாணம் செய்பவன் வழி தெரியாமல் திகைத்துக் கொண்டிருக்கையில், திடீரென்று தோன்றிய மின்னலின் ஒளியிலே தான் போக வேண்டிய பாதையைக் கண்டு பிடிப்பதுபோல, பரஞ்சோதியும் தான் பிறவி எடுத்தது எதற்காக என்பதை அந்தக் கணத்தில் தெளிவாகக் கண்டு கொண்டான். ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதுவதற்காகவோ, தோத்திரப் பாடல்களை உருப்போட்டுப் பாடுவதற்காகவோ, கையில் சிற்றுளி கொண்டு கல்லைக் கொத்திக் கொண்டிருப்பதற்காகவோ, வர்ணங்களைக் குழைத்துச் சுவரில் சித்திரம் எழுதுவதற்காகவோ, தான் பிறக்கவில்லை! கையில் வாளும்



வேலும் கொண்டு போர்முனையில் நின்று, எதிரிகளின் தலைகளைப் பனங்காய்களைப் போல் உருட்டி அவர்கள் நெஞ்சில் வேலைப் பாய்ச்சி, இரத்த வெள்ளத்தில் நீந்தி, வெற்றிச்சங்கு முழக்கிப் பகைவர்களை ஹதா ஹதம் செய்து விரட்டி 'வீராதி வீரன்' என்று உலகமெல்லாம் பாராட்டும்படி பெயர் எடுப்பதற்காகப் பிறந்தவன், தான் என்று உணர்ந்தான்.

இந்த எண்ணமானது பரஞ்சோதிக்கு எல்லையற்ற குதூகலத்தை உண்டாக்கிற்று. ஆயனர் வீட்டில் புத்தர் சிலைக்குப் பின்னால் ஒளிந்திருந்து, அவன் பார்த்த மகேந்திர சக்கரவர்த்தியின் கம்பீர உருவம் அவன் கண்முன்னால் எழுந்தது. அதோ வானளாவிப் பறக்கும் கொடியின் அடியில் இந்த மகத்தான சைனியத்தின் பிரதம சேனாதிபதியான மகேந்திரச் சக்கரவர்த்தி வீற்றிருப்பார். அவர் முன்னிலையிலேதான் தன்னைக் கொண்டுபோய் நிறுத்துவார்கள்.

சக்கரவர்த்தியின் சந்நிதியை அடைந்ததும், அவர் பாதங்களில் விழுந்து, 'பிரபு! பல்லவேந்திரா! தங்களுடைய வீர மகா சைனியத்தில் இந்தப் பட்டிக்காட்டில் பிறந்த அறியாச் சிறுவனையும் சேர்த்து கொள்ள அருள் புரிய வேணும்!' என்று வேண்டிக் கொள்வதென்று பரஞ்சோதி தீர்மானித்தான். சித்திரக் கலையு



மாச்சு வர்ணச் சேர்க்கையுமாச்சு! ஆயனரும் நாகநந்தியும் எக்கேடு கெட்டா வது போகட்டும்!

இவ்விதம் பரஞ்சோதி எண்ண மிட்டுக் கொண்டே பாச றையை நெருங்கிய போது, அவனுடைய பொங்கி எழுந்த உற்சாகத்தை மீண்டும் சந்தேக நிழல் மறைத்தது. 'இங்கே இறங்கியிருப்பது பல்லவ சைனியந்தானா?' என்பதுதான் அந்தச் சந்தேகம்.

பல்லவ சாம்ராஜ்யத்தின் கொடி ரிஷபக் கொடி அல்லவா? இங்கே பறக்கும் கொடி களில் காட்டுப் பன்றியின் உருவம் கூரே. மாகக் காட்சியளிக்கின்றதே!

ஒருவேளை இது வாதாபிச் சைனியமாக இருக்குமோ! பல்லவ இராஜ்யத்தின் மீது படையெடுத்து வரும் சைனியம் இது தானோ? — அம்மம்மா! இவ்வளவு பிரம் மாண்டமான படை பலமுள்ள பகைவனா பல்லவ இராஜ்யத்தின் மீது படையெடுத்து வருகிறான்?

பாசறையின் முன் வாசலை அடைந்ததும், வீரர்கள் குதிரைகளின் மீதிருந்து கீழே இறங்கிப் பரஞ் சோதியையும் கீழே இறக்கிவிட்டு அவனை

நடத்தி அழைத்துச் சென்றார்கள்.

பாசறைக்குள் புகுந்து சென்றபோது, பரஞ்சோதியின் மனத்தில் முன்னமே தோன்றியிருந்த சந்தேகம் உறுதியாயிற்று.

பாசறையில் ஆங்காங்கு நின்ற வீரர்களின் தோற்றமும் அவர்களுடைய பேச்சின் பாஷையும், இந்த சைனியம் பல்லவ சைனியமாக இருக்க முடியாது என்று ஐயமறத் தெரிவித்தன.

'ஆஹா! பகைவர்களின் பாசறைதான் இது! இங்கே வந்து அகப்பட்டுக் கொண்டோமே? தப்பிச் செல்வதற்கு வழியே இல்லை போலிருக்கிறதே?' என்று பரஞ்சோதி எண்ணியபோது, அவனுடைய சப்த நாடியும் ஒடுங்கிவிட்டன. சற்றுமுன் உள்ளத்தில் ஏற்பட்ட குதூகலம் நிராசையாக மாறியது.

அவன் உடம்பைப் பிணித்திருந்த கட்டுக்கள் அப்போது முன்னை விடப் பதின் மடங்கு அதிகமாக வலித்தன.

மனச்சோர்வினாலும் உடல் வலியினாலும் அவன் நிமிர்ந்து நடக்கக் கூட முடியாமல் தள்ளாடவே, அவனை அவ்வீரர்கள் இழுத்துக் கொண்டு போக வேண்டியதாக நேரிட்டது.

அப்போது சற்றுத் தூரத்தில் அறிமுகமான முகம் ஒன்று தன்னை நோக்கி வருவதைப் பரஞ்சோதி கண்டான். அருகில் நெருங்கியதும் அந்த முகம் நேற்றுமுன் தினம் அவனுக்கு வழித்துணையாகக் கிடைத்த வஜ்ரபாஹுவின் முகந்தான் என்பது தெரிந்தது.

முதலில், பரஞ்சோதிக்குச் சிறிது உற்சாகம் உண்டாயிற்று. உடனே அவன் மனத்தில், 'நாம் இந்தக் கதியை அடைவதற்கு மூலகாரணம் இந்த மனிதன்தான்' என்ற எண்ணம் தோன்றியது.

வஜ்ரபாஹுவோ பரஞ்சோதியைப் பார்த்து, மிக்க அதிசயத்தை அடைந்தவனைப் போல், "தம்பி! இது என்ன கோலம்?" என்றான். பிறகு, அவனை அழைத்து வந்த வீரர்களைப் பார்த்து ஏதோ கேட்டுவிட்டு, "தம்பி, பயப்படாதே! சத்யாச்ரய புலிகேசி மன்னரிடம் உள்ளது உள்ளபடி சொல்லு. உனக்குத் தீங்கு ஒன்றும் நேராது!" என்று கூறினான்.

வஜ்ரபாஹுவின் வார்த்தைகளைக் காட்டிலும் அவனுடைய பிரகாசமான கண்களில் மின்வெட்டைப்போல் தோன்றிய சமிக்ஞையானது பரஞ்சோதிக்கு அதிக தைரியத்தை ஊட்டியது.

நாற்பத்திரண்டாம் அத்தியாயம்

சத்யாச்ரயன்

வாதாபியைத் தலைநகராகக்கொண்டு, வடக்கே நர்மதை வரையிலும் தெற்கே துங்கபத்திரை வரையிலும் பரந்து கிடந்த சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியை பாரத நாட்டில் அந்தக் காலத்திலிருந்த வீரர்களுக்குள்ளே ஒப்பற்ற மகா வீரனாகிய புலிகேசியை நேயர்கள் இப்போது சந்திக்கப் போகிறார்கள். அப்படிச் சந்திப்பதற்கு முன்னால், அந்த வீரனின் பூர்வ சரித்திரத்தை நேயர்கள் தெரிந்து கொள்வது உபயோகமாக இருக்கும்.

புலிகேசியும் அவனுடைய சகோதரர்களும் சிறுவர்களாக இருந்தபோது, அவர்களுடைய சிற்றப்பன் மங்களேசனுடைய கொடுமைக்கு ஆளாக நேர்ந்தது. மங்களேசனுடைய சிறையிலிருந்து அவர்கள் தப்பி ஓடி, வெகுகாலம் அடர்ந்த காடுகளில் ஒளிந்து வாழ்ந்தார்கள். அப்படிக் காட்டில் வசித்த காலத்தில் அவர்கள் அநுபவித்த அளவில்லாத கஷ்டங்கள் அவர்களுடைய தேகத்தை வஜ்ரதேகமாக்கி, அவர்களுடைய உள்ளத்தில் வயிரம் ஏற்றி அவர்களை இணையற்ற வீர புருஷர்களாகவும் ஈவிரக்கமற்ற கடூர சித்தர்களாகவும் செய்துவிட்டன.

காலம் கை கூடி வந்தபோது, புலிகேசியும் காட்டைவிட்டு வெளிவந்து, சிற்றப்பனை எளிதில் வென்று அப்புறப்படுத்திவிட்டு வாதாபிச் சிங்காதனத்தில் ஏறினான். பின்னர், தன் வீரத் தம்பிமார் துணை கொண்டு வாதாபி இராஜ்யத்தை விஸ்தரிக்கத் தொடங்கினான். வடதிசையில் அவனுடைய ராஜ்யம் விஸ்தரித்துக் கொண்டு போய் நர்மதை நதிக்கரையை எட்டிய போது அவனுடைய சைனியம் உத்தர பாரதத்தின் ஏக சக்ராதிபதியாக விளங்கிய ஹர்ஷவர்த்தனரின் படைகளுடன் முட்டவேண்டியதாயிற்று.

நர்மதை நதியின் இரு கரைகளிலும் பல வருஷ காலம்போர் நடந்தது. வாதாபிப்

படைகள் எவ்வளவோ வீரத்துடன் போர் புரிந்தும், வடநாட்டிலிருந்து மேலும் மேலும் ஹர்ஷரின்சைனியங்கள்வந்துகொண்டிருந்தபடியால், முடிவான வெற்றி காண முடியவில்லை. இந்த நிலைமையில் லட்சோப லட்சம் வீரர்கள் அடங்கிய பெருஞ் சைனியத்துக்கு ஹர்ஷவர்த்தனர் தாமே தலைமை வகித்து வருவதாகத் தெரிய வந்தபோது, புலிகேசி மேலும் அவருடன் போராடுவது விந்திய பர்வதத்தில் முட்டிக்கொள்வதேயாகும் என்பதை உணர்ந்து சமாதானத்தைக் கோரினான். மகா புருஷரான ஹர்ஷவர்த்தனரும் அதற்கு உடனே இணங்கியதுடன் புலிகேசியின் வீர தீரங்களைப் பாராட்டி, நர்மதைக்குத் தெற்கேயுள்ள பிரதேசத்துக்குச் சக்கரவர்த்தியாக அவனை அங்கீகரித்தார்.

பின்னர், புலிகேசியின் கவனம் தென்னாடு நோக்கித் திரும்பிற்று. அவ்விதம் திரும்புவதற்கு முக்கிய காரணமாகவும் தூண்டுகோலாகவும் இருந்தவர்கள் ஜைன முனிவர்கள்.

புலிகேசி சிங்காதனம் ஏறுவதற்கு ஜைனர்கள் உதவிசெய்த காரணத்தினால், வாதாபியில் சமண முனிவர்களுக்கு விசேஷ செல்வாக்கு ஏற்பட்டிருந்தது. அவர்களுடைய முயற்சியினாலேயே கங்கபாடி மன்னன் துர்விநீதனுடைய மகளுக்கும் புலிகேசியின் சகோதரன் விஷ்ணுவர்த்தனனுக்கும் விவாகம் நடந்தது.

காஞ்சி மகேந்திர சக்கரவர்த்தி ஜைன மதத்திலிருந்து விலகிச் சைவ சமயத்தை மேற்கொண்டபோது, நாடெங்கும் உள்ள சமணர்களின் உள்ளம் கொதிப்பை அடைந்தது. ஏனெனில், கல்வியிற் சிறந்த காஞ்சி மாநகரமானது வெகு காலமாக சமணர்களுடைய குருபீடமாக இருந்து வந்தது. காஞ்சியில் வேகவதியாற்றுக்கு அப்பாலிருந்த பகுதி 'ஜீன காஞ்சி' என்று வழங்கி வந்தது. தென் பெண்ணையாற்றின் முகத்துவாரத்தருகில் இருந்த பாடலிபுரம் என்னும் ஊரில் தென்னாட்டிலேயே மிகச் சிறந்த சமணப் பள்ளி புகழுடன் விளங்கி வந்தது. இத்தகைய பிரதேசத்தில், சமணத்தின் செல்வாக்கு தாழ்ந்து சைவம் ஓங்குவது என்பதைச் சமண சமயத்தலைவர்களால் சகிக்கக்கூடவில்லை.

இவர்களுடைய தூண்டுதலுடனே புலிகேசியின் ஏக சக்கராதிபத்திய வெறியும் சேரவே, அவ் வீர மன்னன் இதுவரையில் யாரும் கண்டும் கேட்டுமிராத பிரம்மாண்டமான சைனியத்துடனே தென்னாட்டின்

அருள்வாக்கு



சரீர உழைப்பில்தான் ஆரம்பித்தாக வேண்டியிருக்கிறது. ஆனால் சரீரத்தோடு நின்று விடாமல் அந்த ஆரம்ப நாளிலிருந்தே ஈச்வரபரமான விஷயங்களிலும் "டச்" வைத்துக் கொண்டேயாக வேண்டும். போகப் போக "டச்" பண்ணினால் மட்டும் போதாது. "டச்" பண்ணுவதைக் கையில் பிடித்து வைத்துக் கொள்ளவும் பிரயத்தனப்பட வேண்டும். அத்யாத்ம ஸமாசாரங்களில் அதிகம் ஈடுபட வேண்டும். ஆனால் இப்போதும், இவன் ஆத்மாபிவிருத்தியில் உச்சாணிக் கொம்புக்கே போய் விட்டாலும் அப்போதும் கூட, சரீரப் பணியில் இவன் "டச்"சை அடியோடுவிட்டுவிடக்கூடாது. ஜீவன் முக்தன் என்று என்னவோ சொல்கிறார்களே, நமக்கெல்லாம் அப்படிப்பட்ட ஸ்திதி புரிவது கூடக் கஷ்டமாயிருக்கிறதே. அந்த ஸ்திதி வந்து நமக்கென்று. மனஸில்லை, எண்ணமில்லை, 'ப்ளான்' இல்லை என்று ஆகிற மட்டும் நாமாக உடற்தொண்டை அடியோடு விட்டோமென்று இருக்கவே கூடாது. அதனால்தான் பெரியோர்கள், "ஒரு கையால் ஈச்வரனைப் பிடித்துக் கொண்டே இன்னொரு கையால் லோக கார்யங்களைப் பண்ணு" என்கிறார்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

க்ளியரெஸில் சருமம் எனில் அதிகத் தெளிவான சருமம் • க்ளியரெஸில் சருமம் எனில் அதிகத் தெளிவான சருமம்

க்ளியரெஸில் கொண்டு தினமும் ஹோம்வொர்க் செய்தால் நண்பர்களிடையேயும் ஃபர்ஸ்ட் க்ளாஸ் மதிப்பெண் பெறுவது மிகவும் சுலபம்.



காரணம் க்ளியரெஸில் சருமம் எனில் அதிகத் தெளிவான சருமம்.

காலேஜில் பிரபலமாக வேண்டுமென்றால் பின்னணியில் இருந்து பிரயோசனம் இல்லை. நாலு பேருக்கிடையே தனித்து விளங்கிட உங்களுக்குத் தேவை அதிகத்தெளிவான உருவம் அதாவது க்ளியரெஸில் சருமம்.

க்ளியரெஸில் பருக்களில் மூன்று வழிகளில் ஆற்றலுடன் செயல்புரிகிறது.

ஒன்று — பருவுக்குள் ஊடுருவிச் செல்கிறது. இரண்டு — கூடுதல் எண்ணெய்ப் பசையை நீக்குகிறது. மூன்று — பருவை காயவைத்துப்

க்ளியரெஸில் சருமம் எனில் அதிகத் தெளிவான சருமம் • க்ளியரெஸில் சருமம் எனில் அதிகத் தெளிவான சருமம்





போக்குகிறது.

பருக்களுக்கு சிகிச்சை அளிப்பதில் க்ளியரெஸில்தான் உலகிலேயே முதன்மையானது என்பது இதனால் தெள்ளத்தெளிவாகிறது.

க்ளியரெஸில் உபயோகியுங்கள் நண்பர் குழாம் அமைத்துக் கொள்ளுங்கள்.



பருக்களுக்கு சிகிச்சை அளிப்பதில் உலகிலேயே முதன்மையானது.

Enterprise/PG/CC/P/2/Tm b

மேல் படையெடுப்பதற்குச் சித்தமானான்.

படையெடுப்புச் சைனியம் கிளம்பிய போது, வெற்றி முழக்கத்துடனே காஞ்சியில் பிரவேசித்து மகேந்திரனுக்கு புத்தி புகட்டலாம் என்ற எண்ணத்துடன் ஜைன ஆசாரியர்களும் சைனியத்துடனே புறப்பட்டார்கள். ஆனால், தலைநகருக்கும் பாசறைக்கும் வித்தியாசம் அதிகம் என்பதையும், சக்கரவர்த்தி புலிகேசிக்கும் போர்த் தலைவன் புலிகேசிக்கும் மிக்க வேற்றுமை உண்டு என்பதையும் விரைவிலேயே அவர்கள் கண்டார்கள். தலைநகரிலே பூஜ்ய பாதர், ரவிகீர்த்தி முதலிய ஜைன குருமாருக்குச் சக்கரவர்த்தியைக் காட்டிலும் அதிகமான மரியாதை நடந்தது. போர்க்களத்திலோ அவர்களைத் திரும்பிப் பார்ப்பவர்கள் யாரும் இல்லை. அந்தக் குருமார் வைஜயந்தி பட்டணத்தைக் கொளுத்தக் கூடாது என்று சொன்னதைப் புலிகேசி அலட்சியம் செய்த பிறகு, அவர்களுக்குப் போர்க்களத்தில் இருக்கவே மனங்கொள்ளவில்லை. புலிகேசியிடம் சிறிது விவாதம் செய்து பார்த்த பிறகு, அவனிடம் விடை பெற்றுக்கொண்டு அவர்கள் திரும்பிச் சென்றார்கள்.

சளுக்கச் சக்கரவர்த்தியை அவருடைய முக்கியப் படைத் தலைவர்கள் சகிதமாக நாம் சந்திக்கும் போது, மேற்கூறியபடி ஜைன குருமார்கள் பாசறையிலிருந்து போய்விட்டதைக் குறித்துத்தான் பேச்சு நடந்து கொண்டிருந்தது.

வானை அளாவிப் பறந்து கொண்டிருந்த வராகக் கொடியின் கீழே, விஸ்தாரமான கூடாரத்தின் நடுவில், தந்தச் சிங்காதனத்தில், மணிமகுடம் தரித்த புலிகேசி மன்னன் கம்பீரமாக அமர்ந்திருந்தான்.

சிங்காதனத்துக்கு எதிரே தரையிலே விரித்திருந்த இரத்தினக் கம்பளத்தில் ஏழெட்டுப் பேர் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் படைத் தலைவர்கள் முதலிய பெரிய பதவி வகிப்பவர்களாக இருக்க வேண்டுமென்று, அவர்களுடைய தோற்றத்திலிருந்து தெரிய வந்தது. அவர்கள் எல்லாருடைய கண்களும் பயபக்தியுடன் புலிகேசியின் முகத்தையே நோக்கிய வண்ணம் இருந்தன.

புலிகேசியும் அவனுடைய படைத் தலைவர்களும் பேசிய பாஷையில் தமிழ்ச் சொற்களும் பிராகிருதச் சொற்களும் கலந்திருந்தன.*

* பிற்காலத்தில் இந்தக் கலப்பு மொழியே கன்னட மொழியாயிற்று.

"லட்சணந்தான்! இந்த திகம்பர சந்நியாசிகள் என்ன எண்ணிக்கொண்டு நம்முடன் கிளம்பினார்கள் என்று தெரியவில்லை. இவர்கள் இஷ்டப்படியே யுத்தத்தை நடத்துவதாயிருந்தால் உருப்பட்டாற் போலத்தான்" என்று புலிகேசி கூறினான்.

"அவர்கள் போய்விட்டதே க்ஷேமம்; அவர்கள் நம்மோடு வந்து கொண்டிருந்தால் யுத்தம் செய்யவே முடியாது; கோயில்களும் சங்கிராமங்களும் ஸ்தூபங்களும் கட்டிக் கொண்டு போகலாம்!" என்றான் ஒரு படைத் தலைவன்.

எல்லாரும் கலகலவென்று சிரித்தார்கள்.

சிரிப்பு அடங்கியதும் இன்னொரு படைத்தலைவன், "ஜைன முனிவர்களை அனுப்பிவிட்டோம்; சரிதான். ஆனால், புத்த பிக்ஷுவின் இஷ்டப்படிதானே யுத்தம் நடத்துவதாக ஏற்பட்டிருக்கிறது?" என்று கூறி, புலிகேசியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

"ஆகா! அது வேறு விஷயம். பிக்ஷுவின் யோசனையைக் கேட்டதில் இதுவரையில் நாம் எவ்வித நஷ்டமும் அடையவில்லை. எந்தக் காரியமும் தவறாகப் போனதுமில்லை" என்றான் புலிகேசி.

பிறகு, எதிரிலிருந்தவர்களில் ஒருவனைக் குறிப்பிட்டுப் பார்த்து, "நம் ஒற்றர் படை வெகு லட்சணமாக வேலை செய்கிறது போலிருக்கிறதே! பிக்ஷுவின் தூதனை நம்முடைய ஆட்கள் கண்டுபிடித்துக் கொண்டு வருவதற்கு மாறாக, தூதனல்லவா நம்மைத் தேடிப் பிடித்திருக்கிறான்?" என்று கூறிய போது, இயற்கையாகவே கடுமையான குரலில் இன்னும் அதிகக் கடுமை தொனித்தது.

அந்த ஒற்றர் படைத்தலைவன் ஒருகணம் தலை குனிந்திருந்து விட்டு, பிறகு நிமிர்ந்து புலிகேசியை நோக்கி, "ஏதோ பிசகு நேர்ந்திருக்கிறது. நான் அனுப்பிய ஆட்கள் இன்னும் வந்து சேரவில்லை..." என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே கூடாரத்திற்குள் யாரோ வருவது கண்டு திரும்பிப் பார்த்து, "ஆகா! இதோ வந்துவிட்டார்களே!" என்றான்.

அப்போது, பின்கட்டு முன்கட்டாகக் கட்டியிருந்த பரஞ்சோதியை முன்னால் தள்ளிக் கொண்டு, அவனைச் சிறைப் பிடித்து வந்த வீரர்கள் உள்ளே வந்து கொண்டிருந்தார்கள்.

அந்தக் காட்சியைப் பார்த்த புலிகேசி, "இது என்ன? இது என்ன? இந்தச் சிறுவன் யார்?" என்று கேட்டது, பரஞ்சோதியின் காதில் இடி முழக்கம்போல் விழுந்தது.

(தொடரும்)

பிழைக்கத் தெரியாதவள்!

மூன்றாம் வகுப்பு கூட படிக்காத அவர் மனைவி, ''உங்களுக்குத் துப்பு இல்லை. சாமர்த்தியம் போதாது. பத்து நாளாச்சு காஸ் தீர்ந்து போய். கம்பெனியில் போய்ப் பார்த்துச் சரிக்கட்டி வரத் துப்பில்லை'' எனப் பொரிந்து தள்ளவும் ''இதோ போறேன். திரும்பி வரும் போது சிலிண்டரோடதான் வருவேன்'' என்று சவால் விட்டுப் போனார் ஞானப்பிரகாசம்.

ஞானப்பிரகாசம் ஒரு பெரிய கம்பெனியில் மானேஜர். இது கூடச் செய்ய முடியாதா என்ன! நேராக காஸ் கம்பெனிக்குப் போய் நம்பரைச் சொல்லிக் கேட்டார்.

அங்கிருந்த பெண், ''இருபது நாட்கள் ஆகும்'' என்றாள்.

''இதோ பாரம்மா... வீட்டில் ஒரு முக்கியமான ஃபங்ஷன். எப்படியாவது அட்ஜஸ்ட் செய்து கொடு... யாருக்காவது இன்று அனுப்ப வேண்டிய கார்டை பீரோ தட்டின் அடியில் போட்டு விட்டு, என் கார்டுக்கு அனுப்பு. மேற்கொண்டு உன் செலவுக்குத் தரேன். யார் பார்க்கப் போறாங்க... அப்படியே தெரிந்து கேட்டால் 'ஸாரி. கை தவறிக் கார்டை மிஸ்பிளேஸ் செய்துட்டேன்னு சொன்னால் தலையையா வாங்கிடுவாங்க? இரண்டு ஸிலிண்டர் விலை கூடத் தரத் தயார்...''

''ஸாரி ஸார். நான் ரொம்ப ஏழைதான். ஆனால் அவுட் ஆப் தி வே போக மாட்டேன்.''

அவர் அவளைத் திட்டிக் கொண்டே தம் ஆபீஸுக்குப் போனார். 'கழுதை. பெரிய நேர்மையின் அவதாரம்னு நினைப்பு!'

அவள் மாலை மூன்று மணிக்கு இண்டர்வ்யூவுக்குப் போனாள். 'கடவுளே இந்த வேலையாவது கிடைத்தால்தான் என்னை நம்பியுள்ள என் குடும்பம் இரண்டு வேளையாவது சாப்பிடும். எத்தனை நாளைக்குத்தான் காஸ் கம்பெனியின் தாற்காலிக வேலையில் காலந்தள்ள முடியும்' என்று கடவுளை வேண்டிக் கொண்டேயிருந்தாள்.

அங்கே மொத்தம் பத்துப் பேர் வந்திருந்தார்கள்.

இவள்தான் கடைசி ஆள்.

''போங்கம்மா உள்ளே'' என ப்யூன் அனுப்ப, உள்ளே போனவள் திடுக்கிட்டாள்.

காலையில் ஸிலிண்டர் கேட்டு வந்தவர்தான் இண்டர்வ்யூ நடத்திக் கொண்டிருந்தார்.

அவரைப் பார்த்ததும் சரி இந்த வேலை நமக்கு நிச்சயம் கிடைக்காது எனத் திரும்பிப் போக நினைத்தவளை அவர் கூப்பிட்டார்.

''ஏம்மா திரும்பிட்டே. காலையில் ஸிலிண்டர் கேட்டுக் கொடுக்கவில்லையே. அதனால் வேலை தர மாட்டார் என்று தானே திரும்பிட்டே... எங்கள் கம்பெனிக்கு உன்னைப் போன்ற நேர்மையானவர்கள்தான் தேவை. உன் நேர்மைக்குப் பரிசாக உனக்கு இப்போதே வேலை தருகிறேன்.''

அவள் ஒரு நிமிடம் ஸ்தம்பித்து நின்றாள். இவ்வளவு வருஷம் பட்ட கஷ்டம் விடியப் போகிறதா!

சுதாரித்துக் கொண்டாள்.

''ஸாரி ஸார். கேவலம் ஒரு காஸ் ஸிலிண்டருக்காக முறையற்ற வழிகளைச் செய்யச் சொன்ன நீங்கள், பின்னாடி கம்பெனி முன்னேற்றத்துக்காக முறையற்ற வழிகளைக் கடைப்பிடிக்கச் சொல்ல மாட்டீர்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? எனக்கு விருப்பமில்லை சார்...'' என்று அமைதியாக வெளியேறினாள் அவள்.



— ஸ்ரீவத்ஸன்.

குழந்தை வேண்டும்

போட்டிக் கதை — 14

(அறிமுக எழுத்தாளர்)

"**மா**லதிம்மா… உங்களுக்கு ஃபோன்."

லெட்ஜரில் மூழ்கிக் கிடந்த மாலதி திடுக்கிட்டு எழுந்தாள்.

''ஹலோ! மாலதி ஸ்பீக்கிங்…''

''நான்தான் சுந்தரம் பேசறேன். வசந்தி நிலைமை ரொம்ப ஸீரியஸா இருக்கு. நீங்க உடனே புறப்பட்டு வாங்க.''

''இதோ! ஒரு நிமிஷத்தில வந்துடறேன்" என்றவள், ஃபோனை வைத்து விட்டு, மானேஜரின் அறைக்குள் பாய்ந்து சென்றாள்.

அரை நாள் லீவு எழுதிக் கொடுத்து விட்டு, ஓர் ஆட்டோவைப் பிடித்து நர்ஸிங் ஹோமுக்கு விரைந்தாள்.

பததாம் எண் அறையை அடைந்தவள் கண்களில், கண்ணீர் பெருகியது.

'வசந்தி' என்று விசும்பியவாறு கட்டிலை நெருங்கினாள்.

''அக்கா! வந்துட்டியா… உனக்காகத்தான் என் உசுரு ஒட்டிக்கிட்டிருக்கு. என்னை வளர்த்த மாதிரி இனிமே என் குழந்தைகளையும் நீதான் வளர்க்கணும்…''

''வசந்தி… இப்ப எதுக்கும்மா இதைப் பத்திக் கவலைப்படறே… எல்லாம் சரியாவிடும்'' என்றாள் மாலதி.

''இல்லேக்கா… நான் பொழைக்க மாட்டேன். வேறொருத்தி என் இடத்துக்கு வந்து, என் குழந்தைகளைக் கஷ்டப்படுத்தாம, நீயே என் இடத்துல இவர்களுக்கு அம்மாவா இருக்கணும்…'' என்று மாலதியின் கையைப் பிடித்துக் கொண்ட வசந்தி இறைஞ்சினாள்.

பதில்பேசாது கண்ணீர் பெருக்கியவாறு தங்கையினருகில் மாலதி அமர்ந்திருந்தாள்.

வசந்தி மறைந்து மூன்று மாதங்கள் பறந்து விட்டன. குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி விட்டு, பஸ் பிடித்து ஆபீஸ் வருவதற்குள் மாலதி தினமும் காற்றாய்ப் பறந்து வேலை செய்ய வேண்டியதாயிற்று.

மாலதி பி.எஸ். ஸி. முடித்த போதுதான் டூர் போயிருந்த அவள் பெற்றோர் இருவரும் விபத்தில் சிக்கி, ஒரே நாளில் இறந்து போனார்கள். பத்து வயதுத் தங்கையுடன் தனித்து நின்ற மாலதிக்கு அப்பாவின் நண்பர் உதவியால், அப்பா வேலை செய்த அலுவலகத்திலேயே வேலை கிடைத்தது.

பெற்றோரை நினைத்து அழும் தங்கைக்கு அன்று முதல் தாயும், தகப்பனுமாக விளங்கிய மாலதி அவளைப் படிக்க வைத்து, நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்துத் திருமணம் செய்து வைப்பதில் கருத்தாயிருந்ததில் தன் இளமை கழிந்ததைப் பற்றிக் கவலைப்படவில்லை.

தங்கை குழந்தைகளையே தன் குழந்தைகளாக நினைத்து, அடுத்தடுத்துப் பிறந்த சாந்தி, வாசு, பாபுவை வளர்ப்பதில் மகிழ்ச்சி கொண்டாள். நான்காவது குறைப் பிரசவமாகி வசந்தி உலகை விட்டுப் போனதை மாலதியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

"**மா**லதி…! நல்லா யோசிச்சுத்தான் இந்த முடிவுக்கு வந்தீங்களா?'' என்றார் மானேஜர்.

''ஆமாம் ஸார்… உயிர் பிரியும் போது என் தங்கை எங்கிட்டச் சத்தியம் வாங்கிட்டா ஸார். என் தங்கச்சி புருஷன் எத்தனை நாள் தனியா இருப்பார்? வேற யாரையாவது கல்யாணம் செஞ்சுக்கிட்டார்னா வர்றவ இந்தப் பிள்ளைங்ககிட்டே உண்மையா அன்பு காட்டுவாங்கறது என்ன நிச்சயம்? அதனாலதான் நான் அவரைக் கல்யாணம் செஞ்சுக்கச் சம்மதிச்சேன்…'' என்றாள் மாலதி.

எளிமையாக அலங்கரிக்கப்பட்டிருந்த முதலிரவு அறை. உள்ளே நுழைந்த மாலதி சுந்தரத்தின் எதிரில் பேசாமல் நின்றாள்.

''உட்கார் மாலதி.''

உட்கார்ந்தாள்.

''தங்கை புருஷனே உனக்குப் புருஷனா வருவான்னு நீயோ, நானோ நினைச்சுக் கூடப் பார்த்திருக்கமாட்டோம் இல்லையா?" என்றான் சுந்தரம்.

வெ. காமாட்சி

மாலதி நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''குழந்தைகளுக்காகத்தான் முப்பதைக் கடந்த நான் கல்யாணத்துக்குச் சம்மதிச் சேன்... அதனால...'' நிறுத்தினாள்.

கேள்விக்குறியோடு சுந்தரம் அவளைப் பார்த்தான்.

''வந்து ... வந்து .. நமக்கு இனிமே குழந்தை வேண்டாங்க.. நம்ம ரெண்டு பேருலயாரா வது ஒருத்தர் குடும்பக் கட்டுப்பாடு செஞ்சுக் கிட்டா எனக்குக் குழந்தை பிறக்காது. இல் லையா?''

திடுக்கிட்டான் சுந்தரம்.


''ஆமாங்க! ஒருவேளை எனக்குக் குழந்தை பொறந்திடுச்சுன்னா என்னை யறியாம என் மனசு மாறிடுச்சுன்னா ... என் தங்கச்சி பிள்ளைங்க வேற என் பிள்ளை வேறன்னு நெனைக்க ஆரம்பிச்சுடலாம். அதனால... ப்ளீஸ்... எனக்குக் குழந்தை வேண்டாங்க...''

நீண்ட பெருமூச்செறிந்தான் சுந்தரம்.

''உன்னிஷ்டம் மாலதி.. ஆனா உனக் குன்னு ஒரு குழந்தை வேணும்னு என்னிக்கா வது உனக்குத் தோணினா...'' என்றவனை இடையிலே தடுத்த மாலதி, ''நிச்சயம் நான் வருத்தப்பட மாட்டேன். என் தங்கச்சி பிள்ளைங்க என் வயித்தில பிறக்கலேங்கறது ஒண்ணுதாங்க குறை. மற்றபடி அவங்க மூணு பேருந்தான் என் குழந்தைங்க!'' என் றாள்.

''சரி... மாலதி.. நானே குடும்பக் கட்டுப் பாடு செஞ்சுக்கறேன். இப்ப உனக்குத் தேவை மன நிம்மதி.. பேசாமத் தூங்கு'' என்றான் சுந்தரம்.

காலம் உருண்டது. சாந்தி கல்லூரியில் காலெடுத்து வைத்தாள். அன்று ஆபீஸி லிருந்து நேராக மார்க்கெட்டுக்குச் சென்று காய்கறி வாங்கி வந்த மாலதி டவுன் பஸ்



ஸாக்காகக் காத்திருந்தாள்.

அப்போது யாரோ ஓர் இளைஞன் தோளைப் பிடித்தவாறு சாந்தி ஸ்கூட்டரில் சென்றதைப் பார்த்தாள்.

மாலதிக்குப் பகீரென்றது. 'ஐயோ! கடவுளே! இதென்ன சோதனை? யார் இவன்? இவனுக்கும், சாந்திக்கும் என்ன சம்பந்தம்? ஒருவேளை காதலனா இருப்பானோ? அதான் காலேஜ்லேயிருந்து தினம் லேட்டா வராளோ? ஸ்பெஷல் கிளாஸ்னு சொன்னதெல்லாம் பொய்யோ? இவனோட எங்கேயாவது சுத்திட்டு வராளோ? நான் கண்டிப்பாத்தானே வளர்த்தேன். என்னையே ஏமாத்திட்டாளே...' என்று பலவாறு யோசித்தவண்ணம் விட்டையடைந்தாள்.

ஏழு மணிக்குச் சாந்தி உள்ளே நுழைந்தாள்.

''சாந்தி! இங்கே வா! ஏன் இவ்வளவு நேரம்?''

''ஒரு பிரண்டுக்கு பர்த்டே... அதுக்குப் போயிருந்தேன்.''

''பிரண்டு பையனா, பொண்ணா?''

''பெரியம்மா!''

''சத்தாதே! நீ ஸ்கூட்டர்ல போனதை என் கண்ணால பார்த்தேன். யாரு அவன்?''

''...............''

''கேட்கறது காதிலே விழலே?''

''அவர் என்னோட ஸீனியர். கல்சுரல் கமிட்டி செகரட்டரி.''

''சாந்தி! பொண்ணாப் பொறந்தவ ஜாக்கிரதையா இருக்கணும்மா... யார் தப்புச் செஞ்சாலும் பழியைப் பொம்பளைங்க மேலதாம்மா உலகம் சுமத்தும்.''

''பெரியம்மா! கண்டபடி பேசாதீங்க.... ஓர் ஆணும், பெண்ணும் பேசினாலோ, சேர்ந்து போனாலோ உடனே கட்டுக்கதை பேசறதே வழக்கமாப் போச்சு. உங்கள நான் ஒண்ணு கேட்கட்டுமா? நீங்களும் நாலு ஆம்பிளைங்களுக்கு நடுவிலதானே வேலை செய்யறீங்க? இத்தனை வருஷமா உங்களை மட்டும் எங்க அப்பா நம்பலேம்னு நெனைக்கறீங்களா?''

தலையில் இடி விழுந்தது போலத் துடித்தாள் மாலதி.

''பெத்த பொண்ணுக்கு மேலா வளர்த்த என்னைப் பார்த்து இப்படிக் கேட்க உனக்கு எப்படிம்மா மனசு வந்தது?''

''எல்லாரும் உங்களைத் தியாகின்னு பாராட்டணும்னு நீங்க போட்ட வேஷம்... தங்கச்சி பிள்ளைங்களுக்காகத் தன் வாழ்க்கையையே தியாகம் செஞ்சவங்கன்னு எல்லாரும் சொல்றாங்க இல்லையா? எங்கம்மா இருந்திருந்தா நாங்க இப்படியா இருந்திருப்போம்? எதுக்கெடுத்தாலும் உங்க கண்டிப்பு. எங்க இஷ்டப்படி ஒரு நாளாவது நிம்மதியா நடக்க விட்டீங்களா?''

''சாந்தி! நான் உன் அம்மா இல்லையாம்மா?''

''அது எப்படி முடியும்? எவ்வளவுதான் நீங்க அன்பு காட்டினாலும் எங்களுக்கு அம்மா இல்லேங்கற குறையை நீக்க முடியுமா?''

அப்படியே மடிந்து உட்கார்ந்து முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள் மாலதி.

''மாலதி... மாலதி... ஏம்மா விளக்கு கூடப் போடாம இருட்டில உட்கார்ந்திட்டிருக்கே? என்னம்மா நடந்தது?'' என்று தொட்டு எழுப்பிய சுந்தரத்தைக் கண்டதும் மாலதி துயரத்தால் வெடித்தாள்.

''என்னங்க... எனக்குன்னு ஒரு குழந்தை வேணும். நான் என்ன சொன்னாலும்; என்னை அம்மான்னு ஏத்துக்கறதுக்கு ஒரே ஒரு குழந்தை வேணுங்க...'' என்று கதறிய மாலதியை அணைத்துக் கொண்ட சுந்தரத்தின் கண்கள் கலங்கின.



''அந்தக்குழந்தையின் அப்பா சரியான லஞ்சப் பேர்வழின்னு அடிச்சுச் சொல்றியே, எப்படி?''

''எல் ஃபார் லஞ்சம் என்கிறதே...?''

— போத்தனூர் புலிச்சோழன்.

''நம்ம பையனுக்கு என்னுடைய புத்திசாலித்தனம்தான் அப்படியே வந்திருக்கு!''

''இருக்கலாம். ஏன்னா, என் புத்திசாலித்தனம் இன்னும் என் கிட்டேயே தான் இருக்கு!''

— ஆர். எம்.



ஒரு பயிற்சி + காதல் + பொழுதுபோக்கு...

"உயரதிகாரிகள் பயிற்சி மையம்" என்று இந்தியில் முதலாவதாகவும், ஆங்கிலத்தில் இரண்டாவதாகவும் எழுதப்பட்ட அந்த போர்டை, ராமையா உன்னிப்பாய்ப்பார்த்தபடியே, உள்ளே போனார்.



இவ்வாண்டு சாகித்ய அகாதமி பரிசு பெறும் சு. சமுத்திரம் அவர்களுக்குக் கல்கி வாசகர்கள் சார்பில் வாழ்த்துக்கள்.

சமுத்திரம் கதைகளின் பலம், அங்கத பாணியில் நகைச்சுவை கலந்த சமுதாய நோக்கு. அது அவருடைய இந்தச் சமீபத்திய கதையிலும் பளிச்சிடுவதைக் காணலாம்.

டைகட்டிய மனிதரிடம், ராமையா பேச்சுக் கொடுத்தார்.

"மன்னிக்கணும். என் பெயர் ராமையா. சென்னையில் டிப்டி டைரக்டர். சீனியர் ஆபீஸர்ஸ் இன் சர்வீஸ் ட்ரெயினிங்குக்காக வந்திருக்கேன். நீங்க..."

"ஓ... ஐ.... ஸீ... என் பெயர் டபிள்யூ. கன்னா... ஜான்சில பெர்சனல் ஆபீஸராயிருக்கேன்."

"உங்களுக்கு இங்க எல்லோரும் தெரியும் போலத் தெரியுது..."

"எஸ். மிஸ்டர் ஆர். ராமையா. மூணு வருஷத்துக்கு முன்னால, இதே பயிற்சி மையத்தில் அசிஸ்டெண்ட் புரொபஸரா இருந்தேன். இதே மாதிரி இன் சர்வீஸ் பயிற்சிகளுக்கு கோர்ஸ் டைரக்டராகவும் இருந்தேன். அப்புறம் யூ. பி. சி. எழுதி ஐ. ஏ. அண்டு ஏ. எஸ். சர்வீஸ்ல சேர்ந்தேன்."

"பயிற்சி கொடுத்தவருக்கே பயிற்சியா. நல்லாயிருக்கே!"

"இதுக்குப் பேர்தான் கவர்ன்மெண்ட் என்கிறது."

டபிள்யூ கன்னாவும், ஆர். ராமையாவும் ஜோடியாக நடந்து வகுப்பறைக்குள் நுழைந்தார்கள்.

அசல் எட்டாவது வகுப்பு அறை மாதிரிதான். பிளாக் போர்ட். பிரம்பு; மேப்; சாக்பீஸ்; முப்பது வயசு முன்கோபி; ஆனாலும் ஒரு சின்ன வித்தியாசம். மாணவர்கள் பகுதியில், பெஞ்சுகளுக்குப் பதிலாக ரப்பர் மெத்தை நாற்காலிகள். தூங்குவதற்கு வசதியான சன்மைக்கா மேஜைகள்.

இந்த அறைக்குள் ஏற்கெனவே பத்துப் பதினைந்து பேர் இருந்தார்கள். உள்ளே நுழைந்த ராமையாவை, டபிள்யூ கன்னா கையைப் பிடித்து இழுத்து ஓர் இடத்தைக் காட்டி, "உட்காரலாம்" என்றார். உட்காரப் போன ராமையாவோ, கடைசி வரிசையில் ஒதுக்குப்புறமாய் இருந்த ஒருவரைப் பார்த்துவிட்டார். 'அடஅட, கே.என். சீனிவாசனா? அப்பாடா?...' 'கே. என். எஸ்.' பக்கத்தில் உட்கார்ந்தார். தூங்கிக் கொண்டிருந்தவரை உசுப்பினார். இருவரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்தபடி ஏதேதோ பேசினார்கள்.

இதற்கிடையே முன்கோபி போல் தோன்றிய எதிர்வரிசை ஒற்றை மனிதர் கடிகாரத்தைப் பார்த்தபடியே எழுந்தார். பிறகு இவர்களுக்கு எழுந்து நின்று பேச வேண்டிய அவசியம் இல்லை என்பது போல், உட்கார்ந்தார். அறிமுகத்தைப் பீடிகையாக்கினார்.

"என் பெயர் சுரேஷ்சிங். அசிஸ்டெண்ட்

சு. சமுத்திரம்

புரொபஸர். உங்களுக்கு கோர்ஸ் டைரக்டர். தயவு செய்து உங்களை அறிமுகம் செய்து கொள்ளலாமா?''

அறிமுகங்கள் அரங்கேறின.

வலது பக்க முன் வரிசையில் அருணாச்சல் பிரதேச நசாரிக், இடது பக்க முன்வரிசையில் நாகாலாந்து வசோல், இரண்டாவது வரிசையில் மராட்டிய மாநில மிஸஸ் ஜோஷி, ஆந்திர கிருஷ்ணாராவ், கேரள அச்சுதன், மேற்கு வங்காள குப்தா, 'டில்லியின் செல்வர்' எஸ். பி. வர்மா, மத்திய பிரதேச பார்ஜன், பீஹார் சத்பதி இப்படி பல்வேறு மாநில அதிகாரிகள்.

இப்போது போதகர் சுரேஷ்சிங் — அதுதான் கோர்ஸ் டைரக்டர், முகத்தை உம்மாக்கி வாயைக் கோணலாக்கிய படியே புத்திமதி சொன்னார்.

''நீங்க எல்லாம் சீனியர் அதிகாரிகள். வயதிலும் சீனியர்கள். உங்களுக்கு நான் சொல்ல வேணடியதில்லை. இந்தப் பயிற்சி நிஜமாவே சீரியஸான பயிற்சி. இதை யாரும் சம்பளத்துடன் கூடிய விடுமுறையாய் நினைக்கக்கூடாது. அதனால் தான் சொல்றேன் வீ ஆர் டெட் சீரியஸ்..'' என்று சுரேஷ்சிங் மேஜையை அடிதத படியே தம் பேச்சுக்குத் தாமே கை தட்டுபவர் போல் தொடர்ந்தார்.

''இந்த டில்லியில் 'எங்கே தங்கப் போறோமோ'ன்னு கவலைப்பட வேண்டாம். இங்கேயே ஹாஸ்டல் இருக்குது. ஆளுக்கு ஒரு ரூம். தின வாடகை ஐந்து ரூபாய்தான். லேடி அண்ட் ஜென்டில்மென். ஐந்தே ஐந்துதான். டோண்ட் ஓர்ரி. இப்போ நிர்வாக இயல் என்ன என்பது பற்றி விளக்கப் போகிறேன்... நிர்வாகம் என்பது இம்பெர்ஸனல். அப்ஜெக்டிவ். அதே சமயம், பெர்சனல்.. சப்ஜெக்டிவ்...''

சுரேஷ் சிங், பேசிக் கொண்டே போன போது, மிஸஸ் ஜோஷி சந்தேகம் கேட்டு, டம்பப் பையைத் தூக்கியபடியே எழுந்தாள். சுரேஷ்சிங் ரொம்பவும் சந்தோஷப்பட்டார். ''இந்த மேடம் நல்லா கவனிக்கிறாங்க. சந்தேகம்தானே அறிவின் திறவுகோல்... எஸ்... ப்ளீஸ் மேடம்...''


''ரூம் சார்ஜ் அஞ்சுன்னு சொன்னீங்க. பர்னிஷ்ட் ரூம்தானே.. கட்டில் இருக்குதா? ஃபேன் இருக்குதா.. டாய்லெட்...''

''எல்லாம் இருக்கு. கவலையே வேண்டாம். நிர்வாக இயல் என்பது...''

சுரேஷ்சிங் நிர்வாக இயலை மேற்கொண்டும் ஜவ்வு மிட்டாய் ஆக்கிய போது, பாட்மனும், நாயரும் ஒருசேர எழுந்தார்கள்.

''எங்களுக்கு ஹாஸ்டல் வேண்டாம். கரோல்பாக்கில சொந்தக்காரங்க இருக்காங்க... ஹாஸ்டல்ல தங்க மாட்டோம். தங்கவே மாட்டோம்...''

சுரேஷ்சிங் கோபப்படப் போனார். இதற்குள் இரண்டு இள வட்டங்கள் வந்தன. எடுத்த எடுப்பிலேயே பேசின.



"சார்... ஐ'ஆம் மிஸ். முன்னி ஆப் ராஜஸ்தான்..."

"சார், ஐ'ஆம் சஞ்சய் தாமஸ். ஃப்ரம் ஆந்திரா."

அந்த இருவரும், அறிமுகம் இல்லாதவர்கள் என்பதைக் காட்டும் வகையில் ஆளுக்கு ஒரு வரிசையில் உட்கார்ந்தார்கள்.

மீண்டும் சுரேஷ்சிங்.. மீண்டும் நிர்வாக இயல். 'கே.என்.எஸ்.' மீண்டும் ராமையாவின் காதை உரசினார்.

"பாரு... ராமு... இந்தச் சின்னஞ்சிறுசுகள் நம்ம லெவல் பதவிக்கு வந்திருக்கறதைப் பார்க்க வெட்கமா இருக்குது."

இந்தச் சமயத்தில், 'பயிற்சி அதிகாரிகள்' மிஸஸ் ஜோஷியை விட்டு விட்டு மிஸ் முன்னியை மொய்த்தார்கள். முட்டிக் கால்களோடு நின்று விட்ட அவளது கவுனை ஒப்புக்கும், கால்களை உண்மைக்குமாய்ப் பார்த்து விட்டு, ஒவ்வொரு கிழமும் லேசாய் விசிலடித்தது. சுரேஷ்சிங்கோ எதைப் பற்றியும் கவலைப்படாமல், வெளுத்துக் கட்டிக் கொண்டிருந்த போது—

வலது பக்கம் கடைசி வரிசையில் இருந்த வர்மா எழுந்தார். டில்லிக்காரர் சுரேஷ் சிங்கைப் பேச வேண்டாம் என்று கையாட்டி விட்டு, இப்படிப் பேசினார்.

"நிர்வாகம் என்பது என்ன என்பது முக்கியமில்லை. எப்படி என்பதே முக்கியம். அந்த எப்படி என்பதிலும், இப்படியா அப்படியா என்பதும் முக்கியம். அது கூட முக்கியமில்லை. இப்படி என்பது எப்படி, அப்படி என்பது எப்படி என்று அலசி ஆராய்ந்து சிந்தித்துச் சீர்தூக்கி...!"

சுரேஷ்சிங் வாயடைத்துப் போனார். முன்னாள் அசிஸ்டெண்ட் புரொபசர் டபிள்யூ கன்னா குறட்டை போட்டே தூங்கினார். மற்றவர்களோ, எவன் பேசினாலும் இப்படித்தான் பேசுவான். இவனே பேசட்டும் என்பது மாதிரி சும்மா இருந்தார்கள். இந்த மௌனத்தை அங்கீகாரமாக எடுத்துக் கொண்ட எஸ். ஆர். வர்மா, உத்வேகம் பெற்றார். வகுப்பறைக்கு முன்னால் வந்து சுரேஷ்சிங் முன்பக்கம் தன் முதுகைச் சார்த்தியபடியே நிர்வாக இயல் பற்றி 'கௌண்டர் லெக்சர்' கொடுத்த போது—

"டீ பிரேக்.. டீ பிரேக்..."

தேநீர் குடித்த போது, மிஸ் முன்னியும், அவள் வயதுக்காரனான சஞ்சய் தாமஸும் ஒருவருடன் ஒருவர் அறிமுகம் செய்து கொண்டார்கள். தயங்கித் தயங்கிப் பேசி, பிறகு, தயங்காமல் பேசிக்கொண்டார்கள். கே. என். சீனிவாசன் கமெண்ட் அடித்தார்.

"வேணுமுன்னா பாருடா.. ராமு.

ரெண்டு பேரும் லவ் பண்ணப் போறாங்க பாரு. குட்டி நல்லாத்தாண்டா இருக்காள். சர்க்கார் செலவுல காதல் பண்ணப் போறாங்க பாரு...''

''நீ ஒருத்தன், ஆக வேண்டியதைப் பார்க்காமல்..''

வகுப்பு மீண்டும் துவங்கியது.

எங்கேயோ, காணாமல் போன சுரேஷ் சிங்; திடீரென்று ஓர் ஆறடி மனிதருடன் உள்ளே வந்தார். அந்த மனிதரின் படர்ந்த முகத்தையும், பெரிய பெரிய பற்களையும் பார்க்கும் போது, ஆசாமிக்கு மீசை இருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனாலும் பாதகமில்லை. ஜாட் இனத்துக்கு உரிய கம்பீரம். துடுக்குத்தனமான பேச்சு.

''லுக்... நீங்க் சீனியர் ஆபீஸர்ஸ்... பல் வேறு மாநிலங்களிலிருந்து ரயிலில் பர்ஸ்ட் கிளாஸ் ஏ சி ஸ்லீப்பர்ல வந்திருக்கீங்க. தினமும் 75 ரூபாய் அலவன்ஸ் வாங்கப் போறீங்க. வசதியான ஐந்து ரூபாய் அறையில் தங்கப் போறீங்க. இப்படி சகல சௌகரியோடும், சம்பளத்தோடும் அரசாங்கம் உங்களை எதுக்காக இங்கே அனுப்பி வைக்குது? சொல்லுங்கோ...''

திடீரென்று, டில்லிபுத்திரன் வர்மா எழுந்தார். ஏன் என்பதற்கு இருப்பிடத்தில் இருந்து பத்து நிமிடமும், பிறகு வகுப்பறையின் முகப்புக்கு வந்து பத்து நிமிடமும் பேசினார். அதற்குள் அந்த ஜாட் மனிதர் சுதாரித்து, வர்மாவின் தோளில் கையைப் போட்டு அவர் மார்பைத் தட்டிக் கொடுப்பது போல் ரத்தக்கசிவு வரும்படி கிள்ளிபடியே —

''நான் இந்த பயிற்சி நிலையத்தின் டைரக்டர். பேராசிரியர் திவான்லால். எனக்கும் பேச சான்ஸ் வேணும். லுக் லேடீஸ் அண்ட் ஜென்டில்மென்... உங்களுக்காக கெஸ்ட் லெக்சர் ஏற்பாடு செய்திருக்கோம். ஒவ்வொரு லெக்சருக்கும் 300 ரூபாய். போக்குவரத்துக்கு 100 ரூபாய். இப்படித் தினமும் நாலு லெக்சர். இது எதுக்காக... யாருக்காக.. டோண்ட் டாக் வர்மா. ஐ வில் டாக். மூத்த அதிகாரியான ஒவ்வொருவருக்கும் இந்தப் பயிற்சிக் காலம் வரைக்கும் சராசரி 15 ஆயிரம் ரூபாய் செலவு செய்கிறோம். எதுக்காக? யாருக்காக? நானே சொல்கிறேன். இங்கே பயிற்சி பெற்ற பிறகு நீங்கள் உங்கள் டிபார்ட்மெண்டுக்குப் போய், அங்கே உள்ள உங்கள் சகாக்களை நல்வழிப் படுத்த வேண்டும் என்பதே இந்தப் பயிற்சியின் நோக்கம். ஒரு மெழுகுவர்த்தி பல மெழுகுவர்த்திகளை எரிய விடுகிறதல்லவா.. அப்படி... எப்படி...''

'டில்லியின் செல்வன்' வர்மா விளக்கம் சொல்லப் போன போது, நமது ராமையா எழுந்தார் அம்பீரமாக. வேட்டியை விடாப் பிடியாகக் கட்டியிருக்கும் மனிதர். அறிவின் முதிர்ச்சி முகத்தில் தெரிந்தது. பேசப் போன அவரோடு எழுந்த கே. என். சீனிவாசன், அவரிடம் ரகசியம் போல் பகிரங்கமாகவே பேசினார்.

''பாருடா ராமு.. அப்போ தனித்தனியா உட்கார்ந்திருந்த முன்னியும் சஞ்சயும் இப்ப ஒண்ணாய் உட்கார்ந்து டயலாக் பேசறதைப் பாருடா...''

ராமையா சீனிவாசனை தோளை அழுத்தி உட்கார வைத்தார். இடுப்புக்குக் கீழே நழுவப் போன வேட்டியைக் கட்டிய படியே, அந்த ஜாட் டைரக்டரைப் பார்த்துக் கேட்டார்.

''சார்... இந்த ஆறு வாரப் பயிற்சி எப்ப முடியும்?''

''ஒய் டவுட்... அடுத்த மாதம் 31ம் தேதியோட முடியும்.''

''ஆறு வாரமுன்னா.... நாற்பத்திரண்டு நாள். அதனால, அடுத்த மாதம் 28ம் தேதியே முடிச்சுடுங்க சார்...''

''நோ. நோ. 31ம் தேதின்னா 31ம் தேதி தான்...''

''நோ... நோ... 28ம் தேதிதான். 28ம் தேதி தான்.''

''முப்பத்தி ஒண்ணு. ரைட்.''

''ராங்.. இருபத்தெட்டு.''

''லுக் ஜென்டில்மேன்.. மேற்கொண்டு ஒரு மூணு நாள் இருக்கக் கூடாதா? இங்கே தான் சென்ஸ் ஆப் ரெஸ்பான்சிபிலிட்டி. அதாவது பொறுப்புணர்வு வேணும் என்கிறது...''

''பொறுப்புணர்வு இருக்கறதாலதான் சொல்றேன். இருபத்தெட்டு இருபத்தெட்டே...''

இயக்குநர், திவான்லால் உதடுகளை உப்ப வைத்தார். பயிற்சி அதிகாரிகள் விம்புக்குப் பேசுவது போல் தோன்றிய ராமையாவை, அதிசயமாய்ப் பார்த்தார்கள். முன்னியும், சஞ்சயும் மட்டும், எதைப் பற்றியும் கவலைப்படாமல் எதையோ பேசிக் கொண்டிருந்தார்கள். கோபத்தால், கண் சிவந்து, குமுறலால் பற்கள் வெளிப்பட்டு, படபடப்பாய் நின்ற திவான்லாலைப் பார்த்து, ராமையா பற்றற்ற குரலில் பதிலளித்தார்.

''நான் அடுத்த மாதம் 31ம் தேதி ரிடையராகிறேன் சார். 28ம் தேதி டில்லியிலிருந்து புறப்பட்டால்தான் 30ம் தேதி சென்னைக்குப் போய் அதுக்கு மறுநாள் பொறுப்பை ஒப்படைக்க முடியும். 'ரிடையராகிற எனக்கு எதுக்குய்யா டிரெயினிங்' குன்னு எழுதிப் போட்டேன். 'எதிர்த்தா பேசறே?' ன்னு ஒரு மெமோ கொடுத்தாங்க. அதனால்தான் சார் வந்தேன். 28ம் தேதி கோர்ஸ் முடியுது. ரைட்...?''



COUNT DOWN — 2

பூட்டப்பட்ட வீடு!

கர்னலின் விழிகள் சிங்கத்தின் விழிகளை விடக் கடுமையாக இருந்தன.

''கர்னல் ஸார்...''

''எத்தனை நாட்களாக வேலாயுதம் இந்தத் திருட்டுத்தனம்?''

கொச்சு வேலாயுதம் பதில் சொல்லவில்லை. கதவை நோக்கி அவன் நகரும் பாதையை மறித்து அவருடைய சக்கர நாற்காலி உருண்டு வந்து நின்றது. ஒரு டேபிள் டென்னிஸ் பந்தை மட்டை மீது வைத்து மேலே தூக்கித் தூக்கிப் போட்டுக்கொண்டே கர்னல் அவனை முறைத்தார். பந்து மட்டையின் மீது டக், டக் என்று மோதியது.

கால்களில்லாத கர்னலை சமாளிப்பது பெரிய வேலையாக இருக்கப் போவதில்லை என்று நினைத்தான். கதவை நோக்கிப் பாய்ந்தான்.

கர்னல் எப்போது வண்டியை நகர்த்தினார் என்பது புரியுமுன்னரே கதவு அறைந்து சாத்தப்பட்டு விட்டது.

''வேலாயுதம், மிலிட்டரியில் இருந்தவன் நான். எத்தனை எதிரிகளின் தலைகளை இந்தக் கையாலேயே திருகிப் பிய்த்திருக்கிறேன் என்று உனக்குத் தெரியுமா?''

கொச்சு வேலாயுதத்தின் கண்களில் திகிலான மின்னல் படர்ந்தது. தடாலெனத் தரையில் சாஷ்டாங்கமாக விழுந்தான்.

''என்னை மன்னித்து விடுங்கள், கர்னல். காசுக்கு ஆசைப்பட்டு மோசம் பண்ணி விட்டேன்.''

கொச்சு வேலாயுதம் சுவரில் சரிந்து உட்கார்ந்திருந்தான். கண்கள் சிவந்திருந்தன. திடீரென்று அவனிடமிருந்த அத்தனை சக்தியும் உறிஞ்சி எடுக்கப்பட்டு விட்டது போன்றதொரு களைப்புடன் அவன் கால்களை நீட்டியிருந்தான். தப்பித்துப் போகும் எண்ணம் எதுவும் இல்லாதவனாக, நடந்ததற்கு வருந்தும் இந்தத் தருணத்திற்காகவே வெகு நாட்கள் காத்திருந்தவன் போலத் தலைகுனிந்திருந்தான்.

''டில்லியிலேயே நீ வாங்கப்பட்டு விட்டாயா?'' கர்னலின் குரல் அவனை நிமிர்த்தியது.

''ஆமாம்'' என்பது போலத் தலையை மேலும் கீழும் அசைத்தான்.

''சாவக்காட்டிலேயே என்னுடைய வீடுதான் ஏழ்மையான வீடு. அப்பா, இருந்த கால் ஏக்கர் நிலத்தையும் அடமானத்தில் தொலைத்து விட்டார். சம்பாதிக்க வேண்டும் என்ற வெறி எனக்கு இருந்தது. அதனால்தான் ஊர் விட்டு ஊர் வந்தேன். அச்சுதன் சாரிடம் வேலை செய்து கொண்டிருந்த போது ஒரு நாள் என்னை ஒருவன் சந்தித்தான். தினமும் நூறு ரூபாய் சம்பாதிக்க ஆசையா என்று கேட்டான். மாதம் முழுதும் அச்சுதன் சாருக்கு சமைத்துப் போட்டு விட்டு முந்நூறு ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த எனக்குத் தினமும் நூறு ரூபாய் என்றவுடன், ஆசைப்பட்டு விட்டேன்.''

கொச்சு வேலாயுதம் மூக்கை சத்தமாக உறிஞ்சினான்.

''தப்புத்தான்! காசுக்கு அடிமைப்படுவது தப்புத்தான். ஆனால் கல்யாண ஆசையோடு இருந்த எனக்கு நிறையச் சம்பாதிக்க வேண்டும். அதையும் சீக்கிரம் சம்பாதிக்க வேண்டும் என்று தோன்றி விட்டது. தினமும் நூறு ரூபாய் சம்பாதிக்க நான் செய்ய வேண்டியதெல்லாம் என்ன தெரியுமா? சுலபமான வேலை. அச்சுதன் சாருடைய தினப்படி நடவடிக்கைகளை அன்றன்றைக்குச் சொல்லி விட வேண்டும். அவரைப் பார்க்க யார், யார் வருகிறார்கள். யாரிடமிருந்து டெலிபோன் வந்தது. என்ன ட்யூட்டியில் அவர் இருக்கிறார். இவ்வளவுதான்.''

''அச்சுதன் வீட்டிற்கு அமீர் ஜவஹர் வந்தது பற்றியும் தெரிவித்தாயா அவர்களி

பெரும்பான்மையான ஒற்றர்கள் நிழல் பறவைகள். அவர்களுடைய நடமாட்டமும், அசைவுகளும் கவலமாகத் தென்பட்டு விடுவதில்லை. கூரிய அம்புகள் மட்டும் இருந்தால் போதாது — இரை இருக்கும் திசையும் தெரிந்தால்தான் வேட்டைக்காரனால் வேட்டையாட முடியும்.

— அலெக்ஸாண்டர் க்ளீன்.

அஞ்சனா மைக்கேல்ராஜ்

டம்?'' கர்னலின் குரலில் கோபமா, ஆத்திரமா என்னவென்று பிரித்துச் சொல்ல முடியாத ஓர் உணர்ச்சி.

''ஆமாம். அமீர் வந்தது, அவனுடன் நீங்கள் பேசியது எல்லாம் சொன்னேன். அவர்கள் மேஜர் நாஸர் என்பவருக்குத் தகவல் கொடுக்க வேண்டும் என்று ஓடினார்கள்.''

''நீ கொடுத்த தகவலால் அமீர் ஜவஹரின் உயிரே போய் விட்டது தெரியுமா?''

''தெரிந்த போது எனக்குத் துக்கமாகத் தான் இருந்தது. அப்புறம் எல்லாம் மரத்து விட்டது. அச்சுதன் மெட்ராஸ் புறப்பட்டுப் போனதும் எனக்குக் கையொடிந்தது போல் ஆகி விட்டது. அதனால்தான் நீங்களும், சாந்தினியும் மெட்ராஸ் கிளம்பிய போது நானும் ஒட்டிக் கொண்டேன். மணிமாறனுக்குத் தேவையான உதவிகளைச் செய்தால் இருபதாயிரம் ரூபாய் தருவதாகச் சொன்னார்கள். அந்தப் பணம் என் கண்களைக் கட்டி விட்டது. நீங்களும் அச்சுதன் சாரும் இல்லாத நேரத்தில் மணிமாறனும், ஹக்கிமும் விட்டிற்குள் நுழைய நானே கதவு திறந்து விட்டேன். சாந்தினியைக் கடத்திப் போக நானே உதவியாய் இருந்தேன்.''

''யாரது, ஹக்கிம்?''

''மெட்ராஸில் மணிமாறனுக்கு உதவியாயிருந்தவன். அவன் வீடு எங்கேயிருக்கிறது என்று எனக்குத் தெரியும். காட்டுகிறேன்.''

''நீ செய்த காரியங்களுக்கெல்லாம் உனக்கு என்ன தண்டனை என்று தெரியுமா?''

''கொடுக்கும் தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன்.''

''வா என்னுடன்..''

கொச்சு வேலாயுதம் தரையில் கையூன்றி எழுந்தான். கர்னலின் பின்னே நடந்தான்.

நாற்காலியில் கட்டிப் போடப்பட்டிருந்த குருசிவகுமார் கதவு திறக்கும் சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தார்.

''சிவா, உனக்கு கம்பெனி'' என்றார் கர்னல் மென்மையான குரலில்.

''என்னது?''

''நீ ஆயிரங்களுக்கு அடிமையானாய். இவன் சில நூறுகளுக்கு எங்களையெல்லாம் விற்று விட்டான்.''

கொச்சு வேலாயுதம் தலைகுனிந்து நின்றான்.


''கர்னல், என் மகள்?'' குருசிவகுமார் கர்னலை எப்போது பார்ப்போம் என்று காத்திருந்தது போல் துடித்துக் கேட்டார்.

''கவலைப்படாதே. போட்ட திட்டப்படி அவள் பயணம் தொடங்கும். இன்று அவளை ஹாஸ்டலுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். அங்கிருந்து மற்றவர்களுடன் அவள் பாகிஸ்தான் பயணமாகிறாள்.''

''வேண்டாம் கர்னல். வேண்டாம்'' குருசிவகுமார் பதறினார்.

''ஏன் சிவா?''

''மணிமாறன் அவள் மூலம் எதையோ



ரகசியமாக அனுப்பத் திட்டமிடப்பட்டிருந்தது கர்னல். லக்ஷ்மி ரூபா போய்ச் சேர்ந்ததும் இவளிடம் அந்தப் பொருள் கிடைக்காவிட்டால் அவர்கள் இவள் மீதே சந்தேகப்படலாம். அநாவசியமான ஆபத்துகளுக்கு என் மக்களைப் பணயம் வைக்க எனக்குத் தைரியமில்லை கர்னல்.''

''அவளிடம் என்ன காரணத்தைச் சொல்வாய், சிவா?''

''உண்மைகளைச் சொல்கிறேன். இன்றைக்கு இந்தியாவிற்குத் தேவையானவர்கள் நேர்மையும், நாணயமும், தேசப்பற்றும் மிகுந்தவர்கள்தான் என்பதை அவள் புரிந்து கொள்ள வேண்டும்.''

''அப்படியானால் ஒன்று செய், சிவா. லக்ஷ்மி ரூபாவிடம் உள்ளது உள்ளபடி நீயே சொல்.. அப்புறமும் அவள் பாகிஸ்தான் போக விரும்பினால் ஏற்பாடுகள் செய்து தர வேண்டியது என் பொறுப்பு.''

கர்னல் லக்ஷ்மி ரூபாவை அழைத்து வர அடுத்த ரூமிற்குள் நுழைந்த சமயம் அழைப்பு மணி ஒலித்தது.

கொச்சு வேலாயுதம் ஓடிப் போய் கதவைத் திறந்தான்.

''ஹலோ கொச்சு.''

சாந்தினி உற்சாகமாக நின்றிருந்தாள். அவள் பின்னே அச்சுதன் தெரிந்தான்.

''உள்ளே வா, மை டியர்...'' என்றார் கர்னல்.

அவனைப் பார்த்ததும் கர்னல் அருள்தாஸின் முகத்தில் அதீத சந்தோஷமும் விடுதலையுணர்வும் புலப்பட்டன. அச்சுதனை நோக்கிப் புருவங்களை உயர்த்தினார்.

''சாந்தினியைக் காப்பாற்ற முடிந்தது. ஆனால் மணிமாறனைக் கோட்டை விட்டு விட்டேன், கர்னல்...''

''சொல்... என்ன ஆயிற்று, சொல்..''

அச்சுதன் சாந்தினியை அவர் புறம் நகர்த்தி விட்டு வேகமாகச் சொல்ல ஆரம்பித்தான்.

''அச்சுதன், காரியம் இன்னும் நம் கைகளை விட்டு மிஞ்சி விடவில்லை'' என்றார் கர்னல் அருள்தாஸ் நம்பிக்கையூட்டும் குரலில். ''வழியில் ரயிலிலிருந்து இறங்கி விட்டானே தவிர மணிமாறன் எங்கே போவான் என்று நினைக்கிறாய்? எப்படியும் அவன் ஹைதராபாத் போய்த்தான் ஆக வேண்டும். அங்கே அவன் பரத் நாயக்கைச் சந்தித்துத்தான் ஆக வேண்டும். பஸ் பிடித்தோ, திருட்டுத்தனமாய் ரயிலில் ஏறியோ மணிமாறன் எப்படியும் ஹைதராபாத் போய் விடுவான். அவனை அங்கே சந்திக்க நாம் தயாராய் இருந்தால் போதும்.''

''எப்படி கர்னல் முடியும்? பிளேன்கள் கூட ஸ்டிரைக்கில் இருக்கின்றன. அவனுக்கு முன்னால் நாம் எப்படி போக முடியும்?''

''இண்டியன் ஏர்லைன்ஸ் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தால் என்ன? அவசரத்திற்கு ஆர்மி பிளேன் ஒன்றை நாம் ஏற்பாடு செய்து கொள்ள முடியாதா என்ன?''

கொச்சு வேலாயுதம் தடாலென்று அச்சுதனின் காலில் விழுந்தான். மண்டையை அவன் காலில் ணக் ணக் என்று மோதினான்.

''சார் என்னை க்ஷமிக்கணும்'' என்று அழத் துவங்கினான்.

''வேலாயுதம் என்ன ஆயிற்று உனக்கு?''

''விவரமெல்லாம் நான் தருகிறேன்'' என்றார் கர்னல் அருள்தாஸ். நடப்பது எதுவும் புரியாமல் சாந்தினி வியந்த விழிகளால் அவரையும், அச்சுதனையும் மாற்றி மாற்றிப் பார்த்தாள்.

ஹைதராபாத்.

பெரும்பாலும் ஒரு வழிப் பாதைகளாக இருந்த சாலைகளில் எல்லா வாகனங்களும் தறிகெட்டு ஓடிக் கொண்டிருந்தன. ஹுசைன் சாகர் ஏரிக்கரை சிமெண்ட் பெஞ்சுகளில் இப்போதும் பலர் காதலித்துக் கொண்டிருந்தார்கள். சிலர் தற்கொலை செய்து கொண்டார்கள். பப்ளிக் கார்டனுக்குப் பின்னால் இன்னும் எடைக்குப் போடப்படாத புகை வண்டி என்ஜின்கள் புகை விட்டுக் கொண்டே ஷண்டிங்கில் ஈடுபட்டிருந்தன. அமீட் சர்க்கிளில் தேநீர்க் கடைகள் சுறுசுறுப்பாக இருந்தன. மக்கள் ஜிப்பா போட்டுக் கொண்டு பைஜாமா அணிந்து கொண்டு உருது கலந்த ஹிந்தியில் பேசி பான்பீடா போட்டுக் குதப்பி புளிச் புளிச் என்று துப்பினார்கள். தலைமைத் தபால் நிலையத்தில் ஸ்டாம்பு வாங்க வந்திருந்த க்யூ ராமகிருஷ்ணா தியேட்டர் வரை நீண்டது. அழுக்கான பிளாட்பாரத்தின் மீது பழைய புத்தகங்களைப் பரப்பி வைத்துக் கொண்டு ஒருவன் ஹிந்தியில் வியாபாரம் செய்து கொண்டிருந்தான்.

விசித்திரமான குள்ள ரிக்ஷாவில் அசௌகரியமாக உட்கார்ந்து பயணம் செய்வது மணிமாறனுக்கு சற்று சிரிப்பாய்க் கூட இருந்தது. இரண்டு லாரிகள், மூன்று பஸ்கள் மாறி அவன் ஹைதராபாத் வந்து சேரும் வரை எந்தத் தடங்கலும் வராததே அவனுக்குப் பெரிய ஆறுதலாய் இருந்தது.

அச்சுதன் பொதுவாக ஸ்டேஷனைக் கண்காணித்துக் கொண்டிருந்தானா அல்லது அவன் ஹைதராபாத்திற்கு புறப்படுவான் என்று ஊகித்துக் காத்திருந்தானா என்ற கேள்வி மட்டும் மணிமாறனை வதைத்துக் கொண்டிருந்தது. அச்சுதன் அவனை சர்தார்ஜியாகப் பார்த்து விட்டதால், அந்த வேஷத்தைக் கலைத்து விட்டு, இப்போது

சேட்ஜி போல் குல்லாவும், நெற்றிச் சந்தனமும், பைஜாமாவுமாக மாறியிருந்தான்.

ஸோல்ஜர் பரத் நாயக், ஹைதராபாத் நவ்ரங் தியேட்டர் அருகே அவன் வீடு இருப்பதாக எப்போதோ ஒருமுறை பரத் நாயக் அவனிடம் எல்லைப் பகுதியில் இருந்த போது சொல்லியிருந்தது மணிமாறனின் நினைவிற்கு வந்தது.

நவ்ரங் தியேட்டரை மையமாய் வைத்து பரத் நாயக்கின் வீட்டைக் கண்டுபிடிக்க வேண்டும் என முடிவு செய்தான்.

தெரு விளக்குகள் எரியத் தொடங்கி இருந்தன.

கடைத் தெருவில் நியான்கள் வண்ணக் கண்களைச் சிமிட்டின.

ரிக்ஷா நவ்ரங் தியேட்டர் வாசலில் பிரேக் இழுத்தது.

அறுபதடி கட் அவுட்டில் ஆந்திர நடிகர் மீசையை முறுக்கிக் கொண்டிருந்தார்.

மணிமாறன் இறங்கிக் கொண்டான்.

கறுப்பு பர்தாக்களுக்குள் சில பெண்கள் ரகசியமான சிரிப்புகளை உதிர்த்து சினிமா க்யூவில் நின்றிருக்க, மணிமாறன் அவர்களைத் தாண்டி நடந்தான்.

குறுகலான சந்து ஒன்றின் முகப்பில் இருந்த தையல் கடையின் இரண்டு படிகள் ஏறினான்.

தையல் இயந்திரத்திற்குப் பின்னே உட்கார்ந்திருந்த தையலாளுக்குச் சலாம் வைத்தான்.

''நான் இந்த ஊருக்குப் புதிது. என் நண்பன் ஒருவன் இந்த இடத்தில் இருக்கிறான். ஒரு ஆர்மி ஸோல்ஜர். பெயர் பரத் நாயக். அவன் கொடுத்த அட்ரஸைத் தொலைத்து விட்டேன். அவன் வீடு எங்கே இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா?''

''நஹி சாப் — ஆனால் உங்களுக்கு ஒருத்தரால் உதவ முடியும்.''

''யார் சொல்லுங்கள்.''

''இந்தத் தெருவில் கடைசி வீட்டில் இருக்கும் தபால்காரர். அவருக்கு இந்தப் பிரதேசமே அவருடைய உள்ளங்கை மாதிரி.''

''ஷுக்ரியா.''

காரியம் இவ்வளவு எளிதில் முடியும் என்று மணிமாறன் எதிர்பார்க்கவேயில்லை. கடைசி வீட்டில் இருந்த தபால்காரருக்கு பரத்நாயக் என்றதுமே விளங்கி விட்டது. நான்கு தெருக்கள் தள்ளி ஜஹாங்கீர் தெருவில் ஆறாம் நம்பர் வீடு என்றார். ஐந்தே நிமிடத்தில் அந்த வீட்டை நெருங்கினான் மணிமாறன்.

ஆனால்...

பரத் நாயக்கின் வீடு வெளியே பூட்டப்பட்டிருந்தது.



வாழ்ந்து காட்டுவோம்

கே. ஆர். விஜயா —

முதலில் அன்னையாகவும், பின்னர் பாட்டியாகவும் அவர் காட்டும் சகிப்புத் தன்மையும் மன்னிக்கும் பரந்த மனப் பான்மையும் அலசிப் பிழிந்த கர்நாடக இசையென்றால் —

துள்ளலும் துடிப்பும் நிறைந்து ஆண்களைப் புரட்டியெடுத்துப் புறமுதுகுகாட்டி ஓடச் செய்து, பேட்டை மொழிச் சரளத்தில் தலைநிமிர்ந்து நடைபோடும் ஆட்டோ மெக்கானிக் கௌதமி, படிப்படியாக ராம்கியின் அன்புத் தளையில் கட்டுப்பட்டு, ஜீன்ஸிலிருந்து புடைவைக்கு மாறிப் பூ வைத்து, பொட்டிட்டு, தலைகுனிந்து நிற்பது சுகமான கிராமிய இசை.

இந்த இருவருக்கிடையில் நடிப்பில் முதிர்ந்து வரும் ராம்கி. அடிதடி விவகாரங்களைக் கூடிய மட்டில் குறைத்து, உணர்ச்சி பூர்வமாக அவர் நடிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தந்திருப்பது ஆறுதலான மாற்றம். கதாசிரியருக்கு ஒரு ஷொட்டு.

கௌதமி சம்பந்தப்பட்ட மெக்கானிக் ஷெட் நிகழ்ச்சிகளில் இயக்குனர் பில்லா (கிருஷ்ணமூர்த்தியின்) கற்பனையோட்டம் ரொம்ப நல்லா.

கவுண்டமணியும் சின்னி ஜெயந்தும் உருவாக்கும் நகைச்சுவை வித்தியாசமான ஓகோ! அரங்கில் ஒரே கலகலப்பு.

உச்சகட்ட நிகழ்ச்சியில் யதார்த்தம் தடம் புரண்டு போனாலும், அளவான கலவையில் ஒரு நிறைவான பொழுதுபோக்கு.

— சி. ஆர். கே.

• கல்கி 9.12.90 இதழில் அடைத்து வைப்பதும் ஓர் ஆராய்ச்சியோ?'' என்ற தலைப்பில் பேட்டிகளைப் படித்தேன். டாக்டர் வி. ஏ. மூர்த்தி, விஞ்ஞான ரீதியான, சரியான விளக்கங்களை அளித்துள்ளார்.

முறைப்படி நான் ஒரு MEDICAL ETHICS COMMITTEE அமைத்துள்ளேன். ஒப்புதல் பத்திரத்தில் கையெழுத்துப் பெற்ற பின்னரே எங்கள் ஆராய்ச்சி துவங்கும். நாங்கள் யாரையும் ''அடைத்து'' வைக்கவில்லை. அறையைப் பூட்டவும் முடியாது.

மதுரை, ம. கி. சந்திரசேகரன்.
மதுரை காமராஜ் பல்கலைக் கழகம்.

தூள் கிளப்பி விட்டீர்கள்!

• சந்திரசேகர் சந்திக்க வேண்டிய பிரச்னைகளைத் தெளிவாக விளக்கிய தலையங்கக் கருத்து மிக அருமை. தன்னிச்சையாக எந்த ஒரு முடிவும் எடுக்க முடியாத சூழ்நிலில் இருக்கும் பிரதமரின் நிலையை ''ஐயோ பாவம்'' எனக் குறிப்பிட்டது மிகச் சரியானதே.

கொளவட்டம்,
கே. ஆர். தேவேந்திரன்.

• 'ஐயோ பாவம், சந்திரசேகர்!' தலையங்கம் அருமை. தக்க சமயத்தில் சொன்ன யோசனையைப் பிரதமர் ஏற்றுக் கொள்வாரா?

சென்னை — 45,
ஏ. ஜப்பார் காதர்.

• இன்றைய அரசியல்வாதிகள் ரதயாத்திரை எனப் பெயரிட்டுக் கொண்டு மலிவான விளம்பர அரசியல் நடத்தி ஆதாயம் பெற நினைப்பதை, 'நகைச்சுவையோடு பா. ரா. விளக்கியிருந்த விதம் அருமை.

அரகண்டநல்லூர், ஆர். விஜி.

• 'காவேரி' படத்திற்குத்தான் நான்கு இசையமைப்பாளர்கள் என்றில்லை. 'சிவகங்கைச் சீமை,' 'கண்ணில்தெரியும்கதைகள்' ஆகிய படங்களுக்கும் அப்படித்தான்!

ஒசூர், சப்தரிஷி.

• நல்ல திரைப்படம் தயாரிக்க என். எப். டி. சி. உதவுகிறது. அப்படியும் அதைப் பயன்படுத்திக் கொள்ள யாரும் முன்வரவில்லை என்கிற செய்தி வியப்பாக இருக்கிறது.

மேல்பட்டி, யோக. கவிதா.

• 'தமிழ்த்திரை உலகைக் கலக்கிய முதல் வில்லன் வீரப்பாதான் என்ற சிறப்பைக் கொடுத்துவிட்டு, அவருடைய படத்தைப் பிரசுரிக்கவில்லையே! அவருடைய அட்டகாசச் சிரிப்புக்கு அவ்வளவு பயமா!

சென்னை — 53,
வா. ரா. கண்ணன்.

• 'கரணம் தப்பினால் மரணம்' என்னும் வகையில் உயிரைப் பணயம் வைத்து நடிக்கும் ஸ்டண்ட் நடிகரை (அவன் மனத்தைப் புரிந்து கொள்ளாமல்) மற்றவர்கள் எப்படி மதிக்கிறார்கள் என்பதை 'அன்பு ஆயுதம்' சிறுகதை மூலம் மிக நன்றாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் பாலகுமாரன்.

மதுரை — 1,
கே. ஆர். ஜவஹர்லால் பாபு.

• பாலகுமாரனின் 'அன்பு ஆயுதம்' மனத்தின் ஆழத்தில் பதிந்துவிட்டது. காரணம் அவரின் வலிமை அப்படி.

சென்னை — 94,
கே. ஆர். பவானி.

• தங்களுக்கு விருப்பப்பட்டதை விரும்பிய நேரத்தில் சாப்பிட முடியாமல் ('டயட்' கெட்டுப் போய்விடுமாமே) அங்கவும் மீனாவும் தவிப்பதை நினைத்தால் வருத்தமாக இருக்கிறது!

சென்னை — 82,
எஸ். யோகலிங்கம்.

• மனத்தை ஈர்க்கும் புன்னகையுடன் காட்சி தரும் பானுப்ரியாவின் அட்டைப்படம் வெகு அருமை. 'லட்சுமி கடாட்சம்' நிறைந்த அந்தப் படத்தை எடுத்த உமது புகைப்படக்காரருக்கும், பிரசுரித்த உங்களுக்கும் முதலில் திருஷ்டி சுற்றிப் போட வேண்டும்!

அல்லம்பெருமாள்பட்டி,
என். சுரேஷ்.

வட்டமேஜை



• சினிமா சிறப்பிதழ் கண்டேன். 'திரையுலகைக் கலக்கிய வில்லன்கள்' சினிமா உலகின் விநோத நம்பிக்கைகள், இடம் பெறாத வசனங்கள், உடை அலங்காரங்கள், அடேயப்பா... இது போதாதென்று சினிமாவைப் பற்றிப் போட்டி... தூள் கிளப்பி விட்டீர்கள்!

சென்னை — 11,
வண்ணை கணேசன்.

• 'எழுதுங்கள் திரைக்கதையை' எழுதிய என் பெயர் 'கலைக்கோவன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு. 'கலைச்செழியன்' என்பதே சரி. சினிமா சம்பந்தமான முதல் நூல்கள் பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய 'தமிழ் பேசும் படக்காட்சி,' 'பேசும்பட அனுபவங்கள்' என்பன. பிறகு பி. எஸ். இராமய்யா எழுதிய 'சினிமா'; சாண்டில்யன் எழுதிய 'சினிமா'; சந்தானம் எழுதித் தமிழக அரசின் பரிசையும் பெற்ற 'இதுதான் சினிமா' ஆகிய நூல்களும் குறிப்பிடத்தக்கவை.

சென்னை — 79,
பா. கலைச் செழியன்.

• ஒவ்வொரு திரைப்பட ஜனிப்பின் பின்னணி மற்றும் அடிப்படை அம்சங்கள் அனைத்தையும் அலசிய கட்டுரைகள், பேட்டிகளுடன் அவலங்களைச் சுட்டிக்காட்டும் சிறுகதைகளுமாய்ச் சினிமா சிறப்பிதழிலும் தனது தனித்தன்மையை நிலைநாட்டியுள்ளது கல்கி.

காட்டூர், எஸ். அருள்மொழி.

சொல்லடிக்குப் பதிலடி!



சொல்லடிக்குப் பதிலடி கொடுப்பதில் வல்லவர் ராஜாஜி. அவரது மேதா விலாசத்தை அவருடைய கொள்கை களிலும், அவற்றுக்கு அவர் அளித்த விளக்கங்களிலும் பார்த்தோம். அவரது அறிவுக் கூர்மையை அவருடைய வாதத் திறனில் கண்டோம். அதில்தான் எத்தனை நவீனமான நகைச்சுவை இழை யோடியது!

* நேருஜி: சுதந்திரக் கட்சியை நசுக்கு வோம்!

ராஜாஜி: இந்த நசுக்கும் மனப்பான் மையை நசுக்குவோம்!

* ''அரசாங்கத்துக்கு வரிகள் போட இரண்டே வழிகள்தான் உள்ளன. நேர்முக வரிகள்; மறைமுக வரிகள். நேர்முக வரி களைப் பணக்காரர் மீதும் மறைமுக வரி களை ஏழைகள் மீதும் விதிக்கிறது அரசு. தொழிலதிபர்கள் மீது நேர்முக வரிகளை அவர்களால் தாங்க முடிந்தமட்டில் விதிக் கிறது. மறைமுக வரிகளை ஏழைகள் மீது அவர்களால் அதனைப் புரிந்து கொள்ள முடியாதமட்டில் விதித்துக் கொண்டே போகிறது!'' — ராஜாஜி.

* அதிகாரிகள் கூட்டம் ஒன்றில் பிரதமர் நேருஜியை அனைவரும் ஆதரிக்க, அமைச் சர் ராஜாஜியைப் பார்த்து நேருஜி சொன் னார்: ''பாருங்கள் ராஜாஜி, பெரும் பான்மை என் பக்கம்தான் இருக்கிறது.''

ராஜாஜி: ''பெரும்பான்மை உங்கள் பக்கம் இருக்கலாம்; ஆனால் தர்க்க நியாயம் என் பக்கம்தான் உள்ளது!''

* ராஜாஜியை 'ஒரு பழமைவாதி, சம்பிரதாயப் பிரியர்' என்று நேருஜி ஒரு முறை கிண்டலடித்தார்.

ராஜாஜி: ''ஒரு சம்பிரதாயம் காலம் கால மாக மாறாமல் இருந்து வருகிறது என்றால், ஒரு மரபு நடைமுறையில் மாற்றமின்றித் தொடர்ந்து நீடிக்கிறது என்றால், அதற்கு உள்ளார்ந்த தகுதி இருப்பதால்தான் அப்படி ஜீவனுடன் திகழ்கிறது. அதுவே அது ஒரு நல்ல மரபு என்பதற்குச் சான்று. மோசமா னது என்பதற்குச் சான்றாகாது.''

* இந்திரா காந்தியின் கொள்கையை இவ் வாறு விமர்சித்தார் ஸி. ஆர்.

''உங்களைச் சூழ நின்று மக்கள் 'ஜே' போடுவதானது பொருளாதார நியதிகளை மாற்றி விடாது. கடற்கரையில் அமர்ந்து அரசன் கன்யூட், ''அலைகளே திரும்பிப் போங்கள்!'' என்று கூறியது போல நீங்கள் நடந்து கொள்கிறீர்கள். காலத்துக்கு ஒவ்வாத சோஷலிஸம் இந்திரா காந்தி சொல்கிறார் என்பதாலேயே நவீனமான ஒன்றாகி விடாது!''

* ''நமது தலைவர்கள், நாட்டின் நிர்வாகத் தைக் கவனிப்பதை விடப் பெயர்களை மாற்றுவதிலும், வழக்கத்தில் உள்ள சொற் களை மாற்ற முயற்சி செய்வதிலும்தான் நேரத்தையும் அறிவையும் சக்தியையும் அதிக மாகச் செலவிடுகிறார்கள்!'' — ராஜாஜி

* ''குத்தலான கேள்விகள் கேட்கப்பட்டா லும் நீங்கள் கோபமடைவதில்லையே எப்படி?'' என்று ஒரு பத்திரிகை நிருபர் கேட்டார்.

ராஜாஜி: ''குத்தலான கேள்வியாவது ஒன்றாவது. நான் தவறு செய்திருந்தால் எனக்குக் கோபப்பட உரிமையில்லை. நான் சரியான படிதான் நடந்து கொண்டிருக் கிறேன் என்றால் கோபப்படக் காரண மில்லை. தவறு செய்து விட்டு அதை நியாயப்படுத்த முயன்று தர்க்கத்தில் தோற் கும் போதுதான் கோபம் வரும்!''

* ராஜாஜி அடிக்கடி கடவுளைக் குறிப் பிடுவார். நேருஜி, ''கடவுள் சுதந்திரக் கட்சி யின் மூத்த பங்குதாரர்களில் ஒருவர் போலும்!'' என்று கேலி செய்தார்.

ராஜாஜி: ''என்ன செய்வது, நேருவைச் சுற்றித் துதிபாடுகிறவர்கள் நிறையப் பேர் இருப்பதால் நேரு தம்மையே கடவுள் என்று எண்ணிக் கொண்டு விடுகிறார்!''

— எஸ். எஸ். பங்கேஷ்வர்,
பம்பாய் நாளிதழான கூரியரில்
எழுதியது.



உலா வரும் உல்ஃபா வீரர்கள்

அஸ்ஸாம்:

உல்ஃபா ஒழியுமா? அமைதி நிலவுமா?

ஒரு சமயம் அஸ்ஸாம் முதல்வர் மஹாந்தாவின் மச்சானையே கடத்திக் கொண்டு போய் விட்டார்கள் உல்ஃபா வீரர்கள்! இரண்டு நாட்களுக்குப் பிறகு அவர் விடுவிக்கப்பட்ட போதிலும் உல்ஃபா அமைப்பின் வலிமையை இந்தச் சம்பவம் உணர்த்தியது. அஸ்ஸாம் அரசின் கையாலாகாத்தனத்தையும் சுட்டியது. பின்னணி என்ன?

அஸ்ஸாம் இளைஞர்களிடம் நீண்ட கால மாகவே அதிருப்தி பெருகி வந்திருக்கிறது. சட்டத்துக்குப் புறம்பாக ஏராளமான பங்களாதேஷ் வாசிகள் அஸ்ஸாமில் ஊடுருவியது ஒரு காரணம். அடுத்தடுத்து வந்த மத்திய அரசுகள் அஸ்ஸாமில் போதிய அளவு கவனம் செலுத்தவில்லை என்ற குறை மற்றொரு காரணம். இவைதாம் 1979 இல் அஸ்ஸாம் இயக்கத்தைத் தோற்றுவித்தது.

அமைதியான முறையில் உரிமைகளை அடைய வேண்டும் என்பதே இந்த இயக்கத் தலைவர்கள் பலரது கருத்தாக இருந்த போதிலும் ஒரு பிரிவினர் வன்முறையின்றி வேறு வழியில்லை என்று கருதி அந்தப் போக்கில் சென்றார்கள். விளைவு அதே ஆண்டில் ஏப்ரல் 7 ஆம் தேதி உல்ஃபா இயக்கம் தோன்றியது. "ஐக்கிய விடுதலை முன்னணி. அஸ்ஸாம்" என்பது உல்ஃபாவின் விரிவாக்கம்.

இவர்கள் நோக்கம் என்ன? கிட்டத்தட்ட ஈழத்தின் விடுதலைப்புலிகள் போல்தான். மக்களை உசுப்பி விடுவது முதல் பணி. அடுத்த கட்டம்: சுதந்திர சோஷலிஸ அஸ்ஸாம் தேசம். இந்த லட்சியத்தை அடையப் பணம் வேண்டும். ராணுவப் பயிற்சியும் ஆயுதங்களும் தேவை. இதற்கு வங்கிகளைக் கொள்ளையடிக்கலாம்; பணக்காரர்களை பிளாக் மெய்ல் செய்யலாம்; பணம் தராதவர்களைக் கடத்திக் கொண்டு போகலாம்; கொலை செய்யலாம்! கானகங்களில் மறைந்து வாழ்ந்து திடீர்த் தாக்குதல் நடத்தலாம்.

தேர்தல் மூலம் பதவிக்கு வந்து நல்லாட்சி வழங்குவதில் இவர்களுக்கு நம்பிக்கை இல்லை. தேர்தல் என்பதே ஒரு மோசடி என்று கருதுகிறார்கள். இவர்களின் செல்வாக்குப் பரவியுள்ள பகுதிகளில் இவர்களே நீதி வழங்குகிறார்கள்; மரண தண்டனை கூட விதிக்கிறார்கள்; வரி வசூலிக்கிறார்கள்.

இந்த நிலையைச் சமாளிக்கும் நோக்கில் இளைஞர் இயக்கத்தின் அமைதிப் பிரிவிடம் ஆட்சியை அளித்து அவர்கள் மூலமே வன்முறைப் பிரிவை அடக்கிவிடலாம் என்று மத்திய அரசு நினைத்தது. அதன் விளைவுதான் அஸ்ஸாம் தேர்தல், மஹாந்தா வெற்றி. அவருடைய அமைச்சரவை — எல்லாம்.

ஆனால் ஆரம்பம் முதலே இளைஞர் இயக்கத்தின் இரு பிரிவினரிடையேயும் தொடர்பு இருந்து வந்திருந்த காரணத்தால் வன்முறைப் பிரிவான உல்ஃபா இயக்கத்தின் மீது மஹாந்தா அரசு தீவிர நடவடிக்கை எடுக்க முடியவில்லை. இதனைச் சட்ட ஒழுங்குப் பிரச்னையாகக் கருதி, முதல்வர் மஹாந்தா சற்றுத் தீவிரம் காட்டினாலும், உள்துறை அமைச்சர் புக்கன் மெத்தனம் காட்டினார் — அரசியல் தீர்வுக்கு முயற்சி செய்ய வேண்டும் என்றார். இவர்களிடையே இருந்த கருத்து மாறுபாடும், இழுபறியும் உல்ஃபா இயக்கம் வலிமை பெறவே உதவியது.

இதனால்தான் சமீபத்தில் அஸ்ஸாம், ஜனாதிபதி ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டு உல்ஃபாவை அடக்க ராணுவம் அனுப்பப்பட்ட போது யாரும் அதிகமாக ஆட்சேபணை தெரிவிக்கவில்லை.

ராணுவம் பலரைக் கைது செய்துள்ளது; உல்ஃபா 'ஆட்சி'யின் பயங்கரங்களை அம்பலத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது. ஏராள ஆயுதங்களையும், உல்ஃபா முகாம்களையும், உல்ஃபா தலைவர்களின் பெயர்கள் அடங்கிய டயரிகளையும் கைப்பற்றியுள்ளது. ஆனால் தலைவர்களைக் கைப்பற்ற முடியவில்லை! அவர்கள் தப்பி ஓடிப் பதுங்கியிருக்கிறார்கள். தக்க தருணத்துக்குக் காத்திருந்து மீண்டும் தாக்குவார்கள்.

காஷ்மீர், பஞ்சாப் போல் இங்கேயும் அடிப்படைப் பிரச்னை, வேலை வாய்ப்பின்மை. வேலையில்லாப் பட்டதாரிகள் 15 லட்சம் பேர் அஸ்ஸாமில் இருக்கிறார்கள். படித்த பிறகு வேலை கிடைக்கவில்லை என்றால் வெறுப்பும் கோபமும் அடைந்து ஆயுதம் ஏந்துகிறார்கள். அரசின் கல்வி, மற்றும் தொழில் — பொருளாதாரக் கொள்கைகளில் அடிப்படை மாற்றங்கள் செய்வதே இந்தியா பிளவுபடாமல் காக்கும்.

— ஆர். வி.

காதல் என்பது என்ன?

மாணவர் கட்டுரைப் போட்டி:


ரூ. 50 முதல் பரிசு பெறும் கட்டுரை:

ஒத்த வயதுள்ள ஆண் பெண் இரு பாலரும் மனத்தளவில் ஒருவர் இல்லாமல் ஒருவர் வாழ முடியாது என்னும் நிலை எய்துதலே காதல் ஆகும்.

பருவவயது ஆண் ஒருவன் பருவவயதுப் பெண் ஒருத்தியைப் பார்க்கிறான். உடனே அவன் மனத்தில் இவளே என் வாழ்க்கையைப் பங்குபோட்டு இன்பதுன்பத்தில் எனக்கு ஈடுகொடுக்கக்கூடிய துணைவி எனும் எண்ணம் எழுகிறது. அவன் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கலாம். ஆனால் குறிப்பிட்ட ஒருத்தியைப் பார்க்கும் போதுதான் இந்த எண்ணம் அவனுள் எழுகிறது. அந்த எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக அவன் இதயத்தையே ஆக்கிரமிக்கிறது. இதே நிலை இவனைக் கண்ட அந்தப் பெண்ணுக்கும் ஏற்பட்டு, இவனுடைய எண்ணத்தை அவள் இவனிடம் நெருங்கிப் பழகுவதின் மூலம் பிரதிபலித்தாளானால் இருவருக்கும் காதல் ஏற்படுகிறது. நெருங்கிப் பழகுதல் என்பது ஒருவரை யொருவர் தொட்டுப் பழகுதல் என்பது இங்கு அர்த்தமில்லை. தூர நின்று ஒருவரை ஒருவர் பார்த்ததும் முகமலர்தல், இலேசாகச் சிரித்தல், ஆயிரம் பேர் உள்ள கூட்டமாயினும் ஒருவருக்கு ஒருவர் தெரியும் படியாகப் புன்னகை செய்தல், யாருமே இல்லையெனில் மணிக்கணக்காகப் பேசுதல். அதாவது உளறுதல். இவை காதலின் அறிகுறிகள்.

இதன் மெய்யான வெளிப்பாடு என்ன? துன்பமே! எப்படியெனில் மறுநாள் அவனையோ, அவளையோ சந்திக்க இடம் நேரம் குறிப்பிட்டு விட்டு அவளைச் சந்திப்பதைப் பற்றியே நினைத்து உருகி வருந்துவது. இந்நிலையில் ஒரு நிமிடம் போவது ஒரு யுகமாகத் தோன்றும். அவளைக் கண்டவுடன் மகிழ்ச்சி ஒரு விநாடிதான். சிறிது நேரம் தானே பேச முடிகிறது. உடன் சென்று விடுவாளே என்ற துன்பம் உருவாகிறது. இப்போது நேரம் இறக்கை கட்டிக் கொண்டு பறப்பது போல் தோன்றும். அவள் சென்று விட்டாலோ மீண்டும் சந்திக்கும் வரை அவள் நினைவு தரும் இன்பம் கலந்த துன்பம்.

அவளைப்பற்றி யாராவது தவறாகக் கூறினால் உடன் அவரைத் தட்டிக் கேட்க வேண்டுமென்ற வெறி. அவளைப் பற்றி புகழ்ச்சியாக யாராவது கூறினால், மேலும் மேலும் தூண்டி அதைக் காது குளிரக் கேட்க வேண்டுமென்ற ஆர்வம். மொத்தத்



தில் இரவும் பகலும் இதயத்தை முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது காத(லி)லரின் நினைவே. ஆக காதலுக்கு அடிப்படை அதன் நினைவே. ஒருவரையொருவர் தொட்டுக் கொள்ளவோ, அணைத்துக் கொள்ளவோ தேவையேயில்லை.

ஒருவருக்குப் பிடித்தது, பிடிக்காதது, முதலியவற்றை அறியச் சொல்லும். அவளுக்குப் பிடித்த கலர் சட்டை, பாண்ட் அணிந்து கொண்டு அவள் முன்னே நின்று அவளுடைய பாராட்டுக்கள் கிடைத்தவுடன் இமயத்தையே வென்ற பெருமை. இந்த மனப்பான்மையே மணமானதும் ஒருவரை ஒருவர் புரிந்து குடும்பம் நடத்த உதவும்.

சுருக்கமாகக் கூறினால் ஒருவர் மனத்தில் மற்றவர் முற்றாக அமர்ந்து, ஒருவர் உணர்ச்சிகளை மற்றவர் முழுமையாகப் புரிந்து, ஒருவரையொருவர் அருகிலிருக்கும் போது மகிழ்ந்து, பிரிவென்றால் நெகிழ்ந்து, காலம் முழுவதும் ஒருவருக்கொருவர் துணையாய் நிற்க உறுதியெடுத்து, ஒருவர்பால் ஒருவர் கொஞ்சம் கொஞ்சமாக ஈர்க்கப்பட்டு ஒருவரில் ஒருவர் முற்றாகத் தன்னை இழப்பதே காதல்.

— டி. எஸ். கிருஷ்ணன்,
இரண்டாமாண்டு பொறியியல்
(மெக்கானிகல்),
நேஷனல் இஞ்சினியரிங் கல்லூரி,
நாலாட்டின்புத்தூர்,
கோவில்பட்டி தாலுகா.

ஆத்மார்த்தமான பிணைப்பு

ஒவ்வொருவரும் எதையேனும் எதிர்பார்த்துத்தான் மற்றொருவர் மீது பிரியம் வைக்கின்றனர். அன்பளிப்பைப் பொறுத்துத்தான், அன்பின் வலிமை கணக்கிடப்படுகிறது. ஆனால் "பலனை எதிர் பாராமல் கடமையை மட்டும் செய்." என்று கீதையில் கூறியிருப்பது போல, எந்த விதமான பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் செலுத்தப்படும், மன உணர்ச்சியே காதல் எனலாம். அது ஆத்மார்த்தமான பிணைப்பு.

— செ. ப. தர்சனா,
மூன்றாமாண்டு, இளங்கலை, வரலாறு,
எத்திராஜ் மகளிர் கல்லூரி,
சென்னை — 105.

உறவின் பலத்தைப் பிரிவு உணர்த்தும்

செம்மண் நிலத்தில் பெய்த மழை நீரானது அம்மண்ணினுடைய நிறத்திற்கே மாறிவிடுவது போல அன்பு கொண்ட இரு உள்ளங்கள் ஒன்றுபட்டு வாழ்வதே காதல். காதலெனில் அங்கு கட்டாயம் ஊடலும் இடம் பெற்றிருக்கும். சிறுசிறு சண்டைகள் ஏற்படுவது சகஜமான ஒன்று. பிரிவுதான் உறவின் பலத்தை சரியாகக் காட்டும். அப்படிப்பட்ட பிரிவுக்குப் பின்னர் மீண்டும் இணையும் போது உள்ளமும், உயிரும் துடிக்கும் துடிப்பை அனுபவித்து மட்டுமே உணர முடியும். கூடல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் ஆகிய எல்லாவற்றையும் காதல் தன்னகத்தே கொண்டுள்ளது. உண்மையான காதல் என்றும் தோல்வியடைவதில்லை. மனிதர்களுக்கு பெரும்பாலோருக்கு காதல் பிறப்பதே இல்லை. பிறந்தவர்களுக்கு அது சாவதில்லை.

— எஸ். கலைச்செல்வி,
மூன்றாம் ஆண்டு (ரசாயனம்),
குந்தவை நாச்சியார் அரசு கலைக் கல்லூரி,
தஞ்சாவூர் — 7.

இறைவன் எழுதிய தீர்ப்பு!

பிறர் கொடுப்பவும், அடுப்பவுமின்றி, ஊழ்வினையால் தாமே எதிர்ப்பட்டுக் கூடுவது காதல். பார்ப்பவரிடமெல்லாம் பார்வை சென்றாலும், பகிர்ந்து கொள்ள, பங்கு போட்டுக் கொள்ளத் தோணுவதில்லை. ஆனால், யாரோ ஒருவரிடம் மட்டும் சாதி, மத, பேதமின்றி, பணம், பதவி, அழகு, அந்தஸ்து, படிப்பு என்ற எதுவும் பாராது, உள்ளம் ஓடும் போது, தியாகம், தைரியம், விட்டுக் கொடுத்தல், மன்னித்தல் என்று எல்லாவற்றையும் அந்த ஒருவருக்காகச் செய்யத் தோன்றுகிறதே! இதையேதான், "கந்தர்வ மணம்" என்று தொல்காப்பியம் கூறும். நாம், நல்ல திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன" என்று இன்று கூறுகிறோம். மனங்கள் ஒன்றுபடும் போதுதான் அது "திரு" "மணம்" ஆகின்றது.

ஊழ்வினையின் காரணமாக இணைந்த அந்த உள்ளங்களுக்குள் ஏற்படும் "பந்தம்" உயிரில் கலந்த பந்தம். அதற்குச் சாவென்பது இல்லை. இறைவன் எழுதிய தீர்ப்பினாலேயே எழும் உணர்வு உறுதியுடன் நிற்கும்.

— என். கீதா,
தமிழ் எம். ஏ., இரண்டாம் ஆண்டு,
எத்திராஜ் கல்லூரி,
சென்னை — 105.

கள்ள நோட்டை ஒழிக்க ஒரு நல்ல யோசனை?





* இவர் அளவுக்கு...



* ...இவருக்குப் புகழ்!

* துயரத்துடன் மகிழ்ச்சி

*** பூமகன், மானம்பாடி.**

? இரண்டாவது இடத்தையே தக்க வைத்துக் கொள்ளும் தேவிலாலை, இரண்டாவது நெடுஞ்செழியன் என்கிறேன், சரிதானா?

! நெடுஞ்செழியனைப் போலவே இவரும் காணாமல் போய்விடுவார் என்கிறீரா? ரொம்பச் சரி. ராஜீவால் இவரைச் சகித்துக் கொள்ள முடியாது!

*** வளர்மதி ஆசைத்தம்பி, தஞ்சை.**

? மேகம் தொகுதிக் கலவரம் பற்றி விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட நீதிபதி மதன் ராஜினாமா செய்து விட்டாரே?

! தேசிய முன்னணி ஆட்சி தொடர்ந்திருந்தால் அவர் ராஜினாமா செய்ய நேர்ந்திருக்காது. அந்த ஆட்சிக்கு ஆபத்து வந்த நிலையிலும், மாறிவிட்ட சூழ்நிலையிலும் ராஜினாமா தவிர அவருக்கு வேறு வழி கிடையாது!

*** எஸ். நாரம்பு நாதன், கரண்டை.**

? கருணாநிதியின் தற்போதைய பலம் என்ன?

! ஜெயலலிதாவின் உடல் நலக் குறைவும் ஹைதராபாத் வாசமும்!

*** பாலகிருஷ்ணன்ஜி, சங்கமங்கலம்.**

? கள்ள நோட்டை ஒழிக்க ஒரு நல்ல யோசனை கூறுங்களேன்?

! ஆரோக்கியமான பொருளாதாரத்துக்கு ஒத்து வராத முறையில், பண வீக்கத்தை உருவாக்கும் விதத்தில் ஏகமாக அரசாங்கம் அச்சடித்துத் தள்ளும் கரன்ஸி நோட்டுகள் எல்லாமே ஒரு வகையில் பார்த்தால் கள்ள நோட்டுகள்தான்! அரசாங்கமே அச்சடிக்கும் இந்தக் கள்ள நோட்டுகளுக்கு அவசியமில்லாதபடி, புத்திசாலித்தனமான பொருளாதாரக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்படுமானால், வேலை வாய்ப்புப் பெருக, வாழ்க்கைத் தரம் உயர, கள்ள நோட்டு அச்சடிக்கும் ஆபத்தான வேலையில் யாரும் ஈடுபட மாட்டார்கள்.

*** எல். ஆர். சப்தரிஷி, ஹோசூர்.**

? சந்திராவதி ராஜினாமா — பிளீஸ் கமெண்ட்..?

! தமிழ் நாட்டில் இல்லையென்றாலும் பாண்டியிலாவது ஓர் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திப் பார்க்கலாமே என்று இ. காங்கிரஸ் மேலிடம் விரும்புவதை, கேட்டுப் பெறப்பட்ட இந்த ராஜினாமா உணர்த்துகிறது. ஒரே ஒரு சுயேச்சை ஆதரவில்தான் ஆட்சி நீடிக்கிறது என்பதால் கவிழ்ப்பது எளிது. இரண்டு ஜனதா தள மந்திரிகளிடையே யாருக்கு அதிகப் பசையுள்ள இலாகா என்பதில் ஏற்பட்ட போட்டி. 'ஜனதா (எஸ்)வுக்குத் தாவுவேன்' என்ற ஒருவரது மிரட்டலில் முடிய, அமைச்சரவை ஆட்டம் கண்டிருக்கிறது. முள்ளின் மேல் நிற்கும் முதல்வர் ராமச்சந்திரன், கட்டிக் காப்பதிலேயே மொத்த நேரமும் செலவிட வேண்டியவராய் இருக்கிறார். மிரட்டுகிறவர்களுக்கு வாரியத் தலைவர் பதவி அல்லது அரசு நிறுவனத் தலைமைப் பதவி என்று வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியிருக்கிறார். புதிய கவர்னர் ஹர் சொரூப் சிங்கும் வந்துவிட்ட நிலையில், அமைச்சரவையைக் காப்பாற்றக் கூடிய ஒரே விஷயம் புதுவை காங்கிரஸுக்குள்ளேயே நிலவும் உட்பூசல் ஒன்றுதான்.

* முள்ளின் மேல்...



* கல விமர்சனம்...



எங்கே மறுபடி பரூக் மரக்காயரே பதவிக்கு வந்துவிடுவாரோ என்பதால், காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே அவரது எதிராளிகள் ஆட்சி மாற்றத்தை விரும்பாதிருக்கக் கூடும்! துருப்புச் சீட்டு: வேறு யார்? 'ஜெ'தான்!

*** என். முருகேஷ், பெருஞ்சேரி.***

? எல்லா அதிகாரங்களுடன் கூடிய சுயாட்சி உரிமையை மாநிலங்களுக்கு அரசு வழங்கினால் என்ன?

! பாதுகாப்பு, அயல்நாட்டு விவகாரம், கரன்ஸி போன்ற சில அம்சங்கள் தவிர மற்ற எல்லா விஷயங்களிலும் சுயாட்சி வழங்குவதால் மாநிலங்கள் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறும். முன்னேறாததற்கு மத்திய அரசைக் காரணம் காட்டித் தப்ப முடியாது. நாட்டின் ஒருமைப்பாட்டைக் கட்டிக் காக்கவும் இதுவே சிறந்த வழி. ஆனால் உங்களுக்குத் தெரிந்த நியாயம் மத்தியில் அதிகாரத்தில் அமர்ந்திருப்பவருக்குப் புரியவில்லையே!

*** எஸ். யோகலிங்கம், சென்னை.**

? இரண்டே படிக்குக் கிடைத்த அளவுக்கு விஜயசாந்திக்கும் புகழ் கிடைத்துள்ளது பற்றி?

! கரும்பிலிருந்துதான் சர்க்கரை கிடைக்கிறது. ஆனால் கரும்பை விடச் சர்க்கரைக்குத்தானே வரவேற்பு அதிகம்!

*** மேலை. பழ. நாகப்பன், சென்னை.**


? சமீபத்திய அரசியல் ஜோக் — நீர் ரசித்தது?

! உலகையே உலுக்கிய ஜோக் ஒன்றை கோர்பசேவ் அண்மையில் கூறியிருக்கிறார்! அது ஒரு சுயவிமர்சனமாகவும் அமைந்துள்ளது. உலகத் தலைவர்கள் பலரும் அது நல்ல ஜோக்கா, மோசமான ஜோக்கா என்று விவாதித்து, மண்டையை உடைத்துக் கொண்டிருக்கிறார்கள்! ருஷ்யப் பொருளாதார நிபுணர்களின் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி நடத்திக் கொடுத்த பிறகு, கோர்பசேவ் பேச்சுவாக்கில் அந்த ஜோக்கைச் சொன்னார்:

"பிரெஞ்சு அதிபர் மிட்டராண்டுக்கு நூறு காதலிகள். ஒருத்திக்கு மட்டும் எய்ட்ஸ். ஆனால் யாருக்கு என்று தெரியவில்லை! அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷுக்கு நூறு மெய்க்காவலர்கள். ஒருவன் மட்டும் பயங்கரவாதி. ஆனால் அவன் யார் என்று தெரியவில்லை! சோவியத் அதிபர் கோர்பசேவுக்கு நூறு பொருளாதார ஆலோசகர்கள். ஒருவன் மட்டும் புத்திசாலி; ஆனால் அவன் யார் என்று தெரியவில்லை!"



* கௌரவக் குறைவு



* திருப்பிப் போடுவார்!

*** எல். மாறன், மேல்பட்டி.**

? தங்களை மிகவும் மகிழ்ச்சி அடையச் செய்த, துயரத்தில் ஆழ்த்திய செய்தி எது?

! 'இந்த நாட்டில் இன்றைக்கும் மலச்சட்டிகளைத் தலையில் தூக்கிச் செல்லும் லட்சக்கணக்கானவர்கள் நிலைமாற நாம் ஏதேனும் செய்தே ஆகவேண்டும்' என்று பிரதமர் சந்திரசேகர் கூறியது, ஒருங்கே துயரத்தையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது. அவர் செய்து காட்டி விட்டால் அவரையே தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடலாம்!

*** ம. செந்தில்நாதன், மதுரை.**

? விலைவாசி உயர்வுக்கும் மதக் கலவரங்களுக்கும் வி. பி. சிங்கே காரணம் என்று முலாயம் சிங் யாதவ் குற்றம் சாட்டியுள்ளாரே?

! ராஜீவால் நாளை இவரது அமைச்சரவை கவிழ்க்கப்பட்ட பிறகு நாட்டின் எல்லாத் துயரத்துக்கும் ராஜீவ்தான் காரணம் என்று பிளேட்டைத் திருப்பிப் போடுவார்!

*** ஏ. ஈஸ்வரன், தேலூர் மேட்டுக்கடை.**

? ஆந்திராவில் வன்முறை தலைவிரித்தாடியது பற்றி?

! அதற்குச் சென்னா ரெட்டி பலி கடா ஆக்கப்பட்டிருக்கிறார் என்றாலும் ராஜினாமாவை அவர் இன்னும் நாகரிகமான முறையில் செய்திருக்கலாம். அவசரம் அவசரமாக வாரியத் தலைவர்களை நியமித்ததும், அவசர ஃபைல்களைப் பைசல் செய்ததும், 'மாட்டேன், முடியாது' என்று முரண்டு பிடித்ததும் அவர் கௌரவத்தைக் குறைத்தன.

*** ரூ. 20 பரிசு பெறுபவர்:**

என். முருகேஷ்,
1-19, வடக்கு வீதி,
பெருஞ்சேரி, — 609 404.
மங்கைநல்லூர் (அஞ்சல்)

சிகரங்களை நோக்கி... 11

திருஞானம் வலி மறந்தான்.

கட்டுக்குள்ளிருந்த காயம் காணாமல் போனது.

சரிந்து கிடந்தவன் சற்றே எழுந்தான்.

"என்ன இது விந்தை!

வீட்டுக்குள்ளிருக்கும் தந்தையை மகளே காணவில்லையா?

கண்களுக்கு இமைகள் காவலிருந்தாலும் இமைகளைக் கண்கள் காணவில்லையென்பது இயற்கை.

ஆனால் ஒரே கூட்டுக்குள் இருந்து கொண்டு தந்தையை மகள் காணவில்லை என்பது செயற்கை.

விதைக்குள் படுத்திருக்கும் விருட்சம்போல் இதற்குள் ஒரு சோகம் இருக்கிறது! என்ன ஓவியா...? அது என்ன?"

உணர்ச்சி காட்டாமல் ஓவியா உறைந்து நின்றாள்.

அவளுக்குள் சொல்ல முடியாத வார்த்தைகள் சூல்கொண்டு சூல்கொண்டு கலைந்தன.

அவள் மனசுக்குள் நிகழும் ஒரு சத்தமில்லாத யுத்தத்தைக் கண்கள் காட்டிக் கொடுத்தன.

அவள் மௌனத்தை அவனே உடைத்தான்.

"சில நேரங்களில் மௌனம் என்பது மன்னிப்பு.
சில நேரங்களில் மௌனம் என்பது தண்டனை. இப்போது உன் மௌனம் எனக்குத் தண்டனை.

சொல் ஓவியா! சொல்.

உன்னைப் பிடிக்கவில்லையா உன் தந்தைக்கு?"

சோகம் பூசிய ஒரு புன்னகை அவள் உதடுகளில் ஓடியது.

"இந்த பூமியில் என் தந்தைக்குப் பிடித்த ஒரே ஓர் அம்சம் நான் மட்டும்தான்.

அவருக்கு வானம் பிடிக்கவில்லை;
வாழ்க்கை பிடிக்கவில்லை.

மரங்கள் பிடிக்கவில்லை;
மனிதர்கள் பிடிக்கவில்லை.

வாழ்க்கையின் மீது பூசப்பட்டிருக்கும் பொய்மை — சம்பிரதாயங்களால் கட்டிக் காக்கப்படும் போலிமை —
எதுவுமே பிடிக்கவில்லை.

தன்னை எங்கோ அவர் தொலைத்துவிட்டார்.

தன் முகத்தையும் உணர்ச்சிகளையும் தாடிக்குள் புதைத்துவிட்டார்.

இப்போது என் வீட்டுக்குள்ளிருப்பது காணாமல் போன ஒரு மனிதனின் மிச்சம்தான்."

"மறைக்காமல் சொல் ஓவியா! அவர் என்ன மனநோயாளியா!"

"இல்லை; அப்படியில்லை.
அவர் தோற்றம் அப்படித் தோற்றுவிக்கலாம்.
வைக்கோலுக்குள் கிடந்தாலும் அது வைரம்.

ஆனால் அவரைப் பார்த்தால் நீங்கள் கேட்ட கேள்வி நிஜமென்று தோன்றும்.

அழுக்கில் குளித்த ஒரு தோற்றம்;
பிசுக்குப் பிடித்த ஆடைகள்.

கண்களில் மனிதப் பசையற்ற ஒரு பார்வை!

இறந்தவனின் உதடுகளில் ஒட்டியிருப்பது மாதிரி ஒரு புன்னகை.

உறக்கத்தில் புலம்புகிற குழந்தை மாதிரி சம்பந்தமில்லாத வார்த்தைகள்.

எப்போதாவது என்னை உற்று உற்றுப் பார்க்கிற போது மட்டும் அவர் கண்களில் பாசத்தின் தீர்த்தேக்கம்.

அவர் மனமென்னும் கண்ணாடி நொறுங்கிப் போனது.

ஆனால், எல்லாச் சில்லுகளிலும் என் பிம்பம் மட்டுமே."

"இந்த வீட்டில் அவர் எந்த அறையில் இருக்கிறார்?"

"நிலவறையில் இருக்கிறார்.

பூமிக்கு மேலே வசிக்கும் கிளியைப் போல் இருந்தவர், பூமிக்குக் கீழே வசிக்கும் எலியைப் போல் இருக்கிறார்."

"என்ன செய்கிறார்?"

வைரமுத்து

''ஆராய்ச்சி.''

''என்ன ஆராய்ச்சி?''

''இதயமே இல்லாமலே கூடப் பல
மனிதர்களுக்கு ரத்த ஓட்டம் இருக்கிறதே...
எப்படி என்ற ஆராய்ச்சி.

விலங்கின் உருவத்திலிருந்து விடுபட்ட
மனிதன், விலங்கின் குணத்திலிருந்து
எப்போது விடுபடப் போகிறான்
என்ற ஆராய்ச்சி.

டிசம்பர் மாதத்து இலைகளைப் போல
மெல்ல மெல்ல உதிர்ந்து கொண்டிருக்கிற
மனிதப் பண்புகளை எப்படி மீண்டும்
துளிர்க்க வைப்பது என்ற அவலங்கலந்த
ஆராய்ச்சி.''

இந்த பூமியில் இனிமேல் நேசிப்பதற்கு
ஏதாவது மிச்சமிருக்கிறதா என்ற
கண்ணீர் நனைந்த ஆராய்ச்சி.''


திருஞானம் சிரித்தான்.

''உன் தந்தை பெருமூச்சுக்கும் விரக்திக்கும்
பிறந்த குழந்தை என்று நினைக்கிறேன்.

இந்த மண்ணை நேசிக்க முடியாதவர்கள்
சுவாசிக்கும் பிணங்கள்.''

''இல்லை. என் தந்தை நேசித்தவர்தான்.

ஒரு புல்லின் இலையைக் கூட மயிலின்
தோகை போல மகிழ்ந்து பார்த்தவர்தான்.



முன்னுடம்பைத் தரையில் பதித்துப்
பின்னுடம்பை இழுத்துக் கொள்ளும் ஒரு
புழுவின் இயக்கத்தில் கூட பிரபஞ்சத்தின்
பிரம்மாண்டம் பார்த்தவர்தான்.

ஒரு வண்ணத்துப் பூச்சியின் இறக்கைகளில்
அமர்ந்து கொண்டு இந்தப் பூமியை வலம்வர
முடியாதா என்று புலம்பியவர்தான்.

ஆறறிவும் ஐந்தறிவும் ஓரறிவும் கொண்ட
உயிர்களை மட்டுமல்ல — ஒரு செல்
உயிர்களைக் கூடத் தன் உயிரின்
பாகமென்று உணர்ந்தவர்தான்.''

''உன் தந்தை என்ன விஞ்ஞானியா?''

''விஞ்ஞானிதான். நுண்ணுயிர் ஆய்வாளர்.
இந்திய விஞ்ஞானிகள் கழகத்தின்
இணைச் செயலாளர்.
என் தாயாருக்குத் தாலி கட்டிவிட்டு,
பாக்டீரியாக்களோடு குடித்தனம்
நடத்தியவர். அந்த ஆராய்ச்சியிலேயே
தன் சொந்த வாழ்க்கை என்று ஒன்று
இல்லாமல் போனவர். நுண்ணுயிர்களால்
இந்த மண் மண்டலத்தையே மாற்ற முடியும்
என்று கனவு கண்டவர்.''

''என்ன செய்ய முடியும்
நுண்ணுயிர்களால்?''

''இன்னும் மனிதனுக்கு ஐம்பூதங்கள்
பற்றிய அறிவு குறைவு திருஞானம்.

இந்த மண்ணையும் காற்றையும் நீரையும்
முழுதாய்ப் பயன்கொள்ளும் ஞானமில்லை
திருஞானம்.
நுண்ணுயிர்களால் ஐம்பூதங்களை வேலை
வாங்கலாம். இந்த வறட்டு பூமி மலட்டு
பூமியாய் மாறிவிடாமல் பாதுகாப்பவை
நுண்ணுயிர்கள்.

இறந்த உடல்களைத் தின்று தீர்த்து,
சுற்றுப்புறத்தைச் சுத்திகரிப்பவை
நுண்ணுயிர்கள்.

செத்த கழிவுகளைச் சிதைப்படுத்திச்
சத்துக்களாய் மாற்றுபவை நுண்ணுயிர்கள்.

திராட்சை ரசத்தை நொதிக்க வைத்து
மதுத்துளிகளாய் மாற்றுபவை
நுண்ணுயிர்கள்.

அந்த நுண்ணுயிர்களால் இந்த பூமியையே
ஒரு சொர்க்கமாய் ஜோடிக்க முடியும்
என்று நம்பினார் என் தந்தை.''

''உன் தந்தை என்ன முழுநேர
விஞ்ஞானியா?''

ஓவியா சிரித்தாள்.

அந்தச் சிரிப்பில் சோகத்தின் துருக்கள்
ஒட்டியிருந்தன.

''விஞ்ஞானம் — சிற்பம் — ஓவியம் — கவிதை —
இசை எதுவாயிருந்தாலும் அது
காதல் மாதிரி திருஞானம் — காதல் மாதிரி.

காதலில் பகுதிநேரம் கிடையாது.

அதுவும் ஓர் அத்வைதம்.

கலந்து போ! கரைந்து போ!
காணாமல் போ! — இதுதான் காதலுக்கும்
கலைக்கும் பொதுவான தேசிய கீதம்.

ஒரு கவிஞன் வார்த்தைகளின்
இடைவெளியில் வாழ்க்கையைத்
தொலைத்துவிட வேண்டும்.

ஓர் ஓவியனின் வர்ணக் கிண்ணத்தில்
சிவப்புக் குழம்பிற்குப் பதிலாய் அவனது
ரத்தமே ஊற்றி வைக்கப்பட்டிருக்க
வேண்டும்.
ஒரு சிற்பி விரல் எது உளி எது என்பதை
மறந்து போக வேண்டும்.

ஓர் இசைக் கலைஞன் சப்தங்களில்
தொலைந்து தொலைந்து மௌனங்களில்
கண்டெடுக்கப்பட வேண்டும்.

தேர்ந்தெடுத்த துறையிலேயே தங்களைத்
தேய்த்துக் கொண்டவர்கள் மட்டும்தாம்
அந்தந்தத் துறைகளின் சிகரங்களைச்
சென்று சேர்ந்திருக்கிறார்கள்.
டார்வின் கதை தெரியுமா...,
டார்வின் கதை?''
''தெரியாது; சொல்!''
''டார்வின், உயிரின ஆராய்ச்சிக்குத் தன்



''எங்கேயோ கேட்கிற விசில் சப்தத்தை வெச்சு, உங்க கதை ஒண்ணு பிரசுரமாகாம திரும்பி வரப் போகுதுன்னு எப்படிங்க சொல்றீங்க?''

''என் கதை திரும்பி வர்ற அன்னிக்கு போஸ்ட்மேன் இந்த மாதிரிதான் உற்சாகமா விசிலடிச்சுக்கிட்டு வருவார்!''

— எஸ். இரமேஷ்.

உயிரையே
ஒப்படைத்துவிட்ட நேரம்... புதிதாய்
ஒரு பூச்சியைப் பார்த்தாலும் அதில்
பிரபஞ்சத்தின் ரகசியம் தேடிப் பித்துப்
பிடித்து அலைந்த காலம்...

ஒரு மரத்தின் பட்டைகளை அவர் உரித்த
போது புதிதாய் இரண்டு வண்டு கண்டார்.

ஒரு வண்டை இடக்கையில் கொண்டார்;
மறு வண்டை வலக்கையில் கொண்டார்.
அப்போதுதான் எப்போதுமே பார்த்திராத
இன்னொரு வண்டு தென்பட்டது.

என்ன செய்வது...? இரண்டு கைகளிலும்
இரண்டு வண்டு. அந்த மூன்றாம்
வண்டு பற்றக் கையில்லை.
டார்வின் என்ன செய்தார் தெரியுமா?''

''என்ன செய்தார்?''

''வலக்கையிலிருந்த வண்டை வாயில்
போட்டுக் கொண்டு மூன்றாம் வண்டையும்
முயன்று பற்றினார்.

ஆர்வம்; அத்தனை ஆர்வம்.

தன்னை மறந்து தன் நாமம் கெடும்
தணியாத தாகம்.

அதுதான் ஒரு கலைஞனை, விஞ்ஞானியை
அழியாத உண்மைகளின் பக்கம்
ஆற்றுப்படுத்துகிறது.

என் தந்தையும் அந்த ஜாதி ஆள்தான்.

மிச்சப்பட்ட சோற்றை மட்டும்
பிச்சைக்காரனுக்குப் போடுகிற ஒரு
குடும்பத் தலைவியைப் போல தன்
ஆராய்ச்சிக்குப் போக மிச்சப்பட்ட
நிமிஷங்களில் மட்டும்தான் வாழ்க்கையின்
சில பருக்கைகளை எங்களுக்கு
அவர் பிச்சையிட்டார்.

அவர் உயிர் கொண்டு வாழ்ந்ததே
ஒரே ஒரு லட்சியத்துக்குத்தான்.''

''என்ன லட்சியம்?''

''கடல்நீரைக் குடிநீராய் மாற்றும்
நுண்ணுயிர்களைக் கண்டுபிடித்துவிட
வேண்டும்.''

''சாத்தியமா ஒவியா...? அது சாத்தியமா?''

''ஏன் சாத்தியமில்லை...? சுரங்கம்
வெட்டுகிறபோது
மீத்தேன் வாயு வெளிப்படுகிறது.

மீத்தேன் வாயு விபத்துக்களை விளைக்க
வல்லது. அந்த மீத்தேன் வாயுவைத்
துடைத்தெடுக்கச் சில நுண்ணுயிர்கள்
ஏவப்படுகின்றன.

அந்த நுண்ணுயிர்கள் மீத்தேன்
வாயுவைக் குடித்து விடுகின்றன;



''எப்பவும் பசிக்கக்கிட்டே இருக்குன்னு சொல்றேன். அதுக்குப் போயி ஊசி போடறீங்களே, டாக்டர்!''

''பின்ன, நான் என்ன சாப்பாடா போட முடியும்?''

— ராஜநிலா.

விபத்துக்களைத் தடுத்து விடுகின்றன.
மீத்தேன் வாயுவைக் குடிக்கும்
நுண்ணுயிர்கள் மாதிரி கடல் நீரில் உப்புச்
சத்தை உறிஞ்சும் நுண்ணுயிர்களைக்
கண்டறிவதே தன் லட்சியம் என்றார்
என் தந்தை.''

''கொண்டாடியிருப்பார்களே...''

''கொண்டாடினார்களே! மனிதகுலவரலாறு
மாறப் போகிறது என்றார்கள்.

இனிமேல் இந்தப் பூமியின்
பாலைவனங்களைப் பழைய பூகோளப்
படங்களில்தான் தேட வேண்டும் என்று
தெரிவித்தார்கள்.

இந்த உலக உருண்டைக்கே பச்சை
வண்ணத்தைப் பரிசளிக்கப் போகிறவன்
ஓர் இந்திய விஞ்ஞானிதான் என்று
சங்கு முழங்கினார்கள்.

ஆனால்...''

''என்ன ஆனால்...?''

''வீணை வியாபாரி வீணையை நேசிப்பது
அதன் சுரங்களுக்காக அல்ல.

விஞ்ஞானிகள் கழகம் என் தந்தையை
நேசித்தது அவர் அறிவை ஆராதித்து அல்ல.

ஒருநாள்... கிழக்கின் முகத்தில்
கரிபூசப்பட்டது. சூரியன் திருடப்பட்டது.
என் தந்தையின் வானம் இருண்டது.

அந்த அஸ்தமனத்திற்குப் பிறகு
என் தந்தையின் தேதி இன்னும்
கிழிக்கப்படவேயில்லை.''

— இன்னும் செல்வேன்

பினாமி பேரில் ஓர் ஆட்சி!



● புதிதாய் வந்த ஆசிரியரைக் கிண்டல் செய்யும் நோக்கத்தோடு, ஒரு குறும்புக்கார மாணவன் கரும் பலகையில், 'புது வாத்தியார் ஒரு முட்டாள்!' என்று எழுதியிருந்தான். ஆசிரியர் மட்டும் சளைத்தவரா? அந்த மாணவன் எழுதியிருந்த வாக்கியத்தை முடிக்காமல், ஆச்சரியக் குறியை அகற்றி, 'மாணவனை இன்று அடையாளம் கண்டு கொண்டார்!' என்று எழுதினார்.


இப்போது கரும்பலகை 'புது வாத்தியார் ஒரு முட்டாள் மாணவனை இன்று அடையாளம் கண்டு கொண்டார்!' என்று சொன்னது. மாணவர்களின் சிரிப்பொலி மறைந்து எல்லோரும் அசடு வழிந்தனர்.

— ப. தங்கவேலு, மைசூர்.

"'சித்திரை பொறந்தாச்சு,' 'வைகாசி வந்தாச்சு,' 'ஆனி போயாச்சு'ன்னு வரிசையா படங்கள் ரிலீஸ் செய்த டைரக்டரை இப்ப எங்கே ஃபீல்டுலே காணோம்?"

"'ஆடி'! அடங்கியாச்சு!"

— எஸ். கோவிந்தன், கிருஷ்ணாபுரம்.





"'ஸ்கூட்டர் வாங்கித் தந்தால் மட்டும் போதாது. பெட்ரோல் செலவிற்கும் பணம் தர வேண்டும்' என்று நான் சொன்னதை உன் அப்பாவிடம் தெரிவித்து விட்டாயா? என்ன பதில் சொன்னார்?"

"ஸ்கூட்டர் ஓட்டறதை மட்டும் ஏன் பாக்கி வைக்கணும்? அதையும் நானே செய்துடறேன்னார்!"

— எஸ். சுந்தராஜ், பாளையங்கோட்டை.



"நான் சின்ன வயசில் சிரமப்பட்டு ரொம்ப தூரம் நடந்து போய்ப் பாட்டுக் கத்துக்கிட்டேன்!"

"அதானே பார்த்தேன். பாட்டுக்கும் உங்களுக்கும் ஏன் ரொம்ப தூரம்னு இப்பப் புரிஞ்சுப் போச்சு."

— வெங்கட், மேட்டூர் டேம் – 1.

● பஸ்ஸிலிருந்து இறங்குபவர்களிடம் டிக்கெட்டுகளைச் சோதித்துக் கொண்டிருந்தார் பரிசோதகர். என் நண்பன் நைசாக நழுவப் பார்த்தான்.


சிரிக்க வையுங்கள்; சிங்கப்பூர் செல்லுங்கள்!



"ஹலோ! டிக்கெட்?" என்று பரிசோதகர் கேட்க, நண்பன் முகத்தில் பீதியும் பயமும் அப்ப, விறுட்டென்று நடக்க ஆரம்பித்தான். பரிசோதகர் பின் தொடர, நடை ஓட்டமானது. துரத்தி, இறுதியில் பிடித்தே விட்டார். "டிக்கெட் எங்கேடா?" என்று அதட்டினார். நண்பன் பையிலிருந்து டிக்கெட்டை அமைதியாக எடுத்துக் கொடுத்தான். பரிசோதகர் முகத்தில் அசடும், கோபமும் சம விகிதத்தில்.

குறும்புக்கார நண்பன்!

— க. மாதவன், மதுரை — 11.



● இண்டர்வியூவிற்காகச் சில இளைஞர்கள் காத்திருந்தார்கள்.

ஒருவன்: என்ன ஸார்! நீங்கள் மண்டல் கமிஷனா?

மற்றவன்: இல்லை! நான் மண்டல் ஒமிஷன் (omission)!!

— வெ. முத்துகிருஷ்ணன், சென்னை — 4.

● கல்லூரி இறுதி ஆண்டில் டூர் சென்றிருந்தோம். இரவில் பம்பாய் வி.டி. ஸ்டேஷனில் நுழைந்தவுடன்



என் நண்பன், "பாம்பே வந்திருச்சு! பாம்பே, பாம்பே" (BOMBAY) என்று கத்தினான். உடனே எங்கள் பேராசிரியர், "Be Silent" என்று அதட்டினார். உடனே அவன், "ஆம்பே, ஆம்பே" (OMBAY) என்று கூற, சிரிப்புக்குக் கேட்கவா வேண்டும்!

— செ. கார்த்திகேயன், இராசபாளையம்.



"ஏண்டா! நீ பாட்டுக்குப் பினாமி பேர்ல ஏகப்பட்ட தொழில் பண்றியே, தப்பில்லே?"

"ஆமா... பினாமி பேர்ல ஆட்சியே நடக்கும் போது இது என்ன ஜுஜுபி!"


— பா. து. பிரகாஷ், தஞ்சை.



"உனக்கு மட்டும் எப்படிடா உங்கப்பா புரோகிரஸ் ரிப்போர்ட்டை நீட்டின உடனே கையெழுத்துப் போடறார்?"

"பழக்க தோஷம்தான். "புராகிரஸ் ரிப்போர்ட்" மேலேயே ஒரு பத்து ரூபா நோட்டை வைச்சிக் கொடுத்துடுவேன்!"

— என். சிகாமணி, சென்னை — 61.



தேன் நிலவும் அதன் பின்பும் — 3

மனைவியைக் குறை கூறிச் சபேசன் பேசுவதைக் கேட்டுக் கொண்ட Marriage Counsellor, தனிமையில் பூரணியின் வாதத்தையும் கேட்டார். பூரணி சொன்னாள்:

"கல்யாணமான நாள் முதலாகக் கூட்டுக் குடும்பத்தில்தான் வாழ்ந்தோம். அவருக்குப் பத்திரிகை அலுவலக வேலை. பெரிய குடும்பத்தைப் பராமரிக்க இரவு பகலாக உழைப்பார். சதா வேலை; வேலை, வேலைதான். வயதான மாமனார் மாமியார் எனக்கு. அடுத்தடுத்து நான்கு குழந்தைகள் பிறந்த போதும் அவர்களுடைய மடி ஆசாரத்துக் கெல்லாம் இம்மி பிசகாமல் ஈடுகொடுத்து, அவர்களுக்குப் பணிவிடை செய்து, என் கணவரைக் கவனித்துக் கொண்டதோடு குழந்தைகளைத் தனியொருத்தியாக வளர்த்து இன்றைக்கு அவர்கள் டாக்டர், இஞ்ஜினியர், சார்டர்ட் அக்கவுண்டன்ட், உயர் அதிகாரி என்று ஜொலிக்க வைத்திருக்கிறேன். இவ்வளவிலும் ஒரு சுண்டு விரல் அசக்கி எனக்கு உதவாத கணவர் இப்போது காய்கறி வாங்கி வருகிறேன் என்கிறார். அந்தக் காலத்தில் அதே உதவியை நான் கேட்ட போது பேப்பர் படித்துக் கொண்டே, சாயங்காலம் வாங்கி வருகிறேன் என்பார். இப்போது எனக்குள்ள கொஞ்சம் வேலையையும் அவர் செய்து எனக்கு ஒன்றுமில்லாமல் செய்துவிட்டால் நான் சுவரைப் பார்த்

துக் கொண்டா உட்கார்ந்திருக்க முடியும்! சினிமாவாம் சினிமா! அந்தக் காலத்தில் மாமனார் மாமியாருடன் அருமையான காலட்சேபம் கேட்ட காதால் கர்ணகடூர டூயட்கள் கேட்க முடியுமா? என்னால் இந்தப் புதுத் தொல்லைக்கெல்லாம் ஈடு கொடுக்க முடியாது.''

தனித்தனியே இருவரிடமும் பேசிய பிறகு இருவரையும் ஒன்றாக அமர்த்தி, இருவருக்கும் சேர்த்து டாக்டர் லக்ஷ்மி விஜயகுமார், டாக்டர் விஜயகுமார் வழங்கிய ஆலோசனை:

''நீங்கள் நினைப்பது போல் உங்கள் தாம்பத்ய வாழ்வில் புதிதாக முளைத்துள்ள பிரச்னையில்லை இது... ஆரம்பம் முதலே உங்களுக்குள் பிரச்னைகள் இருந்திருக்கின்றன. ஆனால் அவற்றை அடையாளம் கண்டு, ஒரு பொருட்டாக்கிப் போராடும் அளவிற்கு உங்கள் இருவருக்குமே நேரம் இருந்ததில்லை. அலுவலகத்திலும் வீட்டிலும் முழு மூச்சுடன் ஈடுபட்டுக் குடும்பப் பராமரிப்பில் ஆழ்ந்திருந்தீர்கள். நீங்கள் ஒரே வீட்டில் குடியிருந்தாலும் உண்மையில் சேர்ந்து வாழ்க்கை நடத்தவில்லை. இப்போது குழந்தைகள் எல்லோரும் வெளியேறி விட்டார்கள். நீங்கள் தனியாக இருக்கிறீர்கள். வேறு வேலைகள், சிந்தனைகள் இல்லாததால் ஒருவரையொருவர் இனம் காண்கிறீர்கள். இதைத்தான் எங்கள் மருத்துவப் பரிபாஷையில் **empty nest syndrome** என்று சொல்வோம்.

சரி! உங்களுடைய பிரச்னையை எப்படித் தீர்ப்பது?

இரண்டு விஷயங்களை நினைவில் இருத்திச் செயல்படுங்கள்.

ஒன்று: புதுமணத் தம்பதிகளைப் போல் வாழ்க்கையைத் துவக்குங்கள். பழைய தவறுகளை நினைவுபடுத்திக் கொண்டு சுட்டிக் காட்டுவதோ குறைப்பட்டுக் கொள்வதோ கூடாது.

இரண்டு: ஒருவரது கோரிக்கை மற்றவரால் மறுக்கப்பட்டால், உடனே அந்த மறுப்பை நிராகரிப்பின் அடையாளமாகக் கருதாதீர்கள். மறுப்புக்கு என்ன காரணம் இருக்கக்கூடும் என்று ஆராய்ந்து தெரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். 'என்னுடன் சினிமாவுக்கு வர மறுக்கிறாள் — அவளுக்கு என்னைப் பிடிக்கவில்லை' என்று முடிவு கட்டாதீர்கள். அவள் இன்று சோர்வாக இருப்பாளோ, அல்லது வேறு எங்கேனும் போக விரும்புவாளோ என்று சிந்தியுங்கள்.

நீங்கள் இருவர் மட்டுமே தனியே இருந்து பழக்கப்படாததால் இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு திடீரென்று ஏற்பட்டுள்ள இந்த நிலை ஒருவரை ஒருவர் சந்தேகத்துடனேயே பார்க்கச் செய்கிறது. பரஸ்பரம் ஒவ்வொரு சொல்லையும் செயலையும் சந்தேகத்துடன் பார்க்காமல் நேசத்துடன் கவனித்தால் எல்லாம் சரியாகப் போய் விடும்.''

பேட்டி: **எஸ். ஆர்.**

அடுத்த இதழில்...

திரைப்பட விழா:
வர்த்தகம் பெருக்குமா? பணம் விரயமாக்குமா?
— சூடான விவாதம்





* கலீதா

* ஹஸீனா



வங்கதேசம் தங்கமாகுமா?

மக்கள்: ஜனத்தொகை பத்துக் கோடி. கட்சிகள் எண்பது!

ஹஸீனா: தேசத் தந்தை என்று அழைக்கப்படும் ஷேக் முஜிபுர் ரஹ்மானின் மகள். இவரது கட்சி அவாமி லீக். இவர் தலைமையில் பதினைந்து கட்சிகள் கூட்டணி.

கலீதா: முஜிபுர் ரஹ்மான் மறைவுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர் ஜியா – உர் – ரஹ்மான். ராணுவப் புரட்சியில் கொல்லப்பட்ட இவரது மனைவி கலீதா. கணவர் ஜியா தொடங்கிய கட்சியான பங்களா தேஷ் தேசியக் கட்சியின் இன்றைய தலைவர் என்பதோடு ஏழு கட்சிக் கூட்டணியின் தலைவர்.

சித்திக்: ஷேக் முஜிபுர் ரஹ்மான் கொல்லப்பட்ட போது இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். வங்கப்புலி என்று அழைக்கப்படும் இவர். இப்போது மீண்டும் தாயகம் திரும்பியிருக்கிறார். பிரும்மாண்ட வரவேற்பு. இதனால் ஹஸீனாவின் அவாமி லீகுக்குக் கூடுதல் பலம்.

வஹீதுல் ஹக்: எர்ஷாத்தின் அமைச்சரவையில் நிதி அமைச்சர். ''நாட்டின் பொருளாதாரத்துக்கு முடக்கு வாதம் பிடித்துக் கொண்டிருக்கிறது'' என்று கூறியவர்.

ஷகபுதீன் அகமத்: தலைமை நீதிபதி. பதவி விலகும் போது ஆட்சிப் பொறுப்பை இவரிடம்தான் தந்தார் எர்ஷாத். இடைக்கால அரசின் அதிபர். தொண்ணூறு நாட்களுக்குள் பாரபட்சமற்ற தேர்தல் நடத்துவதாக அறிவித்திருக்கிறார்.

டாக்கா பல்கலைக் கழக மாணவர்கள்: எர்ஷாத்தை எதிர்த்துப் புரட்சி செய்ததில் முக்கிய பங்கு வகித்தவர்கள். இவர்கள் விரும்பிப் பாடுவது தாகூரின் கவிதைகளையும் நஸ்ருல் இஸ்லாமின் கவிதைகளையும்.

தேசிய கீதம்: தாகூர் எழுதிய அமார் சோனார் பங்களா... தங்கமான வங்கம் என்று பொருள்.

எர்ஷாத்: 61 வயதான ராணுவ தளபதி. 1982இல் ஆட்சியைக் கைப்பற்றி, ஒன்பது



• எர்ஷாத்

வருஷங்களாக ஆண்டு வந்தார். பத்தொன்பது வயதான பங்களா தேஷில் மிக அதிக காலம் ஆண்டவர் இவரே. எதிர்க் கட்சிகளிடையே ஒற்றுமை இல்லாதது இவர் ஆட்சி நீடிக்க உதவியது. சுகபோக வாழ்க்கை நடத்தினார். இவர் மனைவி ரௌஷன் இஷ்டத்துக்கு வாரி இறைத்தார். தவிர இளம் பெண் ஒருத்தியை மணந்த எர்ஷாத், அவளுக்காக நியூயார்க்கில் இல்லம் வாங்கி, தாம் தூம் என்று அரசுப் பணத்தைச் செலவிட்டார். இப்போது எர்ஷாத் குடும்பம் வீட்டுச் சிறையில்.

எதிர்கால அரசியல்: ஹஸீனாவையும் கலீதாவையும் ஒருவருக்கு ஒருவர் ஒத்துழைப்புத் தருமாறு இணைத்து விட்டால், பங்களா தேஷின் எதிர் காலம் நிஜமாகவே பொன் மயமாகிவிடும் என்பது பல அரசியல்வாதிகளின் ஆசை. ஆனால் இந்த ஆசை நிராசைதான் என்பது அனுபவஸ்தர்களின் கணிப்பு.

— வி. பி.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.

நம் பாரதம் உலகிலேயே சிறந்து விளங்க

அரசுக்கு அதிக வருமான வரி, விற்பனை வரி கிடைக்கவும், வரி செலுத்துவோர்களை ஊக்குவிக்க வேண்டும்.

அத்துடன் மறைந்த தலைவர்களின் ஆசி அவசியம்.

விற்பனை வரி வருமானவரி செலுத்துகையில் 25%

கீழ்க்கண்ட விதத்தில் தர்மம் செய்ய அனுமதியளித்தல்



1 வரி செலுத்துவதில் 25%ஐ தன் சமூகத்தைத் தவிற மற்ற சமூகத்துச் செய்ய வேண்டும்.

2 தலைவர்கள் இறந்த திதியில் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு கைத்தறி வேஷ்டி, சேலை கொடுக்க வேண்டும்.

3 நலிவுற்ற பெண்களுக்கு கல்யாணத்திற்கு தொகை கொடுக்க வேண்டும்.

4 தேவாலயங்களில் மலிவு விலையில் அன்னம் விற்பனை செய்வது.

5 செருப்பு குடைகளை கொடுக்க வேண்டும்.

பலன்:-

1 நாட்டின் வறுமை ஒழியும்.

2 நல்லமழை பெய்யும்.

3 வேலையில்லாத்திண்டாட்டம் குறையும்.

4 நாட்டின் ஒற்றுமை வளரும்.

5 நல்லோர்களின் ஆசி கிடைக்கும்.

6 அரசிற்கு அதிக வருமானம் வரும்.

முடிந்தால்
கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி
நல்லோர்களுக்கு விநியோகம் செய்யவும்.



திருமண வைபவங்களுக்கு:
சீர்முறுக்கு,
சீர் அதிரசம்,
முள்ளுத்தேன்குழல்,
சீர் தேன்குழல்,
திரட்டுப்பால், பருப்பு
தேங்காய் வகைகள்
ஆர்டரின் பேரில்
செய்து தரப்படும்

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24-2-வது மெயின் ரோடு,
காந்தி நகர் அடையாறு
சென்னை - 600 020
போன்: 412557.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

நினைவிருக்கட்டும், ஊட்டச்சத்துமிக்க சமநிலை உணவு இல்லையேல், உங்கள் குழந்தை சுறுசுறுப்பாக விளங்கத்தேவையான 'சரி'யான கலோரிகளைப் பெறமுடியாது.


"ஆகவேதான் என் குழந்தைக்கு செரிலாக் தருகிறேன்."

'சரி'யான கலோரிகள் என்றால் என்ன?
நாம் உண்ணும் உணவில் புரதங்கள், கார்போஹைட்ரேட்டுகள் மற்றும் கொழுப்புச் சத்துகள் சரியான சமநிலையில் இருந்து, அவற்றிலிருந்து கிடைக்கும் கலோரிகளுக்குத்தான் 'சரி'யான கலோரிகள் என்று டாக்டர்கள் கூறுகின்றனர். இளம் குழந்தைகள் நன்கு வளரவும் சுறுசுறுப்பாக விளங்கவும் இந்த மூன்று முக்கியமான உணவுச்சத்துகள் அவசியம்.
எனவே, உங்கள் செல்லக் குழந்தை 'சரி'யான கலோரிகளைப் பெறுவதற்கு, நீங்கள் ஊட்டச்சத்துமிக்க சமநிலை உணவை அதற்கு அளிக்கவேண்டும்.
ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வேளை உணவிலும் இவை தேவை.
ஆனால், குழந்தைகளுக்கு வழக்கமான உணவுகளைக் கொடுத்து, கலோரிகளை சமனிப்பது பெரும்பாலான தாய்மார்களுக்கு எளிதல்ல.
இதற்குப் பரிகாரம் உண்டா?
உண்டு. செரிலாக்—ஊட்டச்சத்துமிக்க சமநிலை திடஉணவு. உங்கள் குழந்தைக்கு பால் மட்டுமே போதாதபோது, அதன் நான்காவது மாதம் முதலே செரிலாக் தாருங்கள்.
செரிலாக்கில் புரதங்கள், கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புச் சத்துகள், வைட்டமின்கள், இரும்புச் சத்து, மற்றும் கால்ஷியம் அடங்கியுள்ளன. ஆகையால், உங்கள் குழந்தை 'சரி'யான கலோரிகளைப் பெற்று, சுறுசுறுப்புடன் வளரும்; சுவையான செரிலாக்கை ருசித்துச் சாப்பிடும்.
எனவே, செரிலாக்கில் அடங்கியுள்ள ஊட்டச்சத்துமிக்க சமநிலை உணவின் நற்பலன்களை உங்கள் குழந்தைக்குக் கொடுங்கள். குழந்தைக்கு 6 மாதம் ஆனதும், செரிலாக்கைத் தவிர விட்-ஆப்பிள், விட்-ஆரஞ்சு மற்றும் விட்-வெஜிடேபிளின் நற்பலன்களையும் அளிக்கவும்.

பேக்கின் மீதுள்ள விதிமுறைகளைப் பின்பற்றுக.

இலவசம்: செரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: செரிலாக், தபால் பெட்டி எண். 21, புது தில்லி-110028.





உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக் அனுகூலம்.

Mudra DNIL 0018 Tam.